OFFICE OF THE REGISTRAR OF BOOKS
APR 1925
MADRAS

நூதன

# ஏழாம் வாசக புஸ்தகம்

ACC - TAML
00287

(எட்டாம் வகுப்பு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1925
MADRAS

மேரியரசி கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்

கா. நமச்சிவாய முதலியார்

எழுதியது

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1925

ரிஜிஸ்தர் செய்தது] [விலை 8 அணா

Printed at
The 'Caxton Press'
Madras

77696
P31-8
N25

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் மொழி - I | 1 |
| 2. | தமிழ் மொழி - II | 2 |
| 3. | பொற்கைப் பாண்டியன் | 4 |
| 4. | அருணாசலக் கவிராசர் | 10 |
| 5. | சுகமாக வாழ்தல் | 12 |
| 6. | பூதக்கண்ணாடியின் உபயோகங்கள் | 32 |
| 7. | ஜீவ வதை | 41 |
| 8. | சேக்கிழார் | 55 |
| 9. | குடும்பவாழ்க்கையும் கடமையும் | 61 |
| 10. | விஷ ஜுரம் | 70 |
| 11. | நீலகிரித் தொதவர்கள் | 80 |
| 12. | சூரிய பிம்ப லட்சணம் | 96 |
| 13. | இராமாநுஜர் | 102 |
| 14. | யானையைக் கண்ட குருடர் | 108 |
| 15. | நீதிநெறி விளக்கம் | 112 |



# நூதன

# ஏழாம் வாசக புஸ்தகம்

## 1. தமிழ் மொழி—I

காசியி னின்றும் போந்து கம்பர்தாம் அருளப்பெற்று
மாசிலாக் கச்சி மூதூர் மன்னிவீற் றிருந்து பூமேல்
ஆசிலாத் தமிழ்ப ரப்பி அருந்தமிழ்க் குரவு பூண்ட
தேசிகன்மலயவெற்பிற் குறுமுனிதிருத்தாள்போற்றி.

வடமொழியைப் பாணினிக்கு
வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை
உலகமெலாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார்
கொல்லேற்றுப் பாகரெனில்
கடல்வரைப்பின் இதன்பெருமை
யாவரே கணித்தறிவார்.

கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ.

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை யழைத்ததும் என்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

---

## 2. தமிழ் மொழி—II

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். இதனை, 'தமிழ் தழீஇய சாயலவர்' என்னுந் திருத்தக்கதேவர் திருவாக்கும், 'வண்டு தமிழ்ப்பாட் டிசைக்குந் தாமரையே' என்னுங் கம்பர் திருவாக்கும் தெளிவாக்கும். உண்மை இவ்வாறு இருக்க, சிலர், [1] தமி என்னுஞ் சொல், ஈற்றில் ழகரமெய் பெற்றுத் தமிழ் என்றாயிற்று என்பர். சிலர், தமிழ்மொழியின் மெய்யெழுத்துக்களின் பிரிவாகிய வல்லினம் மெல்லினம் இடையினம் என்னும் மூன்று பகுதிகளில் ஒவ்வோர் எழுத்தை முறையே பெற்றுத் [2] தமிழ் என்றாயிற்று என்பர். சிலர், [3] தமிழு என்பது சரியான சொல், அது தமிழ் மொழியின் உயிரெழுத்துக்களில் முதலில் உள்ள அ, இ, உ என்னும் எழுத்துக்களை ஆதாரமாகக் கொண்டதாம், அவற்றுள் ஈற்றிலுள்ள உகரம் கெட்டது என்பர். இவை யெல்லாம் உத்தி-வாதமே யன்றி, உண்மைக் கூற்றுக்கள் அல்ல என்பது உய்த்துணர்வார்க்கு நன்கு புலனாகும்.

---

1 - தமி - தனி, உயர்வு, உயர்வானமொழி.

2 - தமிழ் : த - வல்லினம், மி - மெல்லினம், ழ் - இடையினம்.

3 - தமிழு : த - அ; மி - இ; ழு - உ.

இனி, திராவிடம் என்னும் சம்ஸ்கிருத வார்த்தை, பற்பல பிறப்புக்கள் பிறந்து, தமிழ் என்று ஆயிற்று என்பர் ஒரு சாரார். அப் பிறப்புக்களின் வழி — திராவிடம், திரவிடம், திரமிடம், திரமிளம், திரமிள், தமிள், தமிழ் என்பனவாம். இந்தக் கொள்கை உண்மையாயின், ஆரியர் தமிழ் நாட்டிற்கு வந்த பிறகே தமிழ்மொழிக்கு ஒரு பெயர் அமைந்தது என்பது ஏற்படும். முதல் முதல் தமிழ்நாட்டிற்கு வந்த ஆரியர் அகத்தியனாரே என்பது இதுகாறும் நாம் அறிந்துள்ள உண்மை. அவர் தமிழ்நாட்டிற்கு வந்து, அக்காலத்திலிருந்த அரசர்களது ஆதரவு பெற்று, தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவி, முதற்கண் அகத்தியம் என்னும் அரிய இலக்கணத்தைச் செய்தனர் என்பதும் நாம் கண்ட மற்றோர் உண்மை. அவ்வகத்தியனாரே,

'இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றாம்
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்'

எனத் தம் நூலுள் கூறினர் எனச் சூத்திரம் ஒன்று வழங்குகின்றது. இதனை ஆராய்ந்தால், அகத்தியனார் இந்நாட்டிற்கு வருவதன் முன்னரே தமிழ்மொழி இந்நாட்டில் வழங்கியிருந்தது என்பதும், அது சிறந்த இலக்கியங்களைக் கொண்டிருந்தது என்பதும் புலனாகும். ஆகவே, திராவிடம் என்னும் வடசொல் பல பிறப்புக்கள் பிறந்து தமிழ் என்றாயிற்று என்பார் கொள்கை எவர்க்கும் வியப்பை விளைக்குமன்றே!

இனி, தமிழ் என்பது தமிழே; அதற்கு இனிமை என்பதே பொருள். ஆதலின், தமிழ்மொழி என்ப-

தற்கு இனியமொழி என்று பொருள் கொள்ளுவதே அமைவுடையது. தமிழ்மொழி ஒரு தனிமொழி. அது சம்ஸ்கிருத பாஷையோடு கலவாமல் தனித்து இயங்கிய காலம் ஒன்று இருந்தது. பின்னர், அது தெலுங்கு மலையாளம் கன்னடம் துளு ஆகிய மொழி-களுக்குத் தாய்மொழியாக விளங்குவதாயிற்று. தமிழ்-மொழியாகிய மாது, தெலுங்கு முதலிய பல குழந்தை-களைப் பெற்றும், தன் இளமை மாறாது விளங்கும் தெய்வத் தன்மை வாய்ந்தவள். இத்தகைய சிறப்-புக்கள் வாய்ந்த தமிழ்மொழி நமக்குத் தாய்மொழி-யாக வாய்க்கப் பெற்றது நாம் செய்த தவப்பயனே யன்றோ!

## 3. பொற்கைப் பாண்டியன்

பண்டைக் காலத்தில் பாண்டி மண்டலத்தை அடிப்-படுத்து ஆண்டு வந்த பார்த்திபன் ஒருவனிருந்தான். அவன் மதுரைமா நகரைத் தன் தலைநகராகக்கொண்டு செங்கோல் செலுத்தி வந்தனன். அம்மன்னன் தன் குடிகளைத் தன் கண்ணேபோல் கருதிக் காத்துவரு-வானுனன்.

அந்நாளில், மதுரை நகரில் மறையவன் ஒருவன் வாழ்ந்திருந்தனன். அவன் தன் மனத்துக்கியைந்த மனைவியோடுங்கூடி, இல்லறத்தை இனிது நடத்தி இன்புற்றிருந்தான். அவர்கள், செல்வம் அனைத்தும் சிறக்க அடைந்திருந்தும், பிள்ளைப்பேறு ஒன்று-மட்டும் பெறுதற்கின்றி, பெரிதும் வருந்துவாராயினர்.

அந்தணன் ஒரு நாள் இரவு தன் மனைவியை நோக்கி, 'பெண்ணே, நாம் இறைவனருளால் எல்லாச் செல்வமும் எய்தப் பெற்றும், மகப்பேறு ஒன்று-மட்டும் வாய்க்கப் பெற்றோமில்லை. "பிள்ளைப்பேறு இல்லாதவர்க்கு இம்மைப்பயனும் இல்லை, மறுமைப் பயனும் இல்லை'' என்பர் பெரியோர்; இதற்கு நாம் செய்வது என்னே!' என்று வருந்திக் கூறினான்.

அதைக் கேட்ட பார்ப்பனி, 'என் ஆருயிர்த் தலைவரே, கடவுள் நமக்கு எல்லாம் அளித்தும், இந்தக் குறையைமட்டும் ஏனோ நீக்கவில்லை! தானம் செய்-தோம், தருமமும் புரிந்தோம்; நோன்புகள் பலவற்-றையும் நோற்றோம்; இனி நாம் இதன்பொருட்டுச் செய்யத் தக்கது யாது! அவனருள் எப்படியோ அப்-படியே நடக்கும் என்றெண்ணி, அமைந்திருத்தலே தக்கது' என்று சொல்லி, தன் தலைவனைத் தேற்றினாள்.

அந்தணன், 'பெண்ணே, நீ சொல்லுவது உண்-மையே; ஆயினும், நாம் முயற்சியைக் கைவிடலாகாது; என் மனத்தில் இன்று ஒருவழி தோன்றியிருக்கிறது. அது யாதெனில், காசியாத்திரை செய்வதாம். ஸ்தல யாத்திரையும் தீர்த்தயாத்திரையும் செய்தால், கருதிய கருமம் கைகூடும் என்று நூல்கள் கூறுகின்றன; ஆதலால், யான் காசியாத்திரை செய்து, கங்கையிற் படிந்து, கருமங்கள் முடித்து வருகிறேன்' என்றான். எனலும், பார்ப்பனி, 'அப்படியாயின் தேவரீர்மட்டும் செல்லத் துணிவது சரியன்று; யானும் உம்முடன் வருவேன்' என்று உரைத்தாள்.

அது கேட்ட மறையவன், 'பெண்ணே, காசிக்குப் போய் வருவது கஷ்டமான காரியமாகும்; காடும்

மலையும் கடக்க வேண்டும்; காட்டாறுகளைத் தாண்ட வேண்டும்; ஜீவநதிகள் பலவற்றைத் தெப்பத்திலேறிக் கடந்து செல்ல வேண்டும். ஆதலால், நான்மட்டும் தனியே சென்று விசுவநாதரைத் தரிசித்து வருவதே உத்தமம் எனத் தோன்றுகிறது' என்று தெளிவுபடக் கூறினான்.

அவ்விருவரும் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், பாண்டியர் பெருமான் நகரிசோதனை செய்யும்பொருட்டு, நள்ளிரவில் புறப்பட்டு, அத் தெருவழியே சென்றுகொண் டிருந்தான். அப்போது அந்தணன் பேசிய பேச்சு அரசன் செவியிற் பட்டது. படவே, மன்னன் அவ் வீட்டின் வாயிற்படியண்டை சென்று நின்று, அவர்கள் பேசுவதை கருத்துடன் கேட்பானானான்.

அப்போது அப் பார்ப்பனி, தன் மணாளனை நோக்கி, 'அந்தணாள, நீர் சொல்லுவதைக் கேட்டால், காசியாத்திரை கஷ்டமான யாத்திரையே என்பது தெளிவாகின்றது. ஆயினும், தாம் சென்று வருந்தனையும் யான் இங்கு ஒன்றியாக எப்படியிருப்பேன்?' என்று கேட்டனள்.

அதற்கு அவ்வந்தணன், 'பெண்ணே, பேதைமையால் எண்ணாமற் பேசிவிட்டனை; இந்த நகரில், இந்த அரசன் ஆட்சியில், மாந்தர்க்கு அச்சம் என்பதும் உண்டோ! நம் மன்னவன் நம்மிடத்து அன்னையினும் பதின்மடங்கு அதிகமான அன்பு பாராட்டி ஆண்டு வருவதை அறியாயோ! பெண் பேதாய், இனி இவ்வாறு கருதாதே' என்று வற்புறுத்திக்

கூறினன். அதன்மேல், அம்மாது, 'நான் ஆராயாது கூறிவிட்டேன், அந்தணரே, பொறுத்தருள்க' என்று பணிந்து மொழிந்தனள். பின்பு அம்மறையவன் தன் மனைவியின் உடன்பாடு பெற்றுக்கொண்டு, காசியாத்திரையைக் குறித்து மேன்மேலும் பேசுவானுனன்.

காவலன், அந்தணன் கூறிய கட்டுரையைக் கேட்டு, தன் மனத்தில் எழுந்த களிப்பென்னுங் கடலுக்குக் கரை காணுதவனுகி, 'என்னே, நம் ஆட்சியின் திறம்! இதைக் காட்டிலும் மன்னவன் பெறத் தக்க பேறு வேறென்றும் உளதோ! இத்தகைய சிறப்பை நாம் எய்துதற்கு நம் அமைச்சரது ஆண்மையும், ஒற்றரது ஒழுக்கமும் அல்லவோ காரணம்' என்று நினைத்துக்கொண்டே நடந்து, தன் அரண்மனையை அடைந்தான்.

மறுநாட் காலையில் அந்தணன் காசியம்பதிக்குச் செல்லப் புறப்பட்டான். அன்றுமுதல் மன்னவன் நாள்தோறும் நள்ளிரவில் நகரிசோதனைக்குச் செல்லும்போது, அவ்வந்தணன் அகத்தண்டை வந்து, நெடும் பொழுது தங்கியிருந்து, யாதொரு தீங்கும் நேராவண்ணம் பாதுகாத்துக்கொண்டிருந்து, விடியற் காலத்தில் தன் அரண்மனையை அடைவானுயிருந்தான். அதுவுமன்றி அவ்வப்போது உணவுப்பொருள் முதலியவற்றை அவ்வொரு வீட்டின் பொருட்டு, அத் தெருவிலுள்ள அந்தணர் அனைவர்க்கும் கொடுக்குமாறு கட்டளையிட்டிருந்தான்.

இப்படி நாட்கள் பல சென்றன. ஒரு நாள் இரவு, மன்னன் தன் வழக்கமேபோல் நள்ளிரவில் அவ்வீட்டண்டை வந்து நிற்கும்போது, அவ் வீட்டிற்-

குள் இருவர் மகிழ்ந்து பேசும் அரவம் கேட்டது. அதைக் கேட்டதும் அரசற்கு ஐயம் பிறந்தது. பிறக்கவே, மன்னன், 'என்ன இது! என்றும் இல்லாத பேச்சு இன்று ஏற்பட்டிருக்கிறது! இதன் உண்மையை ஆராயவேண்டும்; நாம் கதவைத் தட்டுவோம், கணவனுயிருப்பின் 'யார்?' என்று கேட்டுக்கொண்டு, வெளியே வருவான்; அன்னியனுயின் அடங்கியிருப்பான்' என்று கருதி, கதவைத் தட்டினன். தட்டவே, அந்தணன் பெரிதும் ஐயமுற்று, ஆவேசங்கொண்டு, தன் மனைவியை நோக்கி, 'அடீ, இப்போது இங்கே கதவைத் தட்டியவன் யாவன்? உன்மேல் எனக்குச் சந்தேகம் உண்டாகிறது' என்று உருத்துக் கூறிக்கொண்டே ஓடிவந்தான்.

அதைக் கேட்டலும் அரசன் திடுக்கிட்டான்; 'என்னே, ஆராயாமற் செய்துவிட்டோம்! நம்முடைய செய்கையால் அந்தணனுக்குத் தன் மனைவியின்மேல் ஐயம் பிறந்துவிட்டது! இதனைத் தீர்ப்பது எப்படி!' என்று எண்ணி, விரைந்து ஓடி, அண்டையிலிருந்த வீடுகளின் கதவுகளையுந் தட்டிக்கொண்டே ஓடிச்சென்று ஒருவருங்காணுமல் அரண்மனையை அடைந்து வருத்தமுற்று வாடியிருந்தார்.

அர்த்தராத்திரியில் தத்தம் கதவங்கள் தட்டப்படவே, அவ்வவ் வீட்டில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அந்தணர் பலரும் அலறியெழுந்து ஓடிவந்து, கதவைத் திறந்து கூச்சலிட்டுத் தெருவில் நின்றனர். பின்பு அனைவரும் ஒன்றுகூடி, 'இது யாதோ மாயச்செய்கை, தெரிந்திலது, இம்மன்னவன் ஆட்சியில் இவ்வாருன இடுக்கண் நேர்ந்ததை இதுகாறும் நாம் கண்டும்

அறியோம், கேட்டும் அறியோம். புதுமை! புதுமை! இதனை இன்னே அரசற்கு அறிவித்தல் வேண்டும்' என்று விரைந்து ஓடிச் சென்று, ஆராய்ச்சி மணியைப் பிடித்து அடித்தனர்.

வேந்தன் விரைந்து நடந்து வெளியே வந்தான், வந்து, அந்தணர் பலர் கூடி நின்ற கோலத்தைக் கண்டு, 'ஐயன்மீர், நீவிர் இவ்வாறு சேர்ந்து வருதற்கு நேர்ந்த செய்தி யாது?' என்று கேட்டான். உடனே, அவருள் வயது முதிர்ந்த வேதியர் ஒருவர், 'அரசே, என்றுங் கண்டறியோம், என்றுங் கேட்டறியோம், உமது ஆட்சியில் அச்சம் என்பதை அணுவளவும் அறியாதிருந்தோம்! அர்த்த ராத்திரியில் கழுதோ, அன்றிக் கள்வரோ வந்து, எம்முடைய கதவங்களைத் தட்டி, எங்களை அச்சுறுத்திச் சென்றது. எங்களுக்கு ஏதும் புலப்படாமையால், எழுந்திருந்து ஒன்றுகூடி ஓடிவந்தோம்' என்றனர்.

அதுகேட்ட அரசன் பெரிதுங் கவலையுற்று, 'அந்தணீர், வருந்தாதீர்; அமைதியுடன் இருந்து யான் கேட்கும் வினவுக்கு விடையருளுங்கள். உங்களுக்கு இவ்வாறு அச்சத்தைவிளைத்தவன் அகப்படுவானாயின், அவனுக்குரிய தண்டனையாது? கூறுமின்' என்றான். அதற்கு அந்தணர், 'அரசே, அத்தகைய கள்வனது கையை வாள்கொண்டு வெட்டி யெறிதலே தக்க தண்டனையாகும்' என்றனர். அதன்மேல் வேந்தன் வேதியரைநோக்கி, 'உமக்கு இத்தகைய அச்சத்தையும் அல்லலையும் விளைத்தது கழுதும் அன்று; கள்ளரும் அல்லர். இந்தக் கையே யாகும்' என்று கூறி, நடந்த செய்திகளை அடிமுதல் முடிவுகாறும் விளங்க விரித்து

உரைத்து, உடனே தன் உடைவாளை யுருவி, தன் கையை வெட்டிக் கொண்டான். கண்டார் அந்தணர், 'ஆகா, என்னே, என்னே' என்று கதறிக் கண்ணீர் உகுத்தனர். பின்னர் கடவுளருளால் அந்தக் கை வளர்ந்தோங்கி முழுவுருவம் பெற்று, பொற் கையாக பொலிந்து விளங்கிற்று. அதுமுதல் அம்மன்னன் **பொற்கைப் பாண்டியன்** எனப் பெயர் பெற்று புகழுடன் வாழ்ந்து வந்தான்.

## 4. அருணாசலக் கவிராசர்

அருணாசலக் கவிராயர் பிறந்த ஊர் சோழமண்டலத்துள்ள தரங்கம்பாடியைச் சார்ந்த தில்லையாடி என்பர். பிற்காலத்தில் இவர் சீர்காழியில் வாழ்ந்திருந்தனர். இவர் வேளாளர் குலத்துப் பிறந்த சைவசமயத்தினர். இவரது காலம் இற்றைக்கு நூற்றைம்பது வருடங்கட்கு முன் என்பர். இவர் தருமபுர அதீனத்து வெள்ளியம்பலத் தம்பிரானிடத்து இராமாயணம் முதலிய இலக்கியங்களையும், எழுத்து முதலிய ஐவகை இலக்கணங்களையும் நன்கு கற்றவர். இராமாயணக் கதையை நாடகமாகப் பாடினவர். தாம் இயற்றிய சீட்டுக்கவி ஒன்றிலே தம்மைக், 'கணிகொண்ட பஞ்சலக்கணமும் ராமாயணக் கடலையும் உணர்ந்த புலவன்' என்பர். பின்னொரு சீட்டுக் கவிதையில், 'இராமாயணக்கடலை நாடகஞ் செய்தவ னிலக்கண முணர்ந்த புலவன் — முத்தமிழ்க் காழி யருணாசலக் கவிராயன்' என்பர்.

இராமநாடகம் கேட்டற்குத் துணையாகவேண்டும் என்று 'சித்தி தருகிற வல்லி' என்னுஞ் சீட்டுக்கவி

எழுதிவிடுத்து, மணலி முத்துக்கிருஷ்ண முதலியாரைக் கேட்டவர். பின்னர், அதனை அவர் முன்னிலையில் அரங்கேற்றித் தக்க பரிசில்கள் பெற்றவர். பெற்ற பரிசில் வகைகளைக் 'கனந்தந்தான்' என்னும் பாட்டிற் காட்டினவர்.

இராமநாடகமன்றிப் பலபல தனிநிலைச் செய்யுள்களும், சீகாழித்தலபுராணம், சீகாழிக்கோவை முதலிய தொடர்நிலைச் செய்யுள்களும் பாடினவர். அவரது பாக்களெல்லாம் எதுகைநயம், மோனைநயம் முதலிய நயம் அனைத்தும் நன்கமைந்தவை.

## சீட்டுக்கவி

சித்திதரு கிறவல்லி புத்திதரு கிறவல்லி
தேவர்கள் வணங்குவல்லி
தில்லைநா யகவல்லி சிவகாம வல்லியிரு
திருவிழிக் கருணையாலே
சத்தியவா சகனென்று பூமண்ட லாதிபர்கள்
தாமெங்க ணுந்துதிக்குஞ்
சகலபா ஷாநிபுண மணலிமுத் துக்கிருஷ்ண
சதுரநீ வாழிகண்டாய்
நத்துமலர் குவளைநான் மதியநீ செஞ்சாலி
நான்கருவி மழைமேகநீ
நளினநான் பரிதிநீ பிள்ளைநான் அன்னைநீ
நான்கவிஞன் வழுதிநீகாண்
சுத்தமுள ராமாய ணந்தனைக் கொண்டுனது
சுமுகமது பெறவருகிறேன் [வே
சொற்பொரு ளறிந்தளவு சொல்லுவேன் கேட்க
துணையாக வேண்டு நீயே.

### பரிசில்வகை

கனந்தந்தான் கனகாபி டேகந் தந்தான்
களங்கமிலாக் கருப்பொருளை யழைத்துத் தந்தான்
மனந்தந்தான் முடிசூட்டு மாலை தந்தான்
வாணிசிங்கா தனத்திருத்தி வரிசை தந்தான்
இனந்தந்தா னிராமகதை யெவர்க்குந் தந்தான்
எனையிராமா யணக்கவிஞ னெனப்பேர் தந்தான்
அனந்தந்தான் மணிமுத்துக் கிஷ்ண பூபன்
அகந்தந்தா னிருமையினுஞ் சுகந்தந் தானே.

## 5. சுகமாக வாழ்தல்

உலகத்திலுள்ள சகலரும் சகல விதத்திலும் சவுக்கியத்தையே அடைய நாடுகின்றனரேயன்றிக் காலத்திரயத்தும் அசவுக்கியத்தை விரும்புவதில்லை. ஒருவன் எப்படி உயிர் வாழ்ந்துகொண்டு வந்தானானால் அதிக சவுக்கியத்தை அடையக்கூடும்? என்னும் வினாவுக்கு, அனேக மனோதத்துவ லட்சண சாஸ்திரிகளும், தேக தத்துவ லட்சண சாஸ்திரிகளும், பிரபஞ்ச லட்சண சாஸ்திரிகளும் தத்தம் கொள்கைக் கிணங்கப் பற்பல அபிப்பிராயங்களைத் தத்தம் கிரந்தங்களிலே தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால், அத் தகுதிய அபிப்பிராயங்கள் சில அம்சங்களில் ஒன்றுக்கொன்று ஒவ்வாமலிருக்கின்றன. ஆயினும், இந்த விஷயத்தைப்பற்றி அப்புலவர் சிகாமணிகள் யாவரும் ஒருமிக்க அபிப்பிராயங்கொண் டிருக்கும் சில பகுதிகளை மாத்திரம் இங்கு எழுதுகிறோம் :

இடம் பொருள் ஏவல் முதலிய சகல சாதனங்களையும் வரையாது பெற்றிருக்கும் மன்னர் பெருமான் முதலாகப் பிறவித்தரித்திரன் ஈருக இவ்வுலகத்தில் ஒவ்வொருவருக்கும் துன்பம் இடையரு திருந்துவருகின்றது. இடம் பொருள் ஏவல் ஆண்மை முதலியவற்றில் உயர்ந்த நிலைமையிலுள்ள ஒருவனுக்கே அதிக சவுக்கியம் உண்டென்றும், அவை அமையப் பெருத ஒருவனுக்கு அதிக துக்கம் இருக்கிறதென்றும், மேல் நோக்காகப் பார்க்கிறவர்கள் தப்பபிப்பிராயம் கொள்ளக் கூடும். உலகத்தில் மானிடராய்ப் பிறந்த நம் ஒவ்வொருவருக்கும் சற்றேறக்குறைய ஒரே அளவினதாகத் துன்பமிருக்கிறதென்று சில தத்துவ சாஸ்திரிகள் அபிப்பிராயப் படுகின்ருர்கள்.

'பாலுக்குச் சக்கரை யில்லையென்
பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போடவுப் பில்லையென்
பாருக்கும் குற்றிதைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென்
பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை யில்லையென்
பார்க்கும் விசனமொன்றே.'

இப்பாசுரத்திலடங்கிய கருத்தே அந்த சாஸ்திரிகளின் கருத்தாகும்.

மானிட வாழ்க்கையில் உயர்ந்த நிலைமையிலுள்ளவர்களுடைய துக்கமும் தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களுடைய துக்கமும் ஒரே அளவினதாக இருக்கிறதென்ருவது, அவரவர்களின் நிலைமைக்குத் தக்கபடி

துக்கத்தின் அளவு வேறுபட்டுக் கொண்டே போகிற-தென்றுவது, இன்பத்தைக் காட்டினும் துன்பம் அதிகப்பட் டிருக்கிற தென்றுவது, துன்பத்தைக் காட்டினும் இன்பம் அதிகப்பட் டிருக்கிற தென்று-வது சாஸ்திரிகள் வெவ்வேறு அபிப்பிராயங்கொண்ட போதினும், மானிடனுய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்-கும் துன்பம் இன்பத்துடன் கலந்து இடையரு-மல் வந்துகொண் டிருக்கிற தென்பதைப்பற்றி மாத்-திரம் பண்டிதோத்தமர்கள் யாவரும் ஒரேவிதமான அபிப்பிராயங் கொள்ளுகின்றார்கள்.

‘பிணிகளுங் கவலையும் பேசி னேழ்கடல்
அணைதரு மணலினு மனந்த கோடியால்
இணைதரும் பிறவியி லிடறலா தொரு
கணமது மிலதெனக் கண்டு நொந்தனன்.’

என்று மஹாராஜாக்களாயிருந்து பெருஞ்செல்வத்தை நுகர்ந்தவர்களுங் கூறியிருக்கின்றனர்.

துன்பம் பூரணமாய் நிறைந்திருக்கும் இம்மானிட வாழ்க்கையில், நாம் ஒவ்வொருவரும் கூடியவரையில் சுகத்தை அடைந்து சீர்படுவதற்கு வேண்டிய உபா-யங்கள் சில உள.

**முதலாவது:** மனச்சாட்சிக்கு ஏற்க நடப்பது மானிட சுகத்துக்குப் பெருத்த ஹேதுவாகும். ஒரு-வன் தன்னுடைய மனச்சாட்சி சரியென்று ஒப்புக் கொள்ளத் தக்க காரியங்களையே எல்லாப்படியாலும் செய்துகொண்டும், மனச் சான்று சரியன்று என்று கூறத்தக்க காரியங்களை எவ்விதத்தினும் செய்யாது நிக்கிரகித்துக் கொண்டும் வருவானுகில், பிறர் தன்-

னைப் புகழ்ந்தாலும் புகழாவிட்டாலும் அம் மனச்சாட்சியே தனக்குப் பெருத்த இன்பத்தைப் பயக்கும். வெளிப்புறத்தே பிறராலாவது மற்றப்படியாவது எவ்வளவு இன்பம் ஒருவனுக்குக் கிடைக்கக் கூடியதாயிருந்தாலும் அத்தகுதிய இன்பமனைத்தும் ஈசுவர சொரூபமாய் உள்ளகத்திருந்து நம்முடைய செய்கைகளை நன்குமதிக்கும் மனச்சான்று பயக்கும் இன்பத்துக்கு நிகராகாது. ‘நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை.’ என்றும், ‘தன்னெஞ்சே தன்னைச் சுடும்.’ என்றும் பெரியோரால் கூறப்பட்ட பிரமாணங்கள் நம் ஒவ்வொருவருக்கும் அனுபவசித்தமாயிருக்கின்றன. நிரயத் துன்பத்துக்கு நிகரான பெருந் துன்பங்கள் நாற்புறமும் சூழ, நாம் இடையிலிருக்க நேரிடினும் நம்முடைய மனம் மாத்திரம் நின்மலமாய் மேலான தொருபொருளை நாடிக்கொண் டிருக்குமாயின், தேகத்தைப்பற்றிய துன்பங்கள் நம்மை எத்துணையும் அசக்கா.

யாதொருமதத்தை அவலம்பிப்பவர்கள் தம்முடைய மதாபிமானத்திலும், தாம் ஆத்மார்த்தமாகக் கொண்ட ஈசுவர மூர்த்தத்தில் பதித்துவைத்த பக்தியின் மிகுதியினாலும் தன்மனம் தாம்கொண்ட கோட்பாட்டையும் நின்ற நிலையையும் சரியென்று ஒப்புக்கொண்டு ஆனந்தத்தை உள்ளத்தே தமக்கு ஊட்டிக்கொண் டிருக்கையில், புறமதத்தர்கள் அவர்களைப் பலவாறாகப் பயம் உறுத்தினும் அவர்களுடைய தேகத்துக்கு ஊறு விளைத்தாலும் அவர்களைத் தீயில் வீழ்த்திக் கொல்லத்தொடங்கினாலும் அவ்வுபாதைகளை ஒரு பொருளென மதியாது மனச் சந்துஷ்டியோடு மரணத்தை நல்விருந்தென உவந்து எதிர்கொண்டு

ஆலிங்கனஞ்செய்தனர் என்பதை நாம் சரித்திரத்தால் அறிகின்றோம். சமணர்கள் திருநாவுக்கரசு சுவாமிகளை நீற்றறையில் வைத்தது, அப்பெருந்தகையாருக்கு 'வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே.' என்றபடி பேரானந்தத்தை விளைத்துக்கொண் டிருந்தது.

நாம் யாதொரு சற்கருமத்தைச் செய்கையில் மனக் கிளர்ச்சியும், இன்பமும், துஷ்கிருத்தியத்தைச் செய்கையில் மனக்கலக்கமும் துன்பமும் ஒருவருடைய பிரேரேபணையுமின்றி இயற்கையில் உண்டாகின்றன. சற் கருமத்திற்காக வேறே வெளிப்புறத்து நமக்குப் பிரதிபலன் கிடைக்கினும் கிடையாவிடினும், துஷ்கிருத்தியத்துக்காக வேறே வெளிப்புறத்து நமக்குத் தெண்டனை விளையினும் விளையாவிடினும், சற்கருமஞ் செய்வதென்னும் ஒன்றே நமக்கு இன்பமென்னும் பிரதி பலனைத் தருவதையும், துஷ்கிருத்தியஞ் செய்வதென்னும் ஒன்றே நமக்குத் துன்பமென்னும் பிரதி பலனைத் தருவதையும் நாம் அனுபவமாகக் காணலாம். கொலை, களவு, காமம் முதலிய மஹா துன்மார்க்கச் செயல்களைக் கோப மிகுதியால் செய்துவிட்ட அவிவேகிகள் பிறகு அந்தச் செய்கைகளுக்காகப் பெருத்த மனக்கிலேசம் அடைந்து அம்மனத்துயரத்தை ஆற்ற முடியாதவர்களாகிப் பிராணத்தியாகஞ் செய்துகொண் டிருப்பதை நாம் யோசித்துப் பார்க்கையில், மனச்சான்றுக்கு ஏலாதவற்றைச் செய்வதனால் நமக்கு உண்டாகும் துன்பத்துக்கு நிகரான துன்பம் ஒன்றுமே கிடையாதென்று அங்கை நெல்லிக் கனிபோல் தெளியலாம்; ஆகவே, மனமும் மொழியும் மெய்யும் யாரிடத்தில் ஒத்திருக்கின்றனவோ அவர்கள்

மானிட இன்பத்தை எளிதில் அடையத்தக்கவர்கள் என்பதற்கு ஐயமில்லை. ஆகையால், மனச்சான்றுக்கு ஏற்க ஒழுகுவது மானிட சுகவாழ்க்கைக்கு முதன்மையான சாதகமாகும்.

இரண்டாவது: பிணிமுதலியவை இன்றித் தேகம் ஆரோக்கியமான ஸ்திதியில் இருப்பது மானிட சுக வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அநேகர், இடம் பொருள் ஏவல் முதலிய எல்லா வளனும் பூரணமாக அமையப்பெற்றும், தேகாரோக்கியத்தைக் கெடுக்கத் தக்க பிணிகள் வருத்துங் காரணத்தினாலே, இடையறாப் பெருந்துயரம் எய்தி மானிட வாழ்க்கையின் இன்பத்தை முற்றும் இழந்துவிடுகின்றார்கள்.

'பிணியினால் வலியும் போம்
பிணியினால் அழகும் போகும்
துணிவெலாம் பிணியாற் குன்றும்
தொலைவில்வே தனையைச் செய்யும்
தணிவிலா துள்ளே நின்று
சாலவு மொறுக்கும் பொல்லாப்
பிணியதே யொக்குந் துன்பம்
பேசிடிற் பிறிது முண்டோ.'

இவ்வாறு பிணியினால் நமக்கு உண்டாகுந் துன்பங்கள் இன்னவை என்பதை வெள்ளிடை மலைபோல் பெரியோர் காட்டியிருக்கின்றனர். அவ்வுண்மைகளை நாம் ஒவ்வொருவரும் அநுபவ வாயிலாக அறியலாம். ஆகையால், அப்படிப்பட்ட பிணிகள் நம்மை வந்து அணுகாவண்ணம் நாம் வாழ்ந்து வரவேண்டும்.

மூன்றாவது: மானிட வாழ்க்கையினாலாகிய இன்பம் நமக்கு உண்டாகவேண்டும் என்கின்ற எண்ணங்

கொள்ளுவோமாகில் நாம் (1) நல்ல அப்பியாசங்களை அனுசரித்து வரவேண்டும்; (2) சோம்பலை அறவே கைவிட வேண்டும்; (3) எந்த விஷயத்திலும் மிதமாக இருக்கவேண்டும்; எப்படிப்பட்ட அப்பியாசங்களை நாம் யாதொரு அசந்தர்ப்பமான காலத்தில் விட்டொ-ழிக்க வேண்டியதாய் நேரிடுகிற விஷயங்களிலே நம்-முடைய தேகாரோக்கியத்துக்குப் பெருத்த ஹானி நேரிடக் கூடுமோ அப்படிப்பட்ட அப்பியாசங்கள் பெரும்பாலும் துரப்பியாசங்களாகவே இருக்கும். ஆகையால், அப்படிப்பட்டனவற்றை நாம் பிரதமத்-திலேயே அனுஷ்டிக்கத் தலைப்படாமல் இருப்பதே சர்வோத்தமம். கெஞ்சா, அபினி, சாராயம் முதலிய மயக்கத்தைத் தரத்தக்க வஸ்துக்களை உபயோகித்துக் கொண்டுவருவது மேலே நாம் துரப்பியாசங்களென்று காட்டியவற்றுள் சேர்ந்தது. நாம் எவ்வளவு பிறவிச் செல்வர்களா யிருந்தாலும் உழன்று மெய்வருந்தி உண்டுவருவோமாகில் மானிட வாழ்க்கையினுலாகிய இன்பத்தைப் பெறுவோம்.

'போனக மென்பது தானுழந் துண்டல்.'

என்று ஒளவையார் கூறி யிருக்கின்றனர். மகா ராஜாக்களும் தாம் அந்தரங்கமாய் இருக்கும்போது சாதாரண குடிகளைப்போல் ஒரு புறத்திலிருந்து மண் வெட்டியைக்கொண்டு நிலத்தைக் கொத்திப் பண்-படுத்தி அதற்குத் தண்ணீர் பாய்ச்சி வந்தார்கள் என்பதை நாம் உலகசரித்திரத்தினு லறிகின்றோம். அவர்கள் அங்ஙனம் செய்வது யாது காரணம்பற்றி? மெய்வருந்தி வேலைசெய்யாவிடிற் செல்வத்தை அனுப-விக்கும் ஆற்றல் அவர்களிடத்தில் முற்றும் இல்லொரு-

ளாய் முடியுமாகையால் அவர்கள் அங்ஙனம் செய்ய வேண்டியது அவசியமாயிற்று.

ஒரு நாள் முழுதும் வியர்வை ஒழுக ஒழுக கூலிக்கு வேலைசெய்து, மாலையில் வீட்டுக்கு வந்து மனைவிமக்களுடன் உப்பிலாக் கூழுண்ணுங் கூலியாள் அன்றிரவு முழுதும் அயர்ந்து நித்திரைசெய்து அடை-யும் சுகத்தை நாம் நிகரற்றதென்றே சொல்லவேண்டும். தேகத்தின் பாதுகாப்பு விஷயமாகக் கூறவேண்டியது இன்னும் ஒன்றுண்டு. நாம் ஒரு வகையான அப்-பியாசங்களை அனுசரித்து வருகையில், அவற்றிற்கு நேர்மாறான அப்பியாசங்களைத் திடீரென்று அனுச-ரிக்கத் தலைப்படுவது பெருந் துன்பங்களுக்கு ஏது-வாகும். நாம் பிரதமத்தில் கொண்டிருக்கும் அப்பி-யாசங்கள் அயுக்தமானவை யென்று நமக்குத் தெரிய-வருகையில், அவற்றைப் பையப்பைய விட்டொழிக்க முயலவேண்டும். சடுதியில் அப்பியாசங்களை மாற்று-வதைக் காட்டினும் தீராப் பிணிகளுக்கும் பெருந் துயரங்களுக்கும் மூலகாரணம் வேறொன்றில்லை. அதிக தௌர்ப்பாக்கிய ஸ்திதியிலுள்ள ஒரு ஏழைக் குடியா-னவனைத் திடீரென்று அரச பதவியில் இருக்கச் செய்வோமாகில் அவன் தான் அதுகாறும் இருந்த ஸ்திதிக்கு நேர்மாறான ஸ்திதியில் வந்தபடியினால், அவன் அவ் வுயர்நிலைமையின் இன்பத்தைத் துய்க்க ஆற்றல் சிறிதும் இலனாகித் துயரக்கடலில் ஆழ்வான்.

தேகாரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ள-வேண்டுபவர்கள் கவனிக்கத் தக்க விஷயம் இன்னும் ஒன் றுண்டு. அவரவர்கள் தத்தம் தேகத்துக்கு ஏற்ற உணவாதிகளை அமித மின்றிக் காலக் கிரமங்

தப்பாமல் உட்கொள்ளவேண்டும். இன்ன பொருள்கள் நம்முடைய தேகத்துக்கு ஏற்றன, இன்னவை ஏலா-தன என்பதை நாம் வாகட புஸ்தகங்களைக் கொண்டு அறியவேண்டுவதில்லை. நம்முடைய உடற்கூறே நமக்கு அவ் வுண்மைகளைக் காட்டும்படி ஜகதீசர் அமைத்து வைத்திருக்கின்றனர்.

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.'

எந்தப் பதார்த்தத்தை நாம் முன் உண்டோமோ அது நன்ருய் ஜீர்ணித்துவிடுமாகில் அப்படிப்பட்ட பதார்த்தம் நமது தேகலட்சணத்துக்குப் பொருந்-தியதென்று அறிந்துகொண்டு அப்படிப்பட்டதை உண்போமாயின் நம்முடைய தேகத்துக்கு மருந்து என்னும் ஒருபொருள் வேண்டுவதில்லை என்று திரு-வள்ளுவர் கூறியிருக்கின்றனர். யாதொரு பொருள் தேகத்துக்கு ஏற்றதா யிருக்கினும் அதை அமிதமாய் உட்கொள்ளும் பட்சத்தில் அதனுலாகிய பெரும்பயன் குன்றிப் பற்பல துன்பங்கள் விளையும்.

'பீலி பெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.'

மிகவும் நுண்ணியதாகிய மயிலிறகே யாயினும் அது அமிதமாய் ஒரு வண்டியில் ஏற்றப்படுமாகில் அவ்வண்டியின் அச்சு முறியும்.

**நான்காவது:** கிடைத்தமட்டில் மனத்திருப்தி அடைந்திருப்பது இன்பத்துக்கு முக்கிய சாதகமாகும். கிடைத்தபொருள் எவ்வளவு உயர்ந்ததாயிருக்கினும்

அதனிடத்து அவா குறைந்தும், கிடையாத பொருள் எவ்வளவு தாழ்ந்ததாயிருக்கினும் அதனிடத்து அவா மிகுந்தும் இருப்பது மானிட மனோதத்துவலட்சணம். இதை அனுபவ வாயிலாக உணர்ந்த மூதறிஞர்,

'அரிதுபெற்றிடினும் பெற்றதின் விருப்பமறப்
பெறுதன விரும்பும் உயிர்கள்.'

என்று கூறியுளார். இவ்வியல்பு ஒவ்வொருவனும் கல்வி, செல்வம், ஒழுக்கம் முதலியவற்றில் மேன் மேலும் சிறந்தோங்குவதற்கு அதிக அனுகுணமானதே. மேன்மேல் உயர்ச்சியை நாடும் பாலியர்களிடத்தில் இக்குணம் அமைந்திருப்பது நல்லதென்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை. ஆனால், வயது முதிர்ந்து உலகத்தில் இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருப்பவர்களைக் குறித்தே இங்கு விவகரிக்க வந்தோம். கிடைத்த பொருளினிடத்துத் திருப்தி யடையாமல் மேன் மேலும் ஒன்றினிடத்து நாம் அவாக்கொள்வோமாயின்,அங்ஙனம் அவாக்கொண்ட பொருள் கிட்டாவிடத்துப் பெருந்துக்கம் விளைவதுமன்றி, முன்னமே கிடைக்கப் பெற்றிருக்கும் பொருளினாலாகிய இன்பமென்னும் பயனும் இல்லாமற் போய்விடும். ஆகையால், மனத்திருப்தி யற்றவன் இருவகையிலும் பெருத்த நஷ்டத்தை யடைகின்றான். உள்ள இன்பம் போவது ஒன்று, இல்லாத துன்பம் புகுவது ஒன்று.

'வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.'

ஒரு பொருளையும் அவாவாமையைப் போன்ற மேலாகிய செல்வம் இவ்வுலகத்திலில்லை, மறுவுலகத்தி-

லேனும் உண்டோ எனின், அங்கும் இல்லை என்றார் நாயனார். சுவர்க்கத்துக்கு ஒருவன் சென்றானேயாயினும், அங்கு அவனுக்கு அதனினும் மேலாயதோர் இன்பம் உண்டென்று தோன்றுகிற பட்சத்தில், அச் சுவர்க்கவாழ்க்கை அவனுக்கு இன்பத்தைப் பயவாது. இது காரணமாகத்தான் சுவர்க்க இன்பத்தை அனுபவிக்கப்பிறந்த இந்திரன்முதலிய இமையோர் அதற்கும் மேலான மோக்ஷ இன்பமாகிய கடவுள் திருவடிச் செல்வத்திலே நாட்டம் வைத்தவர்க ளல்லரென்றும், அவர்களைச் சற்றேறக்குறைய ஒருவித உலோகாயதர்க ளென்றே கூறவேண்டும் என்றும் சில இந்து தத்துவ லட்சண சாஸ்திரிகள் வாதிக்கின்றனர். நல்வினையின் காரியமாகச் சுவர்க்க இன்பத்தை இந்திரன் முதலியோர் அனுபவிக்க வேண்டியவர்களாதலின், அவர்களுடைய மனத்தில் அச்சுவர்க்க இன்பத்துக்கு மேலானது ஒரு பொருள் உண்டென்னும் நினைவு உதிப்பதில்லை யென்றும், அது காரணமாகத்தான் சுவர்க்க வாசிகளாகிய தேவர்களுடைய பதவியை ஒரு பொருளாக மேலோர் மதிப்பதில்லை யென்றும் சில சித்தாந்திகள் கூறுகின்றார்கள். இவ்விஷயம் சுருதி யுக்தி அனுபவம் என்னும் மூன்றுக்கும் ஒத்திருக்கின்றது.

மஹா அலெக்ஸாந்தர் என்பவர் உலக முழுவதையும் வென்று 'அந்தோ, இன்னும் நான் ஜெயிக்க உலகமில்லையே! என் செய்வேன்!' என்று கண்ணீருங் கம்பலையுமாய்த் துக்கித்தபோது, அவர் அதுவரையில் வெற்றிபெற்றுக் கவர்ந்த அளவற்ற பிரதேசங்களினு லாகிய இன்பம் அவருக்கு எவ்வளவுங் கிடையாமற் போனதோடு, இனி வெற்றி பெற உலக மில்லையே யென்னும் ஏக்கத்தா லாகிய துன்பமும் அவரைத் தலை

யெடுக்காமற்செய்தது. ஒருவன் எப்போதும் சருகைத் தேடிக்கொண்டே இருப்பானாயின், அவன் ஓரிடத்திலிருந்து குளிர்காய்ந்து சுகிப்பது எப்போதோ? அவா என்னும் பெருங் காற்றில் மனம் இலவுபோல் அலைய, சதா பொருள்களைத் தேடிக்கொண்டேயிருப்பானாயின் அவன் அவற்றாலாய இன்பத்தை நுகர்வது எக் காலம்? சகல பொருள்களிடத்தும் பற்றற்று ஒன்றையும் விரும்பாத துறவிகளைக்காட்டினும் உண்மையில் அதிக இன்பமுடையார் ஒருவருமேயில்லை.

'இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்,'

துன்பங்களுக்கெல்லாம் தலையானதாயுள்ள அவா என்பது ஒருவன் மனத்திலிருந்து முற்றும் நீங்குமாயின் அவனுக்கு இன்பம் இடையறாம லிருக்குமென்று பிரமாணம் இருக்கிறது. இவ்வுலகத்திலும் இதன் சார்பான பதார்த்தங்களிடத்திலும் ஆசையை முழுவதும்விட்ட துறவிகளுக்கு மோக்ஷ இன்பத்தில் அவா இருக்கின்றதே, அது அவர்களுடைய மனச்சந்துஷ்டியைக் கெடுக்காதோ? எனில், எதார்த்தமான துறவிகளுக்கு மோக்ஷத்திலும் அவா இராதென்பதே துணிபு.

'கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.'

என்று பெருந்துறவிகளின் லட்சணத்தைப்பற்றிக் கூறியிருக்கிறது.

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே.'

என்னும் உறுதியோடு கடவுளின்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு, அவர்கள் தங்கள் நெறியில் நின்று, தாங்கள் செய்யவேண்டிய கருமங்களைச் சீர்பெறச் செய்து கொண்டு வருவார்கள்.

ஆகையால், உலகத்தில் கூடியவரையில் சவுக்கியவானயிருந்து உயிர்வாழ விருப்பமுடைய ஒவ்வொருவனும் கடவுள் தனக்குக் கொடுத்தருளி யிருக்கிறவரையில் சந்துஷ்டி யடைந்து, அவர்பால் நன்றி பாராட்ட வேண்டும். பிறன் ஒருவனது சம்பத்தைக் கண்டு, 'அம்மவோ! என்னிடத்து அது இல்லையே! அவனது நிலைமையில் யான் இருந்தால் எவ்வளவு சவுக்கியவானயிருப்பேன்!' என்று ஒவ்வொருவனும் நினைப்பது இயற்கை. எவனுடைய சம்பத்துக்காக அவனுடைய நிலைமையை நாம் விரும்புகின்றோமோ, அவனுடைய துக்கங்களையுங் கூடவே சமன்செய்து சீர்தூக்கிப் பார்த்தால், பெரும்பாலும் நம்முடைய நிலைமையே மேம்பட்டதாயிருக்கும். எவனொருவன் பிறனுடைய ஆக்கத்தை மேல் நோக்காகக் கண்டு இச்சிக்கின்றானோ அவன் அவ்வாறு இச்சிக்கப்பட்டவனுடைய துக்கங்களையுங் கூடவே கைக்கொள்வதானல் அந்த ஆக்கத்தை அவன் இச்சிக்கட்டும். கடவுள் அவனவனுடைய யோக்கியதாம்சத்துக்கேற்க அவனவனுக்குச் சுகதுக்கங்களை அமைத்திருக்கின்றாராகலின், அவனவன் தன் தன் நிலைமையே தன் தன் யோக்கியத்துக்குத் தக்கதென்று திருப்தி பெற்று மனச் சந்துஷ்டி அடையவேண்டும். ஆகவே, சுகஜீவியாயிருக்க விருப்பமுடைய ஒவ்வொருவனும் 'தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை, அம்மா பெரி

தென் றகமகிழ்க' என்னும் அமுதவாக்கை நினைப்பூட்டிக் கொள்ளுவானாக.

**ஐந்தாவது :** உலகத்தில் சவுக்கியவானா யிருக்க விருப்பங் கொள்ளுகிற ஒவ்வொருவனுக்கும் மனத்துக் கிசைந்த ஒரு சிநேகனாவது இருக்கவேண்டும். சற்றேறக்குறைய ஒரே விதமான கோட்பாடுடையவர்களே நீடித்து விசுவாசத்துடன் சிநேகஞ் செய்வார்கள். ஒருவனுக்கு ஏதோ ஒரு விஷயமாகச் சுகம் நேரிடுங் காலத்தில் அதை அவன் தனித்து நினைந்து நினைந்து அனுபவித்தலினும், தன்னிடத்து உண்மையில் விசுவாசமுடைய நண்பனுக்கு அதைத் தெரிவிக்கையிலே அவனும் உடன்சேர்ந்து மகிழ்ந்து முகமலர்ச்சி யடைவதனால் மகிழ்ச்சி இருமடங்காகப் பெருகுகின்றது. ஒருவனுக்குத் துக்கம் நேரிட்ட காலத்தில், அதைத் தன்னிடத்திலே உண்மையில் சகோதர வாஞ்சையுடைய நண்பனிடத்துக் கூறும்போது அவனுடைய பரிவின் விசேஷத்தினாலும் தேற்று மொழிகளினாலும் தன் துக்கம் பெரும்பாலும் குறைகின்றது. இது மானிட மனோதத்துவ லட்சணம் என்பது நம்மில் ஒவ்வொருவருக்கும் அனுபவமா யிருக்கின்றது. பெருஞ் சம்பத்து வரும் போதாவது பெருந்துக்கம் நேரிடும்போதாவது நம்முடையமனம் ஒருவித பிராந்தி யடைந்துவிடும். அத்தருணத்தில் நமக்கு நன்னெறி இஃதென்பதை நாமே உணர்ந்துகொள்ள அசக்தர்களா யிருப்போமாகையால், அப்போது நம்முடைய க்ஷேமத்தில் உண்மையிலே நாட்டமுடைய நண்பனொருவன் இருந்தால் அவன் நமக்குச் சமயோசிதமான புத்திமதிகளைக் கூறித் தருண சகாயம் புரிவான். ஏனெனில்,

'நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.'

என்னும் பிரமாண மிருக்கின்றது. இவ் வுலகில் எவ-னொருவன் தன் மனத்துக் கிசைந்த ஒரு நண்பனுவது தனக்கிருக்க வேண்டுமென்று கோரவில்லேயோ அவன் கடவுளாக வாகிலும் மிருகமாக வாகிலும் இருக்க வேண்டுமென்றும், மனிதன் எவ்விதத்திலும் கடவுட் டன்மையைப் பெறமாட்டாணுகையால் அவன் கேவலம் மிருக ஜன்மமாகத்தான் இருக்க வேண்டுமென்றும் ஒரு சிறந்த ஆங்கிலேய மனேதத்துவ லட்சண சாஸ்திரி கூறுகின்றனர். ஆனல், உண்மையான சிநேகன் அகப்படுவது மாத்திரம் துர்லபந்தான். பதினுயிரத்-தில் ஒருவன் அகப்படுவதும் கஷ்டமே. நம்மிடத்து அதிக நட்புப் பாராட்டுவதுபோல் நடிப்பவர்களெல்-லாம் ஏதோ ஒருவித சுயப்பிரயோசனத்தைக் கரு-தியே அங்ஙனம் செய்கின்றனராதலின், உண்மையான நண்பன் இன்னுனென்பதை யறிவது சாத்தியமன்று.

'இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னும் நட்பு.'

இன்னூர் எமக்கு இவ்வளவு அன்புடையார், யாம் இன்னருக்கு இவ்வளவு அன்புடையோம் என்று ஒரு-வரை ஒருவர் சிறப்பித்துக் கூறினுலும், அவர்களிடத்-துள்ள நட்பு விசேஷப்பட்டதல்ல, அது மிக்க கொஞ்ச-மானதே; ஏனெனில் நண்பர்களாயிருக்கும் இருவர், உடல் வேறும் உயிர் ஒன்றுமா யிருக்கப் பெற்ருல் எப்படியோ அப்படியே யிருக்கவேண்டும். அங்ஙன-மின்றி நான் அவன் என்னும் பேதம் பாராட்டுதல் உண்மையான நட்பிலக்கணத்துக்கு விரோதமென்பது

தோன்ற, அந் நட்பு பூரணமானது அன்றென்று தெய்வப் புலவர் மேற்கண்ட குறளில் கூறினார். ஆகவே, இப்படிப்பட்ட லட்சணத்தோடு கூடிய நண்பனொருவன் புண்ணியவசத்தினால் கிடைக்கப் பெறுவானாயின், அவனைப் பெற்றிருப்பது இன்பத்துளெல்லாந் தலைமையான தாகும்.

ஆறுவது: தெய்வ நம்பிக்கையும், மறுவுலக வாழ்க்கையின் நிச்சயமும் இவ்வுலகில் இன்பவானாயிருக்க விருப்பங் கொள்ளுகிற ஒவ்வொருவனுக்கும் இருத்தல் வேண்டும். தெய்வ நம்பிக்கையினாலும் தெய்வ பக்தியினாலும் மனத்திலுண்டாகும் இன்பத்தை அவனவன் தனித்து நுகரவேண்டியதேயன்றி, அதன் தன்மை இத்திறத்த தென்பதைப் பிறனொருவனுக்குச் சொல்லவும் முடியாது, அவன் அதன் தன்மையை யூகித்தறிந்து கொள்ளவும் முடியாது. சிலர் இவ்வுலகத்தில் தமக்குக் கண்ணா யுள்ளவர்களையும், மண் பொன் பெண் ஆகிய இவைக ளிடத்தே யுள்ள பற்றையும் அறவே கை விட்டுக் கடவுள் திருவடி யொன்றினையே சதா தியானித்துக்கொண் டிருப்பதை யோசித்துப் பார்க்கையில், இவ் வுலகத்துள்ள மேற் கண்ட பதார்த்தங்களினிடமாக உண்டாகும் இன்பத்தைக் காட்டிலும் கடவுள் திருவடித் தியானத்தால் விளையும் இன்பம் எத்தனையோ மடங்கு அதிகப்பட்டிருத்தல்வேண்டும் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது.

“வரமொன் றிங்கெனக் கருளல் வேண்டும்
அதுவே,
பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி

பலதொடுத் திசைத்த வொருதுணி யல்லது
பிறிதொன்று கிடையா தாக வறுமனைக்
கடைப்புறத் திண்ணை யல்லது கிடைக்கைக்
கிடம்பிறி தில்லை யாகக் கடும்பசிக்
குப்பின் றட்ட புற்கையூ ணல்லது
மற்றோ ருண்டி வாய்விட் டரற்றினும்
ஈகுந ரில்லை யாகநா ளுளும்
ஒழுக்க நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக வித்திறம்
உடனீங் களவு முதவிக் கடவுணின்
பெரும்பத மன்றியான் பிறிதொன்
றிரந்தனன் வேண்டினு மீந்திடா ததுவே.'

கடவுளே எனக்கொரு வரம் வேண்டும், அது யாதெனில், பெருங் குளிரினால் நான் வருந்தும்போது அழுக்கடைந்த பல கந்தைத் துணிகள் ஒன்றாய்ச் சேர்த்துத் தைக்கப்பட்டுள்ள ஒரு துணியே யல்லாமல் வேறொன்றும் எனக்குக் கிடையாம லிருக்கக் கடவது; வறியவனுடைய கடை வாயிலிலுள்ள புறந் திண்ணையல்லாமல் வேறே படுப்பதற்கு இடம் அகப்படாம லிருக்கக்கடவது; பெரும் பசி யுண்டாகும் போது உப்பில்லாத நொய்க்கஞ்சி யல்லது வேறு ருசியான உணவை நான் கேட்டபோதினும் எவரும் கொடாம லிருக்கக்கடவர்; ஆனால் எந்நாளும் ஒழுக்கத்திற் சிறந்து கல்வி கேள்விகளில் மிகுந்த மெய்யடியார் கூட்டத்தில் யான் இருக்கக்கடவேன்; இவ்வாறு இவ்வுடலைவிட்டு என் ஆவி நீங்கிப் போகுமளவும் நீ கிருபை செய்வதுமல்லாமல், நின்பெருந் திருவடிச் செல்வத்தையன்றி யான் வேறொன்று வேண்டுமென்று எப்போதாவது உன்னைக் குறையிரந்து கேட்டுக்-

கொண்டாலும் நீ எனக்குக் கிருபை செய்யாதிருக்கக் கடவை என்று சில மெய்யடியார்கள் கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்திருப்பதைப் பார்க்குமளவில், இவ்வுலகத்திலே பெருஞ் செல்வமுடையவனும் அனுபவிக்கத்தக்க இன்பமும் கடவுள் திருவடியைத் தியானிப்பதனால் உண்டாகும் இன்பத்துக்கு எவ்வளவும் நிகரல்ல என்று கண்கூடாகத் தெரியவருகின்றது. ஈசுவர பக்தியினால் இம்மையிலேயே ஒருவனுக்கு இவ்வளவு நிகரில்லா இன்பம் உண்டாகுமாகில், உலகத்தில் கூடுமானவரையிலே அதிக சவுக்கியவானாயிருக்க விருப்பங்கொள்ளுகிற ஒவ்வொருவனும் அத்தகைய தெய்வபக்தியை அடைய முயல வேண்டியது அவசியமல்லவா ?

தெய்வ நம்பிக்கையும் பக்தியும் சிலருக்கு இயற்கையில் எவ்வித முயற்சியுமின்றி உதித்து விடுகின்றன. மற்றும் சிலருக்கு சாது சங்கப் பழக்கத்தினாலும் சார்பினாலும் உண்டாகின்றன ; வேறு சிலருக்கு ஆயுள் பரியந்தம் உதிப்பதே யில்லை. இம் மூவித வகுப்பினரையும் முறையே உத்தமர், மத்திமர், அதமர் என்று கூறலாம். ஒருவனுக்குப் பெருஞ் சம்பத்து வந்த காலத்துத் தெய்வ நம்பிக்கையும் பக்தியும், அவனை அகங்கரிக்க வொட்டாத படிக்கும், அவனுடைய செல்வத்தைப் பலருக்கும் நல்வழிகளில் உபயோகமாகும்படிக்கும்செய்யவல்லன.பெருஞ்சம்பத்து வந்தபோது தெய்வ நம்பிக்கை யுடையான், ‘இப்பொருள் என் ஆற்றலினால் எனக்குக் கிடைத்ததன்று, ஈசன்கருணைதான் இதை எனக்கு நல்கிற்று’ என்று தனக்குள் சொல்லிக்கொள்ள வேண்டிவரும். அதனால்அவனுடையதற்போதம்அடங்கி,அவன்உய்வ-

தற்கு இடமிருக்கும். இங்ஙனமின்றி, 'இப்பொருள் என்னுடைய முயற்சியினாலும் ஆற்றலினாலுமே எனக்குக் கிடைத்தது.' என்னும் எண்ணம் அப்பொருளுடையவன் மனத்தில் தோன்றுமாயின் அவன் கெட்டானென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. பெருந் துன்பம் வந்தபோதும் தெய்வ நம்பிக்கையும் தெய்வ பக்தியும் ஒருவனுக்குத் தருண சகாயம் தருவதுபோல, வேறே எதுவும் கைகொடுக்கமாட்டாது.

'எடுத்த காயத்தா லியாவர்க்கு
மின்பதுன் பங்கள்
விடுத்து நீங்குங்கொல் மண்ணுடன்
விண்முதல் யாவும்
நடித்த பாவையப் பாவைக்கு
நிருத்தனெம் பெருமான்
படுத்தி யாட்டுறும் பாசமே
யிருவினைப் பாசம்.'

'துன்பம் வேட்டல சூழ்வது
சூழுங்கா லதுபோல்
இன்ப மென்பது முயன்றுழ
லாதுவந் தெய்து
முன்ப ராபரன் முடித்ததே
முடியுமென் றெண்ணி
அன்ப ராய்த்தொழ முயல்வதே
முயற்சியென் றறியார்.'

இவ்வுலகத்திலுள்ள ஆன்மவர்க்கங்கள் யாவும் பாவைகளென்றும், அவற்றை நல்வினை தீவினை யென்னுங் கயிற்றினால் கடவுளாகிய சூத்திரதாரி ஆட்டுவிக்-

கின்றனவென்றும், அச் சூத்திரதாரி ஆட்டுவதற்கேற்க நல்வினை தீவினைப் பயன்களாகிய இன்ப துன்பங்களை ஆன்மாக்களாகிய நாம் அனுபவித்துக்கொண்டு வருகின்றோம் என்றும், துன்பம் நேரிட்டவிடத்து மனந்தளராது உலோகநாயகரது திருவடியை நினைப்பதன்றி வேறு பரிகாரம் நமக்கு இல்லையென்றும் பெரியோர் கூறிய பிரமாணங்களைத் துன்பம் நேரிட்ட விடத்து ஒருவன் நினைப்பூட்டிக் கொள்வானாயின் அத்துன்பத்துக்கு அவன் பரிகாரம் தேடிக்கொண்டவனாவான். ஆகவே இன்ப துன்பங்கள் நேரிடும்போதெல்லாம் தெய்வ நம்பிக்கையும் பக்தியும் பேருதவி செய்கின்றன.

அன்றியும் ஒருவன் பாலியம், யௌவனம், கௌமாரம் என்னும் பருவங்களில் உலகத்திலுள்ள சகல பதார்த்தங்களையும் அனுபவித்து ஆய்விட்டபடியினாலே வயோதிக பருவத்தில் அவை எதுவும் அவனுக்கு இன்பத்தைப் பயவாதபடியினாலும், இந்திரியங்கள் மெலிந்து திடங்குன்றியும் கருவி கரணங்கள் ஓய்ந்தும் இளைத்தும் போய்விடுகிற படியினாலும், அவனுக்கு அக்காலத்துப் பெரு மகிழ்ச்சியை விளைப்பது, பரலோக இன்பத்தைச் சீக்கிரம் அடையப் போகிறேனென்கிற கோரிக்கை யொன்றேயாம். அந்த நம்பிக்கையும் கோரிக்கையும் அவ்வயோதிகனுக்கு அக்காலத்து விளையாவிடின் அவன் வாழ்க்கை அவனுக்கு மிக்க அருவருப்பைத் தரும். வயோதிக பருவம் வருவதற்கு முன்னே தெய்வ லட்சண விசாரணை முதலியவை இல்லாமல் மிருகாதிகளைப்போல் உண்டு உறங்கி உயிர் வாழ்ந்து இறுமாந்து நிற்கும் சில பேதைகள், வயோதிக காலத்திலே மனம் சலனமின்றி

நிற்கத் தெய்வ நம்பிக்கை, பக்தி, பரலோக வாழ்க்கை நிச்சயம் கிடைக்கப் பெருமையினாலே பொழுது போகாமல் அல்லற்பட்டு நமக்கு வேலை ஒன்றும் இல்லையேயென்று ஏங்கித் துக்கித்து மாளுவார். தெய்வ நம்பிக்கையும், பக்தியும், பரலோக வாழ்க்கை நிச்சயமும் முக்கியமாய் ஒருவனுக்கு விருத்தாப்பிய தசையில் பெருஞ் சம்பத்தாகும். ஆகவே, தெய்வ நம்பிக்கையும் பக்தியும் பரலோக வாழ்க்கை நிச்சயமும் இயற்கையில் எய்தப் பெறாதவர்கள் செயற்கையினாலாவது சீக்கிரத்தில் பெற்றுக்கொள்ளப் பெரிதும் முயலவேண்டும்.

இவ்வுலகில் ஒருவன் தான் பிறந்து மரிக்குமளவும் கூடிய வரையிலே இன்பத்தை அனுபவிக்க விருப்பங் கொள்ளுவானாகில், அநேக தத்துவ சாஸ்திரிகள் அனுபவ வாயிலாகச் சில உண்மைகளைக் கண்டறிந்து ஒருமிக்கக் கூறிய மேற்காட்டப்பட்ட ஆறு முக்கியமான விஷயங்களையும் சித்த சமாதானத்துடன் கவனித்து ஒழுகுவானாக.

## 6. பூதக்கண்ணாடியின் உபயோகங்கள்

ஆங்கிலேயர்களின் கூட்டுறவினால் நம்மவர் அடைந்து வரும் பல பயன்களுள்ளும் பூதக்கண்ணாடியினாலாகிய பிரயோசனத்தை நாம் மிகுதியும் பெருத்ததாகவே சொல்லலாம். ஏனெனில், அதி சமீபத்தில் இருந்தும் நம்முடைய கண்ணுக்குப் புலப்படாத

அளவிறந்த விசித்திரங்களை அதன் மூலமாக நாம் அறிந்துகொள்ளக் கூடியவர்களா யிருக்கின்றோம். நம்முடைய கண்ணுக்கு அணுவளவாகத் தோன்றுகிற பதார்த்தத்தைப் பூதக்கண்ணாடியைக்கொண்டு பார்ப்போமாகில், உருவத்தைப் பெரிதாக்கிக் காட்டத்தக்க இயல்புடைய அக்கண்ணாடியின் குணவிசேஷத்தினால், அது, ஒன்று அல்லது இரண்டங்குல பருமனுள்ளதாக, அந்தந்தக் கண்ணாடியின் சக்திக்கு ஏற்றவாறு, நம்முடைய கண்ணுக்குப் புலப்படும். கண்ணுக்குப் புலப்படாத அணுரூபமான வஸ்துக்களை இவ்வாறு ஆயிரமடங்காகவும் கோடிமடங்காகவும் பெரிதாக்கி அக்கண்ணாடி காட்டுவதனால், அந்த வஸ்துவைக்குறித்த சகல விஷயங்களையும் நாம் பூரணமாக அறிந்துகொள்ளக் கூடியவர்களா யிருக்கின்றோம். பூதக்கண்ணாடியைக் கொண்டு பார்த்த பிறகு, நாம் கண்டறிந்த சில வஸ்துக்களைக் குறித்த விசித்திரங்களை இங்குக் கூறுவோமாகில், பூதக்கண்ணாடியின் அருமையும் பெருமையும் இனிது விளங்கும்.

ஊசிபோலும் நுண்ணிதாகிய ஒரு சிறு துரும்பை எடுத்து, அதைத் தண்ணீரில் தோய்த்து, அதன் முனையினின்று ஒழுகும் அணுப் பிரமாணமான ஒரு சிறுதுளித் தண்ணீரைப் பூதக்கண்ணாடியைக்கொண்டு பார்ப்போமாகில், அதில் எண்ணிறந்த ஜீவராசிகள் சஞ்சரிக்கும் விசித்திரம் நமக்கு நன்றாய்த் தோன்றுகிறது. அந்தச் சிறு துளித் தண்ணீர் அதில் காணப்படும் அணுரூபமான ஜந்துக்களுக்கு ஒருபெரிய சமுத்திரத்தைப்போல் பெரிதாக விளங்கும். அதிலுள்ள ஜீவராசிகள், சில சமயங்களில் ஒன்றையொன்று கட்டிப் புரளுகின்றன; ஒன்றோடொன்று விளையாடுகின்றன.

பெரியனவா யிருப்பவைகள் சிறியனவா யிருப்பவைகளை ஆகாரமாக விழுங்குகின்றன. அவ்வொரு துளித் தண்ணீரிலுள்ள ஜீவராசிகளை எண்ணிப் பார்ப்போமாகில், அவைகளின் சங்கியை சற்றேறக் குறைய இப் பூமியிலுள்ள மனிதர்களின் மொத்த சங்கியைக்கு ஒத்திருக்கலாம் என்றே யூகிக்கலாம். ஓடிக்கொண்டிருக்கும் சுத்த ஜலத்திலே இப்படிப்பட்ட ஜீவராசிகள் அவ்வளவாக இருக்கமாட்டா. ஓட்டமின்றி ஓரிடத்திலேயே நெடுநாள் வரையில் தங்கியிருக்கும் ஜலத்தில்தான் கிருமிகள் இவ்வளவு அமிதமாய்க் காணப்படும்.

பூதக்கண்ணாடியினால் பார்க்கப்படும் மேற்கண்ட ஒரு சிறு துளித் தண்ணீரில் நாணாவித பேதமுடைய கிருமிகள் இருக்கின்றன. அவற்றுள் ஒரு வகைக் கிருமிகள் பெரிய கட்டுமரங்களைப் போல ஸ்தம்பாகாரமாய் அசைவற்று நெடுநேரம் வரையில் சும்மா இருக்கும். அப்போது அவைகள் கேவலம் ஜடப்பொருள்கள்போல் தோன்றும். அவைகளுக்குப் பசி வந்தபோது அவை தம் ஸ்தம்பாகார ரூபத்துடனே மெல்ல நகர்ந்து போகையில், அந்தத் துளித் தண்ணீரில் எதிர்நோக்கி வரும் அளவிறந்த சிறு கிருமிகளை வழிமறிப்பதற்காக இருபுறத்திலும் மறைப்பதனால், அவை அர்த்த சந்திரனைப்போல் ஆகும். இந்த ஸ்திதியில் அவை கொஞ்ச நேரம்வரை நகர்ந்துகொண்டே போய், பின்னும் அந்த அர்த்த வட்டத்துக்குள் ஏராளமாக அனேக கிருமிகள் வந்து சேருமளவும், 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா!' என்னும் பழமொழிப்படி, சும்மா விருந்துதிடரென்று இரண்டு முனைகளையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பூரணவிருத்தா-

காரமான ரூபமாய்விடும். அதற்குள் அகப்பட்டுக் கொள்ளும் கிருமிகளெல்லாம் கிறுகிறு என்று சுழன்று தத்தளிக்கும். அப்போது அப் பெருங் கிருமி தன் உடலைப் பரபர என்று சுருக்கி, அச் சிறு கிருமிகளை யெல்லாம் நெருக்கித் தின்றுவிட்டு, மீட்டும் முன் போலவே ஸ்தம்பாகாரமாய் அசைவற்றுக் கிடக்கும்.

இன்னும் சில கிருமிகள் இப்படியே பெருத்த உருவங்களா யிருப்பதுபோற் காட்டி, திடீரென்று ஆயிரக் கணக்காகப் பரபர என்று துண்டு துண்டாய்ப் பிரிந்து, நாற்புறமும் ஆகாரத்தைத் தேடிச் செல்லும். யோசித்துப் பார்க்கையில் இக் கிருமிகளுக்கு உடல் முழுதும் வயிறாயிருக்க வேண்டும் என்று நமக்குத் தோன்றுகின்றது.

மற்றுஞ் சில கிருமிகள் பாம்பைப் போலவே வளைந்து வளைந்து நகர்ந்து போகின்றன. அடிக்கடி தம்முடைய ரூபத்தைப் பற்பல மாதிரியாக மாற்றிக்-கொண்டே போகும் இயல்புடைய சில கிருமிகளும் இருக்கின்றன.

மேற்கண்ட ஒரு சிறு துளித் தண்ணீரை ஒரு நாளெல்லாம் பார்த்துக்கொண் டிருந்தாலும், நூதன நூதனமாகவெவ்வேறுகிருமிகள் தோன்றிக்கொண்டே வருகின்றன. ஆனால், அத்துளி நீர், அதிசீக்கிரத்தில் ஆவியாகி உலர்ந்து போகிறபடியால், அவற்றை நெடு நேரம்வரையில் நாம் பார்த்துக்கொண்டே யிருக்க முடியாமற் போய்விடுகிறது. அதனால், இவ்விதமான சிறு ஜந்துக்களின் ஆயுளை நிர்ணயிக்கக் கூடவில்லை. ஆயினும், இவைகள் சஞ்சரிப்பதற்கு ஆதாரமாயுள்ள

ஜலம் ஆவியாய்ப் போகும்வரையில் அவைகள் அதிற் பிழைத்திருக்கின்றன. ஜலம் முற்றும் வறண்டுபோன பிறகு, அவைகளெல்லாம் உயிர்மாய்ந்து உருவழிந்து தூசிபோல் மாறிவிடுகின்றன.

இவ்வாறு ஒரு சிறு துளித் தண்ணீரிலே எண்ணிறந்த ஜீவராசிகள் உயிர்வாழ்ந்து வருவதையும், அவைகள், பொறி புலன்கள் பூரணமாய் அமையப்பெற்ற மனிதர்களைப்போலவே, ஆகாரந் தேடுதல் முதலியவற்றில் காட்டிவரும் புத்தியையும் யோசனையையும் சற்று நிதானித்துப் பார்த்தால் உலகிலுள்ள ஜலராசிகளெல்லாம் எத்தனை ஜீவராசிகளாக இருக்கக் கூடுமோ, யார் அறிவார்! இந்த விசித்திரத்தை என்னென்று சொல்வது! இதைக் கண்டபிறகும் ஒரு விவேகி அகங்கரிக்க இடமிருக்குமோ?

ஜலத்தில் இத்தியாதி பற்பல கிருமிகளிருப்பதும் ஒருவகையில் நமக்குப் பேருதவியே யாகும். ஜலத்தில் ஸ்நானம் செய்வதனாலும் வேறுவகையினாலும் போய்ச் சேருகிற பற்பல அசுத்தங்களை, அணுரூபமாயுள்ள இந்தக் கிருமிகள் தமக்கு ஆகாரமாகக்கொண்டு தம்மினும் பெரியஜந்துகளுக்குத் தாம் ஆகாரமாகின்றன. ஆகவே, அணுரூபமாயுள்ள சிறுகிருமி முதல் பெரிய மீன் ஈறாக உள்ள பல ஜீவராசிகளும் மனிதனுடைய உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிய ஜலத்தின் அசுத்தத்தை போக்குவதற்காக ஜகதீசனால் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கின்றன என்று சிறந்த சாஸ்திரியார் ஒருவர் கூறுகின்றனர்.

நமது கண்ணுக்கு எவ்வளவும் புலப்படாத அனேக சிறுபிராணிகளின் விசித்திரத்தைப் பூதக்-

கண்ணாடி நமக்குக் காட்டுவதைப்பற்றி இதுவரையில் கூறினோம். இனி, கண்ணுக்குப் புலப்படும் சில ஜந்துக்களின் நுண்ணிய அவயவ விசித்திரங்களைப் பூதக்கண்ணாடி நமக்குக் காட்டுவதைக் குறித்துச் சிறிது கூறுவோம்: பூச்சிகளின் புறத்து உறுப்புகளை ஒருவாறாக நாம் சாதாரணமாய் அறிந்துகொள்ளக் கூடுமாயினும், அவற்றின் கண்களின் அமைதியைப் பூதக்கண்ணாடியினாலன்றி வேறு வகையினால் அறிதல் ஒருபோதுங் கூடாது.

பூச்சிகளுக்கு இருவகையான கண்கள் உண்டு. அவை சாதாரணமான கண்களும், சாதாரணமான கண்கள் அனேகம் தொகுப்பா யிருக்கப்பெற்ற பெரிய கண்களும் என்பனவாம் தேன்கூட்டுக்குள் அநேக அறைகள் மிக நெருக்கமா யிருப்பதுபோல, பல சிறு கண்கள் சேர்ந்த ஒரு பெருங்கண் பூச்சிகளுக்கு அமைந்திருப்பது அதிக விசித்திரமானது. எறும்புக்குக் குறைந்தது ஐம்பது சிறு கண்கள் சேர்ந்து ஒரு பெருங்கண்ணாக அமைந்திருக்கின்றது. ஈக்குச் சற்றேறக்குறைய நாலாயிரம் சிறு கண்கள் சேர்ந்து ஒரு பெருங்கண்ணாகி இருக்கின்றது. சில வண்ணாத்திப் பூச்சிகளுக்குச் சுமார் இருபதினாயிரம் சிறு கண்கள் சேர்ந்து ஒரு பெருங்கண் ஆகின்றதாம். இப்படிப்பட்ட பெருங்கண்கள் அனேக பூச்சிகளுக்கு இரண்டு பக்கங்களிலும் அமைந்திருக்கின்றன. அவ்விரண்டு கண்களுக்கும் இடையில் சாதாரணமான சிறு கண்கள் மூன்று இருக்கின்றன. நம்முடைய கண்கள் கீழாகவும் மேலாகவும் பக்கமாகவும் திரும்புவதுபோல, அவைகளின் கண்கள் திரும்பமாட்டா. அதுகாரணமாகத்தான் அந்தப் பிராணிகள் நாற்புறமுமுள்ள

வஸ்துக்களைப் பார்க்கும்பொருட்டு அவைகளுக்கு இத்தனை கண்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன.

சில பூச்சிகளுக்கு வாயண்டை, வாளைப்போலவும் கத்தியைப்போலவும் கத்திரிக்கோலைப் போலவும் கூர்மையான தாடைகள் இருக்கின்றன. அவைகளைக்கொண்டு அந்தப் பிராணிகள் தம் ஆகாரத்தைக் கொன்று மென்று தின்கின்றன.

தேன் முதலிய நீர்மயமான சாரங்களை உறிஞ்சிக் குடிக்கத்தக்க சில பூச்சிகளுக்கு, யானைக்கு இருப்பது போல, சிறு துதிக்கை யிருக்கின்றது. அதன் மூலமாக அவைகள் சாரத்தை உறிஞ்சுகின்றன. ஈக்கள் பாலைக் குடிப்பது இதுபோன்ற கருவியைக்கொண்டேயாம். கொசுவுக்கும் துதிக்கை யுண்டு. அந்தத் துதிக்கையின் முனையில் ஊசிபோன்ற மிக்க கூர்மையான கருவிகள் அமைந்துள்ளன. கொசு அக் கருவிகளை நம்முடைய சருமத்திலுள்ள சிறு துவாரங்களில் நுழைத்து, தன் வாயிலிருந்து ஊறும் ஒருவித நீர்மயமான திராவகத்தை நமது இரத்தத்தில் பெய்கின்றது. இந்தத் திராவகம் பட்டமாத்திரத்தில் நம்முடைய உதிரம் நீர்த்து, அதன் துதிக்கை வழியாய் ஏறி, அதன் வாய்க்குள் புகுவதற்கு ஏற்றதாய்விடுகிறது. கொசு இந்தப்படி அத்திராவகத்தை நம் உதிரத்தில் வார்த்து அதைப் பக்குவப் படுத்தாவிட்டால், அதிக தளமாயுள்ள நம்முடைய உதிரம் அதன் நுண்ணிய துதிக்கை வழியாக ஏறிச்செல்ல முடியாது.

பெரும்பாபாலும் பூச்சிகளுக்கு நீண்டு கனத்த ஸ்பரிசனிகள் என்னும் உரோமங்கள் முகத்தண்டை

அமைந்து இருக்கின்றன. அந்த உரோமங்களுக்கு அனேக கணுக்களும் பூட்டுக்களும் உள்ளன. இந்த ஸ்பரிசனிகளினால்தான் அந்தப் பிராணிகள் தமக்கு முன்னுள்ள பதார்த்தங்களின் லட்சணத்தை அறிந்து கொள்ளக் கூடியவைகளா யிருக்கின்றன. நமக்குச் சுவாசாசயம் என்னும் பை பிரத்தியேகமா யிருப்பது-போல பூச்சிகளுக் கிடையாது. அவைகளுக்குத் உடல் முழுமையும் சிறு துவாரங்கள் அமைந்திருக்-கின்றன; அந்தத் துவாரங்களின் மூலமாய்த்தான் அவைகள் உஸ்வாச நிஸ்வாசம் செய்துவருகின்றன. நம்முடைய உடல் முழுவதும் அதேமாதிரி துவாரங்க-ளிருக்கினும், அவைகளெல்லாம் நம்முடைய உதிரத்தி-லுள்ள அசுத்தங்களை வெளிப்படுத்துவதற்கு மாத்-திரம் உபயோகமாகின்றனவேயன்றி, பூச்சிகளுக்கு உதவுவதுபோல், உஸ்வாசம் நிஸ்வாசம் செய்ய உத-வுவதில்லை. குளவி, தேனீ முதலிய ஜந்துக்கள் தம்-முடைய அடிவயிற்றை நாற்புறமும் திருப்பிக் கொள்-ளத்தக்க இயல்புடையன.

ஒரு சிறு ஜலத்துளியில் அளவிறந்த ஜீவராசிகள் இருப்பதுபோலவே பூமியின் வெளியிடம் முழுவதும், நம்முடைய கண்ணுக்குப் புலப்படாத, அளவிறந்த நுண்ணிய ஜீவராசிகள் பரவியிருக்கின்றன.

ஓர் இருட்டறையில் நாமிருந்துகொண்டு, சாளர வழியாய்ச் சூரியகிரணம் ஒன்றை உட்புகச் செய்வோ-மானால், அவ் வெளிச்சத்தில், ஊசி வைக்கவும் இட-மில்லாதபடி, தும்பு தூசிகளைப்போல் அனேக வஸ்-துக்கள் நிரம்பி யிருப்பதை நாம் பார்க்கின்றோம் அல்லவா? அவைகளுக்குள் பெரும்பாலன, பூதக்-

கண்ணுடியாற் பார்க்கும்பொழுது, ஜீவராசிகளாகவே யிருக்கின்றன. ஒரு சிறு துளித் தண்ணீரிலுள்ள எண்ணிறந்த பிராணிகள் எப்படி உயிர் வாழ்ந்து-கொண்டு உணவு முதலியவற்றைத் தேடுவதற்காக யுக்தி யோசனைகள் செய்து வருகின்றனவோ, அது போலவே, அகண்டமான வெளிப்பரப்பிலுள்ள கணக்-கில்லாத ஜீவகோடிகள் உயிர்வாழ்ந்து உண்டுவருகின்-றன. நாம் ஒரு முறை சுவாசிப்பதற்குள் எத்தனையோ ஜீவராசிகள் நமக்குள் சென்று வெளிவருகின்றன. நம்முடைய உயிர்வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஜலத்திலுள்ள அசுத்தங்களைப் போக்குவதற்கு எப்படி அதிலுள்ள மீன் முதலிய பற்பல பிராணிகள் உப-யோகமாக இருக்கின்றனவோ, அப்படியே, நமக்கு ஜீவாதாரமாயுள்ள ஆகாயத்தில் இருக்கும் நானுவித அசுத்தங்களைப் போக்குவதற்காகவே எண்ணிறந்த கிருமிகளும் பூச்சிகளும் பறவைகளும் நமக்கு உப-யோகமா யிருக்கின்றன.

நம்முடைய கண்ணுக்கு ஐயந்திரிபற நன்ருக விளங்கும் பருத்த உருவமமைந்த யானை முதலிய மிருகங்களுக்கு இருக்கும் பற்பல அவயவங்களின் விசித்திரங்களை நாம் பார்த்தமாத்திரத்தில் எவ்வளவு நன்ருய் அறிந்துகொள்ளக்கூடுமோ, அவ்வளவு நன்-ருக, நம்முடைய கண்ணுக்கு எவ்வளவும் புலப்படாத அணுரூபமான பிராணிகளின் விசித்திரங்களைப் பூதக்-கண்ணுடியின் உதவியினுல் கண்டறியலாம்; பெரிய பிராணிகள் தாம் உயிர்வாழ்வதற்கு எந்தெந்த அவ-யவங்களை எந்தெந்த விதமாக யுக்தி யோசனையோடு உபயோகித்து ஜீவித்து வருகின்றனவோ, அந்தந்த விதமாகவே, அணுரூபமான ஜீவராசிகளும் உணவு

முதலியவற்றைத் தேடி உண்டு ஜீவிக்கும்படி அருள்-பாலித்து வரும் கடவுளின் முடிவில்லாத ஆற்ற-லுடைமையைக் காட்டப் பூதக்கண்ணுடியினும் மேம்பட்ட பொருள் நமக்கு உலகில் வேறென்று உண்டோ!

## 7. ஜீவ வதை

உலகத்தில் எப்படிப்பட்டவனும் தன் புத்தி பூர்வ-மாகத் தனக்குத் தானே யாதொரு தீமையையும் விளைத்துக்கொள்ளமாட்டான்; ஆகையால், ஒவ்வொ-ருவனும் பிற உயிர்களைத் தன்னுயிர்போற் பாவித்து வருவானாயின், எவனும் ஏனைய உயிர்களுக்கு எத் தகைய தீமையும் செய்ய மனந்துணியான் என்றே சொல்லலாம். இந்துக்க ளாகிய நம்மவர்களுக்காக ஏற்பட்டிருக்கும் வேதாகம புராண இதிகாச முதலிய-வற்றிலும், உலகத்திலுள்ள மற்றெல்லா மதஸ்தர்க-ளுடைய சமய சித்தாந்த நூல்களிலும், நீதி சாஸ்தி-ரங்களிலும் கூறப்பட்டுள்ள விதிவிலக்குகள் யாவும், ‘நின்னுயிர்போற் பிறிதின்னுயிரையும் நினை’ என்னும் ஒரு சிறு வாக்கியத்தில் அடங்கிவிடும் என்று அறிஞர் கூறுகின்றனர்.

> ‘எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
> இல்லாத எப்பொருளும் இல்லையால்’

என்று சங்கப் புலவர்களால் வியந்து உரைக்கப் பெற்ற திருக்குறளில், தெய்வப்புலவர், தாம் வகுத்துள்ள இல்லறம் துறவறம் என்னும் இரண்டு இயல்களிலே,

முன்னதில் அன்புடைமையையும், பின்னதில் அருளுடைமையையும் அமைத்து வற்புறுத்திக் கூறியிருக்கும் அழகை நாம் யோசித்துப் பார்க்குந்தோறும், எவ்வகைப்பட்ட ஆச்சிரமத்தி லுள்ளவனுக்கும் ஜீவகாருண்யம் அத்தியாவசியம் என்பது இனிது விளங்கும்.

உலகத்தில் அனேகர் தம்முடைய உடல்காப்பின் விஷயமாக ஆகாரத்திற்கென்று ஜீவவதை செய்து வருகின்றார்கள். தேகாரோக்கியத்திற்கு கெடுதி நேரிடாதபடி வேறு வகையினால் ஆகாரந் தேடிக்கொள்ள அசக்தரா யிருப்பவர்கள், தங்கள் உடல் காப்பின் விஷயமாய் ஜீவவதை செய்ய வேண்டியவர்களாய் இருப்பதைப்பற்றி யாம் இங்கு ஒன்றுங் கூறவரவில்லை. ஆனால், சிலர் மானிடர்க்குத்தான் பகுத்தறிவு உண்டு என்றும், அதுகாரணமாக அவர்களுக்குத்தான் தேகத்தைச் சேர்ந்த யாதொரு அவயவத்துக்கு தீங்கு நேரும்போது அவஸ்தை உண்டாகின்றது என்றும், ஏனைய ஜீவராசிகளுக்கு அவ்வளவாக வேதனை யுண்டாவது இல்லை என்றும் மனோபிராந்தி யடைகிறார்கள். அவர்கள் இங்ஙனம் துரபிப்பிராயம் கொள்வது அம்மம்ம! கொடிது! கொடிது! என்று யாம் நினைக்கின்றோம். அவர்கள் அங்ஙனம் கருதுவதெல்லாம் சுயப்பிரயோசனத்தின் காரியமாகவே யிருக்கின்றது. அவர்கள் தமக்கிருப்பது போலவே பிற உயிர்களுக்கும் வேதனையுண்டென்று நினைப்பார்களாகில், அவற்றால் தாமடையும் சுகத்திற்குத் தடங்கல் உண்டாகும்; ஆகையால், அவற்றிற்கு அவ்வளவாக வேதனை யில்லை என்றும், அவைகளெல்லாம் மானிடருடைய உபயோகத்திற்காகவே இருக்கின்றன என்றும், ஒருவித

துரபிப்பிராயங்கொண்டு, மனச் சந்துஷ்டி யடைந்து வருகிறார்கள். யாதொரு தீங்கு நேரிடும்போது மானிடர்க்கு எவ்வளவு வேதனை யிருக்கிறதோ, அவ்வளவு வேதனை ஏனைய ஜீவராசிகளுக்கும் இராமற் போகவில்லை என்பதைத் தெய்வானுக்கிரகத்தினால் ஒரு பக்திமான் தம் அனுபவவாயிலாகக் கண்டறிந்த ஓர் அற்புதத்தை இங்கே எடுத்துக் காட்டுகிறோம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் அருளானந்தம் என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் மகா பக்திமான். அவர் மறந்தும் பிறருக்குத் தீமை செய்யாதவர். அவர் நல்லொழுக்கத்திலும், தெய்வ பக்தியிலும் தலைசிறந்தவரா யிருக்கினும், தம் குடும்பத்தாருடைய நெடு நாளைய வழக்கத்தினால் மாம்ச பட்சணியாய் இருந்தனர். அவர் சரீர அகத்துறுப்புலட்சண சாஸ்திரத்தில் மிகவும் சாமர்த்தியம் அடையவேண்டும் என்று கருதி, ஆடு மாடு கோழி தவளை ஓணான் முதலிய பிராணிகளைப் பிடித்துச் சேதித்து, அவற்றின் அகத்துறுப்புகளை நன்கு சோதித்து வருவது வழக்கம். ஆனால், பகுத்தறிவு என்னும் ஆன்மலட்சணம் அமையப்பெற்ற மானிடர்க்கு அவர்களுடைய அங்கத்தின் ஒரு பாகத்தைச் சேதிக்கும்போது எவ்வளவு துன்பம் உண்டாகிறதோ அவ்வளவு துன்பம் அத்தகுதிய ஆன்ம லட்சணம் அமையப்பெறாத அற்ப ஜந்துக்களுக்கு இராதென்னும் சித்தாந்தத்தை அவர் யதார்த்தத்தில் நம்பினவர்.

இப்படி யிருக்க ஒரு நாள் அவர் உதிரவோட்டத்தின் விசித்திரத்தையும், உதிரத்திலுள்ள அணுக்களின் அற்புதங்களையும் பிரத்தியட்சமாய்க் கண்டறியும்

பொருட்டு, பருத்த தவளை யொன்றைக் கொண்டு வந்து, அதை ஒரு பலகையின்மேல் வைத்து, அதன் மார்பிலும் கால்களிலும் தலையிலும் கூர்மையான ஊசிகளைக்குத்தி, அப்பலகையில் பிகிந்து வைத்திருந்தனர். அவர் அத் தவளையினிடமாக என்ன விசித்திரங்களைக் கண்டறிவதற்காக அவ்வாறு செய்தனரோ அவற்றைக் கண்டறிந்தவுடனே அதை யெடுத்து வெளியேவிட மறந்தாராகையால், அத் தவளை அப் பலகையின்மேல் அன்றெல்லாம் பதைத்துத் துடித்துக் கடைசியாக ஸ்மரணை தப்பி உயிர்நீத்துக் கிடந்தது. அன்று மாலை அருளானந்தத்தின் ஆப்தராகிய ஆரோக்கியசாமி என்பவர் அவருடைய வீட்டுக்கு வந்து பேசிக்கொண் டிருக்கையில், அவர் அருளானந்தத்தை நோக்கி, 'நண்பனே, இதோ இத் தவளையை, ஐயோ! இப்படி அறைந்தவர் யாரோ?' என்று வினவினர். அதற்கு அருளானந்தம், 'உதிரத்தின் சில விசித்திரங்களைக் கண்டறிய நான்தான் அந்தப்படிச் செய்தேன்' என்றார். அது கேட்டு, ஆரோக்கியசாமி, 'அப்பா, இக்கொடிய காரியத்தை நாம் செய்வது தகுதியன்று; அதற்கு எவ்வளவு வேதனை யிருந்திருக்கும்!' என்று துக்கிக்கவே, அருளானந்தம் அவரை நோக்கி, 'நீ ஏன் துக்கப்படுகின்றாய்? ஆன்மலட்சணம் அமையப் பெறாத அஃறிணைப் பொருளானபடியால் இத்தகைய பிராணிகளுக்கு நீ நினைப்பதுபோல் அவ்வளவு பெருந் துன்பம் இராது; அங்ஙனம் அவற்றிற்குத் துன்பம் இருப்பதாகப் பகவான் எனக்கு விளக்குவாராகில், அப்போது பார்த்துக்கொள்வோம்' என்று வேடிக்கையாகச் சமாதானம் கூறி, ஆரோக்கியசாமிக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, அன்று இராத்திரி எட்டு

மணிக்கு போஜனஞ் செய்த பிறகு, மெழுக்குவர்த்தி ஏற்றி வைத்துக்கொண்டு சில கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கையில், ஒரு விட்டிற்பூச்சி அவருடைய மேஜையண்டை பறந்துவந்து உட்காந்தது. அதைக் கண்ட மாத்திரத்தில் அவர், அருகிலிருந்த கத்தியினல் அதைக் குத்தி விளக்கில் காட்டிக்கொண்டு இருக்கையில், அதற்குக் கொஞ்சநேரத்துக்குமுன் ஆரோக்கியசாமியிடத்துத் தாம் வார்த்தையாடிக்கொண் டிருந்த விஷயம் அவருடைய ஞாபகத்துக்கு வந்தது. உடனே அவருக்கு மயக்கமாயிருந்தபடியால், அவர் உட்காந்துகொண் டிருந்த நாற்காலியின்மேல் சற்றே சார்ந்தமாத்திரத்தில் அயர்ந்து தூங்கிவிட்டனர். அப்போது அவர் கண்ட கனவை அடியில் வருமாறு, உலகத்தார் அறிய, பின்பு வெளியிட்டனர்.

நான் ஒருநாள் காலையில் குதிரைமேல் ஏறிச் சவாரி செய்துகொண்டே போகையில் ஒரு பெரும் பாறையின்மேல் இடறி விழுந்தேன். அப்போது என் மண்டையோடு சின்னபின்னமாய்ப் போனபடியால், என்னை, அங்கிருந்த சிலர், தரும வைத்திய சாலைக்குத் தூக்கிக்கொண்டு போனர்கள். அவ்விடத்தில் இரண்டொரு நாள் யான் காயத்தினல் மிகவும் துன்பப்பட்டுத் தேருமல் கடைசியில் மரணமடைந்தேன். உடனே நான் ஒரு கனவானுடைய குதிரை கட்டும் லாயத்திலே ஒரு நாய்க்குட்டியாய் இருக்கக் கண்டேன். நான் மிகவும் அழகாய் இருந்தபடியால், என்னை அக்கனவானுடைய சிறு குமாரன் எடுத்துக் கொண்டுபோய், பால்வார்த்து ஆகாரம் கொடுத்து அருமையாக வளர்த்து வந்தான். இப்படி யிருக்கையில், சில மாதங்களான பிறகு அவ்வீட்டிற்கு வந்த

ஒருவர் அக்கனவானைப் பார்த்து, 'இந்நாயின் செவி-களையும் வாலையும் அறுத்துவிட்டால், இது பின்னும் அதிக அழகாய் வளருவதுமன்றி, பலமும் சுறவையும் பெற்றிருக்கும்' என்று சொன்ன மாத்திரத்தில், அக் கனவான் எவ்வளவும் கைகூசாமல், ஒரு கூர்மையான கத்தி எடுத்துக்கொண்டு, என் செவியையும் வாலையும் அறுத்துவிட்டார். அப்போது நான் பட்ட துய-ரத்தை என்னென்று சொல்வேன்! அவர் என் அழ-கினால் தானடையவிருந்த சந்துஷ்டியை நோக்கினாரே யன்றி, எனக்கு விளைந்த துன்பத்தை எவ்வளவும் யோசித்தாரில்லை. அவ்வாறு என் அங்கங்கள் அறு-பட்ட காலத்தில் எனக்கு உண்டாகிய துன்பம் அவ்-வளவு பெரிதல்ல. எனக்கு முக்கியமான அந்த அங்-கங்கள் இராமையினால், கொசு ஈ உணி முதலிய பற்பல ஜந்துக்கள் என் உதிரத்தைக் குடிக்கும் பொருட்டு என் உடல் முழுவதையும் அங்கங்கே கடிக்கத் தலைப்-பட்டபோது அவற்றை ஓட்டிக்கொள்ள எனக்கு ஈசுவரன் கொடுத்த கருவிகளாகிய அங்கங்களைப் பறி-கொடுத்தேன்; ஆகையால், யான் அல்லும் பகலும் மிக்க அல்லற்பட வேண்டியதாயிற்று. சில கிருமிகள் என் செவிக்குட் பிரவேசித்து மண்டையைத் துளைக்-கத் தலைப்பட்டன. ஐயோ! நீண்டு தொங்கிக்கொண்-டிருந்த என் செவிகள் எனக்கு இருக்குமாயின் அக் கிருமிகளில் ஒன்றையேனும் யான் உள்ளேசெல்ல-வொட்டேனே! என் எஜமானனுடைய சிறு குமாரன் எனக்குச் சில வேளைகளில் அமிதமாய் ஆகாரத்தைக் கொடுத்து என்னிடத்தில் அதிக பரிவு பாராட்டி வந்-தானே யாயினும், அவனை வீட்டில் தாய் தந்தையர்க-ளாவது, கல்விச்சாலையில் அவனது உபாத்தியாயராவது

வைதாலும் அடித்தாலும், தன் கோபத்தை உடனே வந்து என்மேல் சாட்டுவான். அவ்வீட்டிலிருந்த எஜமானன்முதல் வேலைக்காரப் பையன் ஈறாக யாவ-ரும் தத்தம் கோபத்தைக் காட்டுவதற்கு நானே லட்-சியப் பொருளா யிருந்தபடியால், அப்பாதையைப் பொறுக்கமாட்டாமல் அவ்வீட்டைவிட்டு ஒருநாள் நான் வெளிப்பட்டு ஓடிப்போய்விட்டேன். நெடுந்தூரம் வரையில் ஓடி, கடைசியாக இளைப்படைந்து, ஒரு கிராமத்தண்டை வந்து சேர்ந்தபோது, அங்குச் சில தச்சர்கள் மரவேலை செய்துகொண்டு இருந்தார்கள். இங்குச் சிறிது காலம் தங்கியிருக்கலாம் என்று நினைத்-துக்கொண்டே யிருக்கையில், அவர்களுக்குள்ளே ஒரு புண்ணியவான் ஒரு மரத்துண்டைப் பரபரவென்-றெடுத்து, அதன் மத்தியில் சற்றேறக்குறைய இரண்டு அங்குலச் சிற்றளவுடைய ஒரு துவாரம் செய்து, அதை அறுபட்டு மொட்டையாயிருந்த என் வாலில் நுழைத்து, ஒரு சுத்தியினால் நன்றாய்ப் பிகிந்து ஒட்ட அடித்து விட்டான். அப்போது என் வாலண்டை யிருந்த அம்மரத்துண்டு தோகைபோல் இருப்பது கண்டு, அங்கிருந்த தச்சர்கள் எல்லாம் ஒருங்குகூடிக் கைகொட்டி நகைக்கத் தலைப்பட்டார்கள். அம்மரத்-துண்டு என் எலும்பை அதிக கொடூரமாய் நெருக்கிய-படியால், பாதம் முதல் மூளை வரையிலுமுள்ள நரம்புக-ளெல்லாம் இவ்வளவவ்வளவென்று சொல்லமுடியாத அவ்வளவு ஜிவ் ஜிவ் என்று வலித்தன. அப்போது நான்பட்ட வேதனையைக் கண்டு, அணுவளவேனும் பச்சாத்தாபமின்றி, அக்கிராமவாசிகள் அனைவரும் பெருங்குரலிட்டு ஆரவாரம் செய்தார்கள். இந்த வேதனையோடு அந்த மகாபாவிகள் முகத்தில் விழிக்க

எனக்கு மனமில்லாமல், முள்ளும் கல்லுமான ஒரு பாதைவழியாய் ஓடுகையில், வழியிலே தெய்வகடாட்சத்தினால் இரண்டு பாறைகள் நெருக்கமாய் அதிசமீபத்தில் இருந்தன. அவைகளுக்குள் நுழைந்து நான் ஓடவேண்டியதாய் நேரிட்டபோது அம் மரத்துண்டும் அதில் பிகியப்பட்டிருந்த வாலின் பகுதியும் கீழே அறுபட்டு விழுந்தன. அந்தப் பாகம் உரத்த உதிரதாது ஆகையால், அதின் மூலமாக உதிரம் பெருக்கெடுக்கவே எனக்கு இருந்த பலம் எல்லாம் குன்றித் தாகம் மேலிட்டது. இந்த ஸ்திதியில் அடுத்த ஒரு கிராமத்தின் வீதிவழியாக மெல்ல நான் நடந்து போகையில், அன்றைத்தினம் அங்குக் கார்த்திகை பண்டிகைத் தினம் ஆகையால், அங்கு இருந்த ஒருவன் டபாஸ் கொளுத்திக் கொண்டு இருந்தான். அவன் என்னைக் கண்டமாத்திரத்தில் பரபரவென்று ஒரு பெட்டியை யவிழ்த்து, அதினின்றும் நாலைந்து டபாஸ் கோவையை எடுத்து என் கழுத்தைச் சுற்றிலும் கட்டிவிட்டான். இதனால் நமக்கு என்ன விளையுமோ என்று யான் தியங்கிக்கொண்டு இருக்கையில், அக் கோவையின் ஒரு புறத்தை அவன் கொளுத்தி விட்டான். அப்போது நான் பட்ட பாட்டை என்னென்று சொல்வேன்! என் தேகமெல்லாம் இந்திரனைப்போல் கண்களாய்விட்டது. என் மயிரெல்லாம் தீந்துபோய் விட்டது. வேதனை பொறுக்கமாட்டாமையால் குலைத்துக் குலைத்து என் தலையும் வீங்கிப் போய்விட்டது. அந்தக் கிராமத்தில் அன்றிரவு ஒரு புறத்துத் தங்கியிருந்து, மறுநாள் தாகசாந்தி செய்யலாம் என்று ஒரு கால்வாயை நோக்கி நான் போய்க் கொண்டிருக்கையில், யம தூதனைப்போல் ஒருவன்

அங்கு ஒரு பெருந் தடியைக் கையில் வைத்துக் கொண்டு, 'ஆ, ஆ! இதோ அகப்பட்டது ஒரு பயித்தியம் பிடித்த நாய்' என்று இடிபோல் ஆரவாரித்து, அத் தடியால் என் மண்டையில் அடிக்கவே யான் உயிர்துறந்தேன்.

உடனே நான் ஒரு நாகணவாய்ப்புள் ஆனேன். என் தாய் என்னை மிக்க பரிவுடன், தன் சிறகுக்குள் வைத்துப் போஷித்து வந்தது. நானும், என் தாயும் ஓர் உயர்ந்த மாமரத்தின் கிளையிலிருந்த கூட்டுக்குள் வசித்துக்கொண் டிருந்தோம்; ஆகையால், இனி மகா பாபிக ளாகிய மனிதர்கையில் அகப்பட்டுக்கொண்டு நாம் துன்பப்பட வேண்டியதில்லை. ஆகாயத்திலேயே பறந்து சஞ்சரித்துச் சுகிக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கையில், ஒருவன் அம்மரத்தின் துளிர்களைப் பறிப்பதற்காக மேலே ஏறியபோது, உறங்கிக்கொண்டிருந்த என்னையும், பாடிக்கொண்டிருந்த என் தாயையும் சேர்த்துப் பிடித்து, கூட்டோடு வீட்டுக்குக் கொண்டு போய்விட்டான். அப்போது என் தாய் பயந்து, கூட்டைவிட்டு வெளிப்பட்டு, என் பிரிவாற்றாமையினால் அலறிக்கொண்டே ஓடிப்போய்விட்டது. எனக்குச் சிறகுகள் நன்றாய் வளர்ந்திராமையினால், நான் அப்படிப் பறந்துபோகச் சக்தியற்றுக் கூட்டிலேயே இருந்தேன். அவன் என்னை ஒரு துர்க்கந்தமான கூட்டுக்குள் அடைத்து, சிறிது காலம் வளர்த்துவந்தான்.

இப்படி யிருக்கையில், ஒரு நாள் அவ்வீட்டுக்கு ஒரு பெண்பிள்ளை வந்தாள். அவள் என்னைக் கூட்டுக்கு வெளியே எடுத்து, மெல்லத் தடவிக்கொடுத்-

தனள்; அப்போது நான், அவளை மகிழ்விக்கும்பொருட்டு, அவளது கையில் நின்றுகொண்டு, ஓசையோடு குரலெடுத்துப்பாடினேன். அப்போது, அவள் என் பாடலின் இனிமைக்கு ஆச்சரியமடைந்து, என் எஜமானனைப் பார்த்து, 'இது மிக்க இனிமையாகப் பாடுகின்றது; இதன் கண்ணைப் பிடுங்கி, இதை இன்னும் நெருக்கமான ஒரு கூட்டுக்குள் அடைத்து வைப்பாயாகில், இது பின்னும் நன்றாய்ப் பாடும்; அப்போது இதற்கு உலகத்தில் எவ்விதச் சங்கீத வித்துவானும் நிகராகான்; பாடும்பறவைகள் அடிக்கடி வெளிச்சத்தைப் பார்க்கக்கூடாது' என்று தன் எண்ணத்தைத் தெரிவித்தாள்; அப் பெண் சொன்ன வசனங்களை, என் எஜமானன், வேதவாக்கியங்களாகக் கொண்டு, உடனே கோணியூசி ஒன்றை எடுத்து, கனகனவென்று தீயில் காய்ச்சி, என் இரண்டு கண்களிலும் நுழைத்துவிட்டான். அப்பொழுது எனக்கு ஏற்பட்டிருந்த வேதனையை, தெய்வமே, என்னென்று சொல்லுவேன்!

பிறகு, அந்தப் பாவி என்னை மிகவும் நெருக்கமான ஒரு கூட்டில் அடைத்து வைத்தான். 'இந்த இருட்டறையில் நாம் எத்தனை நாட்கள் இருந்து வருந்த வேண்டுமோ!' என்று நான் ஏக்கமுற்று இருக்கும்போது, ஒரு நாள் பூனை யொன்று மெல்ல வந்து, என்னைக் கூட்டினின்றும் பரபரவென்று வெளியே இழுத்து, நறநறவென்று மென்று தின்றுவிட்டது. எனக்குக் கண் தெரிந்திருந்தால் பூனை வருவதைக் கண்டதும் நான் பெருங்கூச்சலிட்டுக் கத்தி, தப்பித்துக்கொண்டு ஓடியிருப்பேன்; பூனையும் ஓடிப்போய் இருக்கும்.

உடனே எனக்கு வேறொரு பிறவி கிடைத்தது. நான், நறுமணங் கமழும் ஒரு பூந்தோட்டத்தி லிருந்த முல்லைச் செடி ஒன்றின்மேல் ஒரு பொன்வண்டாக இருந்தேன். அங்கு யான் சந்தோஷமாய்ப் புஷ்பங்களின் சுகந்தத்தை அநுபவித்துக்கொண்டு ரீங்காரம் செய்து வருகையில், இப் பிறவியில் நமக்கு எவ்விதத் துன்பமும் உண்டாக இடமில்லை என்று மனப்பால் குடித்துக்கொண் டிருந்தேன். அப் பூந்தோட்டத்திற்குரிய பிரபுவும், அவருடைய குமாரர்கள் மூவரும் நான் இருந்த செடியின்வழியாக உலாவிக்கொண்டே வந்து நின்றார்கள். அப்போது அங்கப் பிரபு தம் அருமைப் புதல்வர்களுக்கு, என் உடலிற் காணும் பொன் நிறத்தையும், பளபளப்பையும் காட்டிக் காட்டினார். உடனே அச் சிறுவர்கள் ஒரு வஸ்திரத்தைவீசி என்னைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டார்கள். ஒருகால் யான் தப்பித்துக்கொண்டு பறந்து ஓடிவிடப்போகிறேனென்று நினைத்து, அவர்களில் ஒருவன் என் கழுத்தில் ஒரு கனத்த நூலைக் கட்டிப் பிடித்துக்கொண்டான். அத் தருணத்தில் வேதனை பொறுக்க மாட்டாமல், நான் துள்ளித் துள்ளி நாற்புறமும் பறந்துகொண்டே யிருந்தேன். மற்றொருவன் இடையிடையே என்னைப் பிடித்துக் கீழும் மேலுமாகப் புரட்டி புரட்டி, என் வயிற்றை மூடியிருந்த பளபளப்பான ஓட்டையும், நுண்ணிய இறகையும் சிறிது சிறிதாகப் பிட்டுத்தொலைத்தான். கொஞ்ச நேரத்தில் என் மேனியின் பளபளப்பு முழுதும் போய், யான் பறக்கவும் சக்தி யற்றுக் கிடந்தபோது, இனி என்னாற் பயனில்லை யென்று சொல்லிக்கொண்டே, அச் சிறுவர்கள் என்னைக் கீழேபோட்டு மிதித்து நசுக்கிக் கொன்றார்கள்.

P31-8

உடனே நான் பூமிக்குள்ளே ஒரு நாகப்பூச்சி வடிவத்தை அடைந்தேன். நிலத்தின் மேற்புறத்தில் இருந்தாலன்றோ நம்மை மனிதர்கள் துன்பப்படுத்து-வார்கள், நாம் பூமியின் உட்புறத்தில் இருக்கிறபடி-யால் இங்கு க்ஷேமமாய் உயிர்வாழலாம் என்று நான் நினைத்துக்கொண்டிருக்கையில், ஒருநாள் திடீரென்று பூகம்பம்போல் முன்னும் பின்னும் பூமி அசையத் தலைப்பட்டது. இங்கு என்ன ஆபத்து நேரிடப்-போகிறதோ என்று பயந்து, மெல்ல மேலே நகர்ந்து வருகையில், மீன்வலைஞன் ஒருவன் என்னை விரைந்து இழுத்து, ஓர் ஓட்டிற் போட்டுக்கொண்டான். அங்கு என்னைப்போன்ற நாகப் பூச்சிகள் இன்னும் இருக்கக் கண்டு, சிறிது பயம் தெளிந்து, அவற்றோடு கூடியிருக்-கையில், அவன் மறுநாள் ஏரிகரையில் நின்றுகொண்டு என் கூட்டாளியாகிய ஒரு பூச்சியை அந்த ஓட்டி-னின்றும் வெளியே எடுத்து, அதை இருபுறத்திலும் நன்றாய்ப் பற்றி, இழுத்து நீட்டிப் பார்த்தபிறகு, அதன் உடல் முழுதும் ஊடுருவிச் செல்லும்படி, தன் தூண்டில் முள்ளை அதில் மாட்டினான். அப்போது அது நெளிந்து நெளிந்துப் பட்டபாட்டைப் பார்த்-துக்கொண்டிருந்த எனக்குக் குலை நடுங்கிற்று. சற்று நேரத்திற்குள் என்னையும் அப்படியே எடுத்து, அவ் வலைஞன், தூண்டிலில் மாட்டி ஏரியில் எறியவே, அங்கு நான் தத்தளித்துக் கொண்டிருக்கையில், ஒரு மீன் வெகு வேகத்துடன் நீந்திவந்து என்னை விழுங்கி, அப் பிறவியை வேரறுத்தது. என் தொல்லை இப் பிறவியோடும் முடிந்து விடவில்லை. எத்தனை பிறப்பு பிறந்தேன்! ஒழிந்ததா! உடனே நான் ஒரு பெரிய கோழியின் உருவத்தைப் பெற்றேன்.

'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'

மரணம் வருவது நித்திரை செய்வது போலும், பிறப்பு வருவது அந் நித்திரை தெளிந்து விழிப்பது போலும் என்று பொருள்படத் தெய்வப் புலவர் உரைத்த பொய்யாமொழிக்கு யானே உதாரணமாக ஏற்பட்டேன் என்று சொல்லவேண்டும்.

யான் இவ்வாறு கோழியாய்ப் பிறந்து ஒரு குடிசையில் வாழ்ந்துகொண்டு இருக்கையில், என்னை வளர்த்துவந்த புண்ணியவான், தீபாவளிப் பண்டிகையன்று காலையில், என் இரண்டு கால்களையும் கயிற்றினால் நன்றாய்க் கட்டி, என்னைத் தலை கீழாகத் தூக்கிக்கொண்டுபோய், ஒரு நகரத்தின் கடைத்தெருவில் வைத்திருந்தான். அப்போது அங்கே வந்தவர்களுக்குள் பலர், என்னை இழுத்துத் திருப்பித் திருப்பி, பிசைந்து பிசைந்து பார்த்து, விலைபடியாமையால், போய்விட்டனர். பேரம் பேசிக்கொண் டிருக்கையில்-என் எஜமானன் ஒரு புறத்திலும், என்னை வாங்க வந்தவன் மற்றொரு புறத்திலும் என் தலையையும், கால்களையும் பன்முறை யிழுத்து இழுத்து என் கழுத்தையும் காலையும் ஒடித்துவிட்டார்கள்.

முடிவில் ஒருவன் என்னை வாங்கித் தன் வீட்டுக்குக் கொண்டுபோய், என்னை அனலிற் காட்டிக் காட்டி, என் மயிர்களை யெல்லாம் பிய்த்து, கழுத்தை முறித்து,வாட்டித்தீய்க்கத்தலைப்பட்டான். அப்போது எனக்குக் குற்றுயிர் இருந்தது. என்னை முழுவதும் நன்றாய்க்கொன்று, அப் புண்ணியவான்,வாட்டியிருப்-

பாணுகில் உத்தமமாயிருக்கும். அவ்வாறு செய்யாமல், அவன் என்னை உயிரோடே பதைக்கப் பதைக்கத் தீயிலிட்டு வாட்டி வதைத்துக்கொண் டிருந்தான்.

அத் தருணத்திலே யான் விழித்துக்கொண்டேன். என் இதயம் படபடவென்று அடித்துக்கொண் டிருந்தது. உடல் முழுவதும் வியர்வை ஒழுகிற்று. இதுவரையில் நான் அனுபவித்துவந்த துன்பமெல்லாம் கனவென்று தெரிந்துகொண்டு, என் நாற்காலியை விட்டு எழுந்தபோது, சில நிமிஷங்களுக்கு முன்னே நான் கத்தியினுற் குத்தி விளக்கிற் காட்டிச்சுட்ட விட்டிற்பூச்சி அங்கு விழுந்துகிடப்பதைக்கண்டு, ஐயோ! யான் கொடும்பாவி யானேனே! இப் பூச்சி உயிர்நீத்தபோது என்ன பாடு பட்டிருக்கும்! இந்த ஜந்துக்கள் அஃறிணைப் பொருள்களென்றும், மானிடர்க்கு இருப்பதுபோல் அவற்றிற்கு அவ்வளவு துன்பம் இருப்பதில்லை என்றும் நினைத்த என் பேதைமையிருந்தவாறு என்னே! என்னே! என்று பிரலாபித்து, நான் வழிபடு கடவுளை நோக்கி, என்னை மன்னித்தருளும்படி குறையிரந்தேன்.

இவ்வளவு பெரிய கனவையும் அருளானந்தம் என்னும் அக் கனவான் இரண்டு மூன்று நிமிஷத்துக்குள்ளே கண்டனர் என்றும், அவர் அங்ஙனங் கண்டது அவருக்கும், அவர் மூலமாய் உலகில் உள்ளவருக்கும் உண்மையை விளக்குமாறு அருளுருவாக விளங்குங் கடவுள் செய்த திருவிளையாடல் என்றும் மனந்தேறி அன்று முதல் அவர் ஜீவவதையை முற்றுங் கைவிட்டு வாழ்ந்துவந்தனர். எளிய உயிர் என்று இகழ்ந்து எண்ணலாகாது.

'வலியார்முற் றன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.'

ஒருவன் தன்னினும் மெலியாரை அருளில்லா-தவனாய்த் துன்பப்படுத்தச் செல்லும்போது, அவன் தன்னினும் வலியார் தன்னை வருத்துவதற்காக வரும்-போது தான் அஞ்சி நிற்கும் நிலையை நினைக்கக்கட-வன் என்று பொருள்பட நாயனார் கூறிய அமுத வாக்கை மறவாது, ஒவ்வொரு பிராணிக்கும் தன் உயிர் தித்திப்பே யாகும் என்பதை உணர்ந்து நாம் ஒழுகுவோமாக.

'அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.'

வேறோர் உயிருக்கு நேரிட்ட துன்பத்தைத் தனக்குற்ற துன்பத்தைப் போல் பாவித்து, அதைக் காப்பாற்றானாகில், அவன் எவ்வளவு அறிவாளனா யிருக்கினும் பயனில்லை யென்று நமது பெருநாவலர் கூறிய உறுதியுரையை எவரும் மறவாதிருப்பாராக.

## 8. சேக்கிழார்

பெரிய புராணம் என்னும் அரிய நூலைச் செய்தருளிய சேக்கிழார் என்னும் பெரியார், தொண்டைநாட்டுப் புலியூர்க் கோட்டத்துள் விளங்கும் குன்றத்தூர் என்-னும் திருப்பதியில் வேளாண் குலத்தில் சேக்கிழார் மரபில் அவதாரஞ் செய்தனர். இவரது காலம் பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்ப.

பெற்றோர் இவரை **அருண்மொழித் தேவர்** என்னும் அருமைத் திருப்பெயரான் அழைத்தனர். ஆயினும், மரபுபற்றி இவருக்குச் சேக்கிழார் என்பதே சிறப்புப் பெயராக வழங்குவதாயிற்று. **பாலறு வாயர்** என்பவர் இவருக்குத் தம்பியார். இவரும் தம்பெற்றோர் மகிழ, செவ்வனம் வளர்ந்து வந்தனர்.

பின்னர், அவ்விருவரும் நல்லாசிரியரை யடுத்து, இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்றனர். மூத்தவர் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மூத்தவராகவே விளங்கினர். இப்படிப் பதினாறு யாண்டுகள் நடந்தன, அந்நாளில் நமது அருண்மொழியார் புலமை நிரம்பி, புகழ்பெற்று விளங்கியிருந்தனர்.

இஃது இங்ஙனமாக, அக்காலத்தே சோழமண்டலத்தை அடிப்படுத்து ஆண்டுவந்த **அனபாயன்** என்னும் அரசர்பெருமான், ஒருநாள் தன் அவையில் நிறைந்திருந்த அறிஞர்களை நோக்கி, 'புலவீர், யான் உங்களை இப்போது ஒரு மூன்று கேள்விகள் கேட்க விழைகின்றேன்; நீங்கள் அவற்றிற்குத் தக்க விடை தருதல் வேண்டும்' என்று வேண்டினான். அப் புலவர்கள், 'அப்படியே' என்று ஒப்பினர். அதன்மேல் அரசன், 'புலவீர், நிலத்தினும் பெரியது எது? மலையினும் பெரியது எது? கடலினும் பெரியது எது?' என்று, தன் வினாக்களை வெளியிட்டனன். இடவே, புலவர்கள், 'என்னே, இவ்வினாக்கள் புதுமையாகக் காண்கின்றன, இவற்றிற்கு என்ன விடை இறுப்பது!' என்று மயங்கி, வாட்டமுற்று வாளா இருந்தனர். அரசனும், 'ஏது! இவர்களால் 'இவற்றிற்கு விடையிறுக்க இயலாது போலும்' என்று நினைத்து சும்மா இருந்துவிட்டான்.

நாள்பல சென்றன. அரசன் கேட்ட வினாக்கள் ஆங்காங்கே சென்று பரவின. அவற்றைப்பற்றி, ஒரு நாள், குன்றத்தூரிலிருந்த அருண்மொழித் தேவரும் அறிவாராயினர். உடனே, அப்பெரியார் அவ்வினாக்களுக்கு ஏற்ற விடையாக, மூன்று குறள்வெண்பாக்களை முறையாக எழுதி, அரசன் சமுகத்திற்கு அனுப்பினர். அவை இவை :

1. வினா : நிலத்தினும் பெரியது யாது?

விடை : காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனி
ஞாலத்தின் மாணப் பெரிது [னும்

2. வினா : மலையினும் பெரியது யாது?

விடை : நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

3. வினா : கடலினும் பெரியது யாது?

விடை : பயன்தூக்கார் செய்த உதவி நயன்றூக்
நன்மை கடலிற் பெரிது. [கின்

இவ்விடையைக் கண்ட வேந்தன் பெரிதும் வியப்புற்று, சிவிகை யொன்றை யனுப்பி, சேக்கிழாரைத் தன் அவைக்கு அழைத்துவரச்செய்து பெரிதும் பாராட்டி, பற்பல சிறப்புக்கள்செய்து, அவரைத் தன் அமைச்சர் பெருமானாக அமர்த்திக்கொண்டனன். கொண்டபின், அவர்க்கு, 'உத்தம சோழப் பல்லவ ராயர்' என்னும் பட்டப்பெயரையும் சூட்டினன். சேக்கிழார் அமைச்சராகி, அரசியலைச் செவ்வனம்நடத்தி, அனபாயற்குப் புகழும் புண்ணியமும் பெருகச் செய்துவந்தனர்.

இஃது இவ்வாறாக, அருண்மொழித் தேவருக்கு, அந்நாட்டிலுள்ள திருநாகேச்சுரம் என்னும் க்ஷேத்திரத்தில் அன்பு பெருக, அவர் அத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானை முப்போதும் எப்போதும் வழுத்தி வணங்குவா ராயினர். அந்த அன்பு காரணமாகத் தம் பதிக்கருகில் ஆலயம் ஒன்று எடுப்பித்து, அதற்குத் திருநாகேச்சுரம் என்னும் பெயரையே வழங்கினர். அந்த ஆலயம் இன்றும் நின்று விளங்குகின்றது.

இங்ஙனம் சில நாளெல்லாம் செல்ல, அனபாயன் அவையிலிருந்த புலவர்கள் **சீவகசிந்தாமணி** என்னும் சிறந்த நூலைப் பாராட்டிப் பேசி, அந்நூலுக்கு நாள்தோறும் உரைவிரிப்பா ராயினர். சோழன் அதன் சொல்வளம் பொருள்வளம் முதலியவற்றைக் கேட்டு, உவப்புக் கொண்டு புகழ்ந்து பேசிக் கேட்பானாயினான்.

அதுகண்ட சேக்கிழார் சோழனை நோக்கி, 'அண்ணலே, சீவகசிந்தாமணி என்னும் நூல் சிறந்ததோர் இலக்கியம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆயினும், அஃது உம்மைப்போன்ற மன்னன் ஒருவன் வரலாற்றை வகுத்துக் கூறும் ஒரு கதையே யன்றி, உயிர்க்கு உறுதிபயக்கும் உண்மைக் கதை யன்றே? அதனை ஆதரவோடுங் கேட்டுப் பெறும் பயன் யாது?' என்று வினவினர்.

மன்னன் அவ்வுண்மையை உணர்ந்து, 'உண்மைக் கதை யாவதும், உயிர்க்கு உறுதி பயப்பதும் ஆகிய உயர் நூல் எது? உண்டேல் உரைக்க' என்று கேட்டனன். 'அரசே, சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திகள், அடியார்களைத்

தொகைப் படுத்தி, திருத்தொண்டத் தொகை என்னும் பதிகத்திற் பாடியருளினர். அதனை அடியாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார் அந்தாதியாகப் பாடியிருக்கின்றனர். அந்த அடியார் பெருமைகளை அன்புடன் கேளும்' என்று கூறி, அவ்வடியார்பெருமைகளை நாள்தோறும் நல்முறைக்கூறி வந்தனர். அரசன் அவற்றைக் கேட்டு, பேரன்பு கொண்டு, 'அமைச்சர் பெருமானே, இவ்வடியார் பெருமைகள் நன்குவிளங்குமாறு பெரியதோர் புராணமாகச் செய்தருளல் வேண்டும்' என்று வேண்டினன். சேக்கிழார் அரசன் வேண்டுகோளுக்கு இணங்கி, 'அவ்வாறே ஆகுக' என்று கூறினர்.

பின்னர், சேக்கிழார் அரசன்பால் விடைபெற்று, தில்லையம்பதியை அடைந்து, நடராஜப் பெருமானை வணங்கி, 'அடியார் பெருமை எனது சொல்லின் அளவினதாமோ!' என்று நிற்கையில், உலகேலாம் என்னும் ஒரு சொல் அங்கு அனைவரும் கேட்க எழுந்தது. சேக்கிழார் பெருமான் அச்சொல்லையே தொடக்கமாகக் கொண்டு, அடியார் சரிதங்களை அருமையுறப் பாடி, பெருமையுற முடித்து, பேரியபுராணம் எனப் பெயரிட்டனர்.

புராணம் முடிவு பெற்றதை யுணர்ந்த வேந்தன், பெரிதும் மகிழ்ந்து, தில்லைப்பதியை அடைந்து, எல்லாம்வல்ல இறைவன் திருமுன், புலவரும் புரவலரும் மாந்தரும் கூடிய் பேரவையில், அரங்கேற்றஞ் செய்வித்து, சேக்கிழாரையும் பெரிய புராணத்தையும் யானைமீதேற்றி, தானும் அருகி லிருந்து, நகர்வலம் செய்வித்துப் போற்றினன். பின்பு, சேக்கிழார் நாய-

ருக்கு, தொண்டர்சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயரும் திகழச் செய்தனன்.

பின்னர், சேக்கிழார் அமைச்சுத் தொழிலைக் கைவிட்டு, செம்மனச் செல்வராய், சிதம்பரத்தில் விளங்கி யிருந்தனர். அனபாயன் அவரிடத்துப் பேரன்புடையனாய் வாழ்ந்து வந்தான்.

சுமார் நாற்பது யாண்டுகளுக்கு முன் விளங்கிய கவிஞர் பெருமானாகிய ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் சேக்கிழார்மேல் பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்தம் ஒன்று பாடியிருக்கின்றனர். அதினின்று ஒரு கவியை இங்கே கூறுவோம்:

பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப்
பாடிய கவிவலவ
பயனில தாகுஞ் சிந்தா மணிவழி
படர்தலை னப்போதித்

துத்திச் சுமையொரு தோள்வைத் திடுபு
லுயர்த்தோன் மனமடியார்
உறுசெய லுடைப் புரிமதி வலவ
வொலாவரு கந்தர்திறம்

முத்தித் திறமல வென்றளவிலர்பான்
முற்றிச் சிவமடைய
முயல்செயல் வலவ வயற்கண் மடைச்செறி
முத்தமனை த்தினையும்

தத்திப் புனல்பாய் குன்றைத் திருமுனி
தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல்
தாலோ தாலேலோ.

# 9. குடும்பவாழ்க்கையும் கடமையும்

ஒரு குடும்பத்தார் அனைவரும் ஒத்துச் சுகமாய் வாழ்ந்துகொண்டிருப்பதற்கு அவர்கள் ஒருவர்க் கொருவர் அன்பு பாராட்டிக்கொண்டு ஆதரவாயிருப்பதே முதற்கடமையாம். ஆயினும், அதுமாத்திரமே போதாது. அனைவரும் அவரவர்க்குரிய கடமைகளையும் தவறாமல் செய்தல் வேண்டும். கடமையாவது, இனிப்பாயிருந்தாலும், இராவிட்டாலும் அவரவர் அவசியம் செய்ய வேண்டிய நியாயமான காரியமாம். இருக்க வீடு, உடுக்க உடை, உண்ண உணவு, படுக்கப் பாய் முதலிய தமக்குத் தேவையான யாவும் நாள்தோறும் சித்தமாயிருக்கக் காணும்போது, சில சிறுவர்கள், இந்தப்பொருள்கள் எல்லாம் தாமே வருகின்றன என்று நினைத்து, அவை தமக்குக் கிடைக்கிற வழி இன்னது என்பதை முழுதும் மறந்துவிடுகிறார்கள்.

ஆறு பிராயமுள்ள பையன் ஒருவன், ஒரு நாள், 'இனி என்னை நானே பாதுகாத்துக்கொள்ளுவேன்; ஒருவருடைய உதவி எனக்கு வேண்டுவதில்லை; குழந்தைகளைப்போல் இனி ஒருவரும் எனக்கு உடை உடுத்தவும் வேண்டியதில்லை, உணவு ஊட்டவும் வேண்டுவதில்லை; நானே ஆடை அணிந்துகொண்டு, சோறும் எடுத்துப் புசிப்பேன்' என்று, இப்படிப் பெருமை பேசினான்.

அண்டையிலிருந்து அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு பையன், 'ஆம், நீ சொல்வது மெய்தான்; உண்ணவும் உடை உடுத்துக்கொள்ளவும் உனக்கு நன்றாய்த் தெரியும்; நல்லது, அதிருக்கட்டும்; உனக்கு உண்ண உணவு கிடைக்காமற்-

போனாலும், உடுக்க உடை கிடைக்காமற்போனாலும் அப்போது நீ என்ன செய்வாய்?' என்றான். அதற்கு அச் சிறுவன், 'ஆனால் என்ன, கடைக்குப் போய், வேண்டியதை வாங்கிக்கொள்கிறேன்' என்று சொல்ல, அவன், 'மெய்தான்; வேண்டியதை கடை-யில் வாங்கிக்கொள்ளலாம் அவை வாங்குவதற்குப் பணம் வேண்டுமே, அதற்கு என்ன செய்வாய்?' என்று கேட்க, சிறுவன், 'பணத்துக்கு என்ன குறைவு, அப்பாவைக்கேட்டு வாங்கிக்கொள்கிறேன்' என்றான். 'இப்போது பார்த்தாயா? உன்னை நீயே பிறருதவியில்லாமல் காத்துக்கொள்ள முடியவில்லையே! அப்பா உனக்கு உண்டி உடைகளாவது, அவற்றை வாங்கப் பணமாவது கொடுத்தா லொழிய உனக்குத் தேவையானது கிடைக்காது அல்லவா?' என்று மூத்தவன் சொல்ல, அது கேட்டு இளையவன், 'ஆம், இப்போது நீ சொல்வது சரிதான்; ஆனால், நம்முடைய தந்தைக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது?' என்று வினவ, 'நம் தகப்பனார் நாள்முழுதும் வேலைசெய்து பணம் சம்பாதிக்கிறார்' என்றான்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில், பொழுது சாயுந் தருண மாயிற்று; வெளியே வேலை செய்யப் போயிருந்த தந்தை வெயிலின் வெப்-பத்தினாலும், காலைமுதல் தொழிற்சாலையில் ஓயாது உழைத்த வருத்தத்தினாலும் மிகவும் களைத்து ஓய்ந்தவ-னாகி, வீட்டுக்கு வந்தான். அவன் வீட்டிற்கு வெளியே வருவதைப் பார்த்து, மகன் அவ்விடம் ஓடி, 'நீங்கள் இந்நேரம் எங்கே போயிருந்தீர்கள்?' என்று கேட்க, அவன், 'வேலை செய்யத் தொழிற்சாலைக்குப் போ-யிருந்தேன்' என, மகன், 'அப்பா, தொழிற்சாலைக்குப்

போய் அங்கே நாள்முழுதும் வருந்தி வேலைசெய்வது உங்களுக்கு விருப்பமா யிருக்கிறதா? அதைப் பார்க்கிலும் நம்முடைய தோட்டத்திலே பூஞ்செடிகளின் இடையே உட்கார்ந்து, வினோதமாய்ப் புத்தகங்களைப் படிப்பதும்,உல்லாசமாய் உலாத்துவதும்,இன்பமாய்ப் பேசுவதுமாகப் பொழுது போக்குவது அதிக ஆநந்தமா யிராதா?' என்றான்.

அதுகேட்டுத் தந்தை அத்தோட்டத்தில் அமைத்திருந்த ஒருநாற்காலியில் உட்கார்ந்து, மகனை யெடுத்து மடியில் உட்காருவித்துக்கொண்டு, 'குழந்தாய், நீ சொல்வது சரிதான்; தொழிற்சாலையிற் போய் வருந்தி உழைப்பதைப் பார்க்கிலும், நமது தோட்டத்திலே பூஞ் செடிகளின் மத்தியில், பரிமளத்தோடு குளிர்ந்த காற்றடிக்க உட்கார்ந்து, நீங்க ளெல்லாரும் சுற்றிலும் சூழ்ந்து களித்து விளையாடிக்கொண்டிருக்க, வினோதமாய்ப் படித்துக்கொண்டு பொழுது போக்குவது எனக்கும் சந்தோஷமே; ஆயினும், அப்படி நான் சும்மா உட்காந்திருக்க நினைக்கும்போதெல்லாம் ஏதோ ஒன்று வந்து என்னைக் கடித்துக் கொட்டுகின்றது; இல்லாவிட்டால் நான் அப்படியே உட்கார்ந்து பொழுது போக்கிக்கொண் டிருப்பேன்' என்றான். மகன், அப்பா, அப்படி உங்களை எது கொட்டுகின்றது? வண்டா? குளவியா? என்றதற்கு, தகப்பன், 'அது வண்டும் அன்று,குளவியும் அன்று; இவைகளைப் பார்க்கிலும் மிகக் கொடியதான வேறொரு பொருள், நான் சும்மா உட்காந்திருக்கும்போ தெல்லாம், "நீ இப்படிச் சும்மா இருப்பது மிகவும்பிசகு, இப்படிச் சோம்பேறியாய் உட்காந்திருந்தால், உன் பெண்சாதி பிள்ளைகளுக்குச் சோறு, துணி வாங்கிக் கொடுத்து,

அவர்களைக் காப்பாற்றுகிறவர் யார்? நீயும், உன் இனத்தாரும் சவுக்கியமாய் வாழ்வதற்காகப் பொருள் சம்பாதிக்கும் பொருட்டு நீ எங்கேயாவது போய், உழைத்துவரவேண்டுவது அவசியம்' என்று சொல்லி, எப்போதும் என்னைத் தூண்டுகின்றது; அப்படித் தூண்டுவது என்னவென்று கேட்கிறாயோ? அது-தான் நம்மை ஒருபோதும் கைவிடாத நண்பனுன மனச்சாட்சி என்பது. இம் மனச் சாட்சி எப்போ-தும் நியாயமானவைகளையே செய்யவேண்டுமென்று எனக்கு உபதேசிக்கின்றது; சும்மா விலாசமாய் உட்-கார்ந்திருப்பதைப் பார்க்கிலும், கடமையான காரியங்-களைச் செய்வதில் எனக்கு அதிகமானவிருப்பம் உண்-டாக்குகின்றது; கடமையில் எனக்குக் கருத்து உண்-டாக்குவது இம் மனச் சாட்சி ஒன்று மாத்திரமே அன்று, மற்ருென்றும் உண்டு; அதாவது, உங்க-ளிடத்தில் எனக்குள்ள பேரன்பேயாம். மேலும், தான் வருந்தி உழைத்துத் தன் சுற்றத்தாரைக் காப்-பாற்றுவது தருமமாயும் இருக்கின்றது. உங்களிடத்-தில் எனக்கு அன்பு அதிகமா யிருப்பதுபற்றி, நீங்க-ளெல்லாரும் ஒரு குறையு மின்றிச் சுகமா யிருக்கக் காண்பதே எனக்குப் பெரிய சுகமா யிருப்பதால், அப்படி நீங்கள் எல்லாரும் சுகமா யிருக்க வேண்டு-மென்றே நான் வருந்தி உழைக்கிறேன். ஆதலால், அவரவர் செய்ய வேண்டிய காரியங்கள் கடினமான-வையா யிருந்தாலும், அன்புபற்றிச் செய்யவேண்டி-யவையானல், அவற்றில் ஒருபோதும் வருத்தம் தோன்ருது; அதில் உற்சாகமே உண்டாகும்' என்ருன்.

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.'

தந்தை இவ் வண்ணம் சொன்னதைக் கேட்டு, மகன், 'ஆயின், நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுதும் இப்படியே வருந்தி யுழைத்து, எங்களைக் காப்பாற்றிக்கொண் டிருக்கவேண்டுவதுதானே' என்று சொல்ல, தகப்பன், 'அப்படி நான் ஒருபோதும் செய்யலாகாது; அப்படி நான் செய்துவருவேனுல், உங்களுக்கெல்லாம் தீங்கு செய்தவன் ஆவேன். ஏனெனில், நானும் உங்கள் அன்னையும் என்றைக்காவது உழைக்கச் சக்தி யற்றுவது, நோயுற்றுவது இருக்கும்படியாகும்; அல்லது தள்ளாமையாவது வரும்; ஒரு வேளை இறந்துபோனுலும் போவோம். அப்படிப் பிள்ளைகளுக்குமுன் பெற்றோர் இறந்துபோவது உலகத்தில் வழக்கமே. தெய்வச் செயலால் அப்படியே நேரிடுமானுல், அப்போது உங்கள் கதி என்னவாகும்? உள்ள நாள் உள்ளமட்டும் உங்களை ஒரு வேலையும் செய்யவொட்டாமல் வீட்டில் நிழலிலேயே உட்கார வைத்துக் காப்பாற்றிவிட்டு, திடீரென்று இறந்து போனுல், நீங்கள் அப்புறம் திக்குத்திசை தெரியாமல், நடுக் கடலில் திசைதப்பி அகப்பட்டுக்கொண்ட மரக்கலம் போல், அல்லாடிப்போவீர்கள். ஆதலால், பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமையாவது, அப் பிள்ளைகள் உலகத்தில் உள்ளநாள்மட்டும் ஒருபோதும் வருத்தப்படாதபடி தம்மையும் தம் இனத்தவரையும் காப்பாற்றிக்கொண்டு, பின்னும் உலகத்தார்க்கு உபயோகமான நற்செயல்களைச் செய்யத்தக்க வழிவகைகளை அவர்களுக்குக் கற்பித்துக் கொடுப்பதேயாம்.

மனிதர்கள் மாத்திரமேயல்ல; பசு பக்ஷி மிருகாதிகளும் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டிய வழியைத் தமது குட்டிகளுக்குக் கற்பித்துக்

கொடுத்து, அப்படிக் காத்துக்கொள்ளத்தக்க வயது அவைகளுக்கு வந்தவுடனே, தாம் அவைகளைப்பற்றிக் கவலைகொள்ளாமல் ஒதுங்கிவிடுகின்றன. பூனை தன் குட்டிகளைப் பார்த்துச் சீறுவதை நீ பல முறையும் பார்த்திருப்பாயே. அக்குட்டிகள் மிகச் சிறியவையா யிருக்கும்போது, அவற்றைப் பார்த்துப் பூனை அப்படிச் சீறுகிறதா? இல்லையே. அக்காலத்தில் அவற்றை அதிகமாய்ச் சீராட்டிப் பாராட்டி, ஊட்டி வளர்த்து, விளையாடவும் கற்றுக் கொடுத்து, அவை தம்மைத் தாமே காத்துக்கொள்ள வேண்டிய வழிகளையும் கற்பித்துக் கொடுக்கின்றது; பிறகு சீறுவதன் கருத்து என்னவெனில், 'இப்போது உனக்கு யோக்கியமான வயதுவந்துவிட்டது; இனி, நான் உன்னைப் போஷிக்கமாட்டேன்; நீ உனக்குவேண்டிய இரை முதலியவைகளை நீயே தேடி உன்னைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்' என்பதேயாம்.

பறவைகளும் இப்படியே தம் குஞ்சுகளுக்குக் கற்பிக்கின்றன. பறவைக்குஞ்சுகள் இறகு முளைத்து உறுதிப்பட்டவுடனே, பெரிய பறவை தன் குஞ்சுகளுக்குப் பறக்கக் கற்பித்துக்கொடுப்பதை நீ எப்போதாவது பார்த்திருக்கிறாயா? பறக்கக் கற்றுக்கொண்ட பின்பும், நன்றாய் நெடுந்தூரம் பறக்கத் தெரிந்துகொள்ளுமளவும் பெரியபறவை குஞ்சுகளை இரை கொடுத்துக் காத்துக்கொண்டு வருகின்றது. குஞ்சுகள் நன்றாய்ப் பறக்குஞ் சக்தியை அடைந்து, தமக்குத் தாமே இரை தேடிக்கொள்ளுந் திறமை அடைந்தபின்பு பெரியபறவை அக் குஞ்சுகளைப்பற்றிக் கவலைகொள்வதில்லை. இவ்வண்ணம் இவ்வுலக முழுதும், முதலில் தம் குழந்தைகளை உணவு முதலியவை

அளித்துக் காப்பாற்றிய பின்பு, அவற்றிற்குத் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய வழி வகைகளைக் கற்பித்துக் கொடுப்பது பெற்றோருடைய கடமையாம் என்று சொன்னான்.

அதுகேட்டு அச்சிறுவன் சற்று விசனமுற்று, 'ஆயின், நாங்கள் சற்றே வல்லவர்களாகி வெளியே போய்ச் சம்பாதிக்கத் தக்கவர்களான பிறகு, நீங்கள் எங்களைப்பற்றிக் கவலைகொள்ளாமல் உபேக்ஷைசெய்து விலகி விடுவீர்களோ?' என்று கேட்க, தகப்பன், 'குழந்தாய், ஆம், அப்படித்தான் செய்யவேண்டும்; ஆயினும், நீங்கள் கல்வி கேள்விகளில் மேன்மேலும் தேர்ச்சியுடையவர்களாகி, நற்குண நற்செய்கைகளும், பெற்றோர்க ளிடத்தில் நன்றி பாராட்டும் குணமும் உடையவர்களாகுந்தோறும் எங்களுக்கு உங்களிடத்திலுள்ள அன்பு பதின்மடங்கு அதிகமாகும். அப்போது நாமெல்லாம் ஒருவர்க்கொருவர் நேசர்கள் போல் ஆவோம்; அவ்வளவே யொழிய, அன்பு ஒரு போதும் மாறிப்போகாது. மனிதர்களுள், தாய்க்குத் தன் குழந்தையினிடத்தில் எவ்வளவு அன்பு இருக்கிறதோ, அவ்வளவு அன்பு மிருகஜாதிகளிலும் உண்டு. ஆனதுபற்றியே, "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்ற பழமொழி வழங்குவதாயிற்று. ஆயினும் மனிதர்களுக்குள்ள அன்பு அப் பிராணிகளுக்குள்ள அன்பைப் போன்றதன்று: அற்பப் பிராணிகளுக்குள்ள அன்பு, ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்துபோனால், அவ்வளவோடு ஒழிந்து போகின்றது; மனிதர்களுக்கோ ஒருவர்க்கொருவர் நம்பிக்கையும் மரியாதையும் விசுவாசமும் செவ்வையாய் உண்டாகும்போது, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் ஆதியி-

லிருந்த அன்பு நேசமாக மாறி, ஆயுளளவும் அது நீடித்திருக்கின்றது. அப்படி அன்பில்லாத மனிதர்கள் எக்காலத்தும் ஏற்றம் பெருமல் அவதிப்படுவார்கள்.

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்."

மேலும், மனிதர்கள் தம்முடைய குழந்தைகளை, பசு பக்ஷி மிருகாதிகள்போல், அவ்வளவு சீக்கிரத்தில் வெளியே அனுப்பிவிடமாட்டார்கள். ஏனெனில், ஒரு பூனை தன் குட்டிக்கும், ஒரு பறவை தன் குஞ்சுக்கும் கற்பிப்பதைப் பார்க்கிலும், நாம் நம்முடைய குழந்தைகளுக்குக் கற்பிக்க வெகுகாலம் செல்லும்; அன்றியும், மிக்க கருத்தும் கவனமும் செலுத்திக் கற்பிக்கவேண்டி யிருக்கும். அதுவுமன்றி, உங்களுக்கு விஷயங்களைப்பற்றி யோசிக்கவும், பேசவும் கற்பிப்பதோடு, உண்ணவும் உறங்கவும் நிற்கவும் நடக்கவும் ஓடவும், கடைசியாய், உலகத்தார்க்கு உபயோகப்படும்படி யோக்கியனுயிருக்கவும் கற்பித்துக் கொடுக்கவேண்டும். பிறர் உனக்கு உதவிசெய்தது போலவே பிறர்க்கு நீ உதவி செய்யவேண்டிய வகையையும் நீ கற்றுக்கொள்ளவேண்டும்' என்ருன்.

'அப்பா, எனக்காக நீர் இவ்வளவு வேலைசெய்ய வேண்டியிருக்கிறதா? எனக்கு நீங்கள் கற்றுக்கொடுக்க வேண்டியதெல்லாம் பாடம் படிக்கவும் கணக்குப் போடவுமே என்று நான் இதுவரையில் எண்ணியிருந்தேனே!' என்று அச்சிறுவன் மிக்க வியப்புடன் சொல்ல, தகப்பன், 'குழந்தாய், நீ கற்றுக்கொள்ளவேண்டிய விஷயம் அநேகம் இருக்கின்றன.

பலகையில் கணக்குப் போடவும், சட்டமெழுதவும் கற்றுக்கொள்வதற்கு முன்னமே நீ அநேக விஷயங்-ளைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கிறாய். பிள்ளைக-ளெல்லாம் குழந்தைப்பருவம் முதற்கொண்டே பிறர் செய்வதைப் பார்த்து அவ்வண்ணமே தாமும் செய்-கின்றார்கள்; பிறர் எப்படி நினைக்கிறார்களோ அவ் வண்ணமே தாமும் நினைக்கக் கற்கிறார்கள். பலவாறு சொல்லி என்ன, ஒருவர் சொல்லிக் கற்றுக்கொடுப்ப-தைப் பார்க்கிலும், சிறுவர்கள் தம் கண்ணால் காண்கிற படியே நடக்க அதிகமாய்த் தெரிந்துகொள்கிறார்கள். முக்கியமாய்ப் பிள்ளைகளுடைய கண்ணெதிரில் நடத்-திக் காட்டுகிறவர்கள் பெற்றோர்களே யாகையால், பெற்றோர்கள் கற்பித்தாலும் கற்பிக்காவிட்டாலும், அவர்கள் நடத்தையெப்படியோ அப்படியே தாமும் நடக்கப் பிள்ளைகள் முயல்கிறார்கள். இக்காரணம்-பற்றியே,'தாயைப் பார்த்து மகளைக் கொள்' என்னும் பழமொழி உலகில் வழங்குகின்றது. ஆதலால், தம் மக்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாய் வாழக் கற்-றுக் கொள்ளும்பொருட்டு, அவர்கள் கண்ணெதிரில் தாம் நடந்து காட்டவேண்டுவது பெற்றோர்களுடைய கடமையாம்' என்று சொன்னான்.

அதுகேட்டு மகன், 'ஆயின், இப்போது உங்களு-டைய நன்னடக்கையைப் பார்த்து அவ்வண்ணமே நாங்கள் நடக்கக் கற்றுக்கொள்வோமானால், பிறகு இவ்வாறே வேறு சிலர் எங்களுடைய நடத்தையைப் பார்த்து, தாமும் அப்படி நடக்கக் கற்றுக்கொள்-வார்களல்லவா? ஆகலின், யோக்கியர்களாகி, நல்வழி-யில் நடக்கவேண்டிய மாதிரிகளை நீங்கள் எங்களுக்குக் கற்பிப்பீர்களானால், அது பின்னும் பல்லாயிரம் பேர்-


களுக்குக் கற்பித்ததுபோ லாகும்' என்று சொல்ல, தகப்பன், 'ஆம், இப்படி என் குடும்பத்தாருக்கும் மற்றவர்களுக்கும் நன்னெறி கற்பிக்காமல், அவர்களைச் சிறிதும் கல்வியில்லாத சோம்பேறிகளாக்கி, ஒரு வேலையும் செய்யாமல் வீட்டில் உட்கார்ந்துகொண்டு சோறுமாத்திரம் தின்பவர்களாய்ச் செய்வேனானால், நான் என்னுடைய கடமையைச் செய்யாதவனாகி, அவர்களுக்குத் தீமை விளைத்தவனாவேன்' என்றான்.

'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.'

## 10. விஷ ஜ்வரம்

மலேரியா அல்லது விஷஜ்வரம் என்பது அபாயகரமான ஒரு வியாதி. இதனால் பிரதி வருஷமும் ஆயிரக்கணக்கான மனிதருக்குத் தேகதுர்ப்பலமோ அல்லது மரணமோ சம்பவிக்கிறது. கொசுக்கடியின் மூலமாய் மனிதனுடைய இரத்தத்தில் புகுந்து, அந்த இரத்தத்தையே உணவாகக் கொண்டிருக்கிற கிருமிகளால் இந்த வியாதி உண்டாகிறது. இரத்தத்திலே சிவப்பு அணுக்கள், வெள்ளையணுக்கள் என்னும் இருவகை அணுக்கள் இருக்கின்றன. விஷஜ்வரக் கிருமிகள் சிவப்பணுக்களைப் பிடித்து, அவைகளில் பலவற்றை அழித்து விடுகின்றன; இக் காரணத்தினால்தான் விஷ ஜ்வரத்தினால் வருந்தும் ஒருவன், உடல் வெளுத்து மெலிந்து போகிறான். மேலும், அந்தக் கிருமிகளால் மண்ணீரலில் வீக்கமும் நோயும் ஏற்பட்டு, காலக்கிரமத்தில் அது ஜ்வரக்கட்டியாக ஏற்படுகிறது.

விஷஜ்வரக் கிருமிகளில் மூன்று வகைகள் உண்டு; அவற்றுள் ஒரு வகையானது வெகு வேகமாய் விருத்தி யடைகிறபடியால், இருபத்துநாலு மணி நேரத்துக்கு ஒரு தடவை அவைகளிலிருந்து நூதன கிருமிகள் உற்பத்தியாகின்றன; மற்றொரு வகையான கிருமிகள் நாற்பத்தெட்டுமணி நேரத்துக்கு ஒருதடவை விருத்தி யடைகின்றன; மூன்றும் வகையில் நூதன கிரு-



மிகள் உற்பத்தியாவதற்கு எழுபத்திரண்டு மணி நேரம் பிடிக்கிறது. இப்படி விருத்தி யடைவதெல்லாம் மனிதனது இரத்தத்தில் நேரிடுகிறபடியால், அந்த இரத்தத்தில் நூதன கிருமிகள் முட்டையிலிருந்து வெளிப்பட்டவுடனே, ஒருவனுக்கு ஜ்வரம் காண்கிறது. ஆகையால், அவனுக்குக் காணும் ஜ்வரம், கொசுக்கடியினால் அவனுடைய தேகத்துக்குள் என்ன விதமான

கிருமி செலுத்தப்பட்டிருக்கிறதோ அதை அனுசரித்ததாய் இருக்கும். முதல் வகையான கிருமியா யிருந்தால், அவனுக்குப் பிரதி தினமும் ஜ்வரம் வரும். இரண்டாம் வகையான கிருமியாயிருந்தால், ஒன்று விட்டு ஒருநாள் ஜ்வரம் வரும்; இது சர்வ சாதாரணமானது. மூன்றும் வகையானதா யிருந்தால் மூன்று நாளைக் கொருதரம் ஜ்வரம் வரும்.

இம் மூன்று வகைக் கிருமிகளில் ஒவ்வொரு வகையைச் சேர்ந்த கிருமிகளால் ஒவ்வொரு விதமான ஜ்வரம் உண்டாகிறது. இந்த மூன்று வகைக் கிருமிகளும் தோற்றத்தில் வேறுபட்டிருக்கும்; ஆயினும், அணுதரிசனி என்னும் பூதக் கண்ணாடியைக்கொண்டு இரத்தத்தைப் பரீக்ஷித்துப் பார்த்தால் அக் கிருமியின் வகையைக்கொண்டு நோயாளிக்கு இன்னவிதமான விஷஜ்வரம் கண்டிருக்கிறது என்று தக்கவைத்தியர் உடனே சொல்லக்கூடும்.

விஷஜ்வரங் கண்ட ஒருவனுடைய இரத்தத்தில் இந்தக் கிருமிகள் அதிகமாக இருக்கக்கூடும்; ஒவ்வோர் இரத்தத் துளியிலும் அவை நூற்றுக்கணக்காய் இருக்கின்றன. பெண்கொசுக்கள் இரத்தத்தை உண்டு ஜீவிப்பவை யாகையால், அவைகள் தங்களுக்கு உணவு கிடைப்பதற்காக மனிதரை நருக்கெனக் கடிக்கும்; அன்றியும், அவைகளை நாம் ஓட்டாமலிருந்தால், ஒவ்வொரு தடவையிலும் பல இரத்தத் துளிகளை உறிஞ்சிக் குடிக்கும்.

கொசுக்கள் எவனுடைய இரத்தத்தை உட்கொள்ளுகின்றனவோ அவனுடைய இரத்தத்தில் விஷ-

ஜுரக் கிருமிகள் இருக்குமாயின், அந்தக் கிருமிகளில் அநேகம் அந்தக் கொசுக்களின் இரைப்பையில் புகுந்துவிடும். அந்தக் கொசுவானது அநோபிலிஸ் (anopheles) என்னும் ஜாதியைச் சேர்ந்ததா யிருந்தால், அதன் இரைப்பையிலே மேற்கண்ட கிருமிகளில் சில விருத்தியாகி, இரைப்பையின் சுவரின் மூலமாய்த் தொளைத்துக் கொண்டு, அவ்வவயவத்தின் சவ்வுக்குள் சென்று, கடைசியாக அதன் உமிழ்நீர்க் கோளங்-



களில் பிரவேசிக்கும். அந்தக் கொசு மனிதனைக் கடிக்கும்போது, தன் உமிழ்நீர்க் கோளங்களில் அடங்கியுள்ள கிருமிகளில் சிலவற்றை அவனுடைய தோலுக்குள் செலுத்துகின்றது; அதனால், கொசு நம்மைக் கடிக்கும்போது தினவு உண்டாகிறது. அந்தக் கிருமிகள் மனிதனுடைய இரத்தத்தில் வெகு வேகமாய் விருத்தியடைகின்றன. அவை ஒரு மனிதனுடைய

உதிரத்தில் போதுமான அளவு விருத்தியடைந்தால், அந்த மனிதனுக்கு ஜுரம் காணும்; அதற்கப்புறம் அது பிரதி 24, அல்லது 48, அல்லது 32 மணி நேரத்திற்கு ஒரு முறை அவனுக்கு வந்துகொண்டே யிருக்கும்.

கொசு விஷஜுர வியாதிஸ்தனைக் கடித்தவுடனே, அது அவனிடத்திலுள்ள கிருமியையும் ஜுரத்தையும் இன்னொருவனிடத்தில் மாற்றமுடியாது. கொசு, விஷஜுர வியாதிஸ்தனது இரக்தத்தை உட்கொண்டபின், கிருமிகள் அதன் உமிழ்நீர்க் கோளங்களில் புகுவதற்கு சுமார் ஒரு வாரம் கழியவேண்டும். மேலும் தொத்து நோய் சம்பந்தமுள்ள கொசு தேகாரோக்கியமுள்ள ஒருவனுக்குள் கிருமிகளைச் செலுத்தினவுடனே, அவனுக்கு ஜுரம் காணாது. ஏனெனில், அந்தக் கொசு, முதலில் சில கிருமிகளையே அவனுக்குள் செலுத்துகிறது; அவை ஜுரத்தை உண்டாக்க லக்ஷக்கணக்காக விருத்தியாக வேண்டும். சாதாரணமாக, கொசுக்கடியுண்டான பிறகு, முதல்தடவை ஜுரத்தை உண்டாக்கப் போதுமான அளவு கிருமிகள் வளர 14 நாளுக்குக் குறையாமலும், 24நாளுக்கு மேற்படாமலும் செல்லும்.

எல்லாக் கொசுக்களுமே விஷஜுரத்தைப் பரவச் செய்யும் சக்தியுடையவை அல்ல. ஆனோபிலைன் என்னும் ஜாதியைச் சேர்ந்த பெண்கொசுக்களுக்கே அந்தச் சாமர்த்தியம் ஏற்பட்டிருக்கிறது.

கொசுக்களில் மேற்சொன்னவை போக, மற்ற வகைகளுக்கு குலிஸைன்ஸ் என்று பெயர். அவை விஷஜுரத்தைப் பரவச்செய்வதில்லை; ஆனால், போகப்

போக யானைக்கால் என்னும் நோயைக் கொண்டுவந்து விடக்கூடிய ஒருவித கடுங் காய்ச்சலை உண்டாக்குகிற பிலேரியா என்னும் கிருமிகளை ஒரு மனிதனிடத்தி-லிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவச் செய்யும்.

வயதுவந்த அனோபிலை கொசுக்கள், சுவரின்-மேல் தங்கும்போது, தம் சரீரங்களை மூலைவாட்டமாக வைத்துக்கொண்டு இருக்கும்: அதாவது, அக் கொசு-வானது, சுவரில் சாய்வாக ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு சிறு முள்ளைப்போல் காணப்படும்; இந்த அடை-யாளத்தைக்கொண்டு நாம் இந்த ஜாதிக் கொசுக்களைத் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் கொசுக்கள் சுவரின்மேல் தங்குகையில் அவற்றின் சரீரம் சுவர்மட்-டத்துக்குச் சரியாயிருப்பதுடன் கூன்முதுகுள்ளவை-களைப்போலவும் காணும். அனோபிலைன் கொசுக்கள் இளங் கபில நிறமுள்ளவைகளாகவோ, கருங் கபில நிறமுள்ளவைகளாகவோ இருக்கும்; குலிஸைன் கொசுக்கள் சாம்பல் நிறமாகவோ, கபில நிறமாகவோ, கருநிறமாகவோ இருப்பதோடு, வெண்ணிறக் கீற்று-களையும் உடையவைகளாகத் தோன்றும்.

எல்லாவிதக் கொசுக்களும் ஜலத்தில் உற்பத்தி-யாகின்றன. ஜலத்திலேயே அவைகள் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கின்றன. புழுவின் நிலையிலுள்ள (Larvse) அல்லது நெளிந்து புரண்டோடும் நிலையிலுள்ள (Wrigglers) கொசுக்கள் 24 மணி நேரமுதல் 48 மணி நேரத்துக்குள் முட்டைகளிலிருந்து ஜலத்தில் வெளிப்-படுகின்றன. அப்போது அவைகள் உணவு கிடைப்-பதற்காக நீர்மட்டத்துக்குக் கீழே இருக்கவேண்டும். சுவாஸம் விடுவதற்காக அவைகள் இடை யிடையே

நீர்மட்டத்துக்குமேலே வரவேண்டியிருக்கிறது; இல்லாவிட்டால் அவைகள் முழுகிப்போகும். அவை தம் உடலின் வால்நுனியில் உள்ள ஒரு குழாயின் மூலமாய் சுவாஸம் விடுகின்றன. நெளிந்து புரண்டோடும் நிலையிலுள்ள கொசுக்கள் நனைந்த புல்லிலாவது ஈரமான தரையிலாவது வளரமாட்டா. அவை, குறைந்தது அரை அங்குலம் ஆழமுள்ள தண்ணீர் இல்லாவிட்டால் ஜீவிக்கமாட்டா.

புழுவின் நிலையிலிருக்கும் அனோபிலென் ஜாதியைச் சேர்ந்த கொசுக்கள் நீர்மட்டத்துக்கு அடியிலேயே தட்டையாய்ப் படுத்திருப்பதையும், துள்ளித்துள்ளிப் பின்பக்கமாய் அசைவதையுங்கொண்டு அவற்றைச் சுல்பமாய்த் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் ஜாதியைச் சேர்ந்த கொசுக்கள் நேரில் தலைகீழாய்த் தொங்குகின்றன; அவைகளுக்கு நீண்ட சுவாஸக் குழாய் உண்டு; அவை நெளிந்து புரண்டு முன்னுக்கு அசைந்து செல்லுந் தன்மையுடையவை.

மேற்கண்ட புழுநிலையிலாவது நெளிந்து புரண்டோடும் நிலையிலாவது அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் வளர்வதற்கு ஆறு முதல் பத்து நாள்வரையில் செல்லும்; சில சமயத்தில் அக்கால அளவு குறைதலும் உண்டு. அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் அவை வளர்ந்துவிட்டால், அவை திடீரென்று தங்கள் தோல்களிலிருந்து வெளிப்பட்டு, தண்ணீரில் துள்ளிக்கொண்டு முற்றும் புதிய பூச்சிகளாகக் காணப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு ப்யூபே அல்லது நிம்ப்ஸ் என்று பெயராம். இந்த நிலையில் அவை

இரண்டுநாள் முதல் நாலுநாள்வரையிலிருக்கும். பிறகு, அவைகள் தண்ணீரின் மேற்பாகத்தில் மிதந்துகொண்டிருக்க, அவற்றிலிருந்து கொசுக்கள் இறக்கைகளுடன் வெளிப்படுகின்றன; இந்தக் கொசுக்கள் முழுவளர்ச்சியுடையவை; ஆதலால் ஒருவேளை உணவு கிடைத்தவுடனே, அவை தம் இனத்து வர்க்கங்களை உற்பத்தி செய்வதற்குச் சித்தமாயிருக்கும். மூன்று நான்கு தினத்தில் அவை, நீரில் தம் முதல்வரிசை முட்டைகளை யிட்டு, இன்னும் அதிக முட்டைகளை யிடுவதற்காக, தமக்கு வேண்டிய இரத்தத்தை உறிஞ்சும்பொருட்டு இராக்காலத்தில் வெளியே புறப்பட்டுப் போகும்.

வீடுகளில் எவ்விதமாகவாவது சேர்த்துவைக்கப்பட்டுள்ள தண்ணீரிலும், குட்டைகளிலும், தொட்டிகளிலும், சாக்கடைகளிலும், குளங்களிலும், கிணறுகளிலும், வாய்க்கால்களிலும், வேறு விதமான நீர்க் கால்வாய்களிலும், கொசுக்கள் உற்பத்தியாகக் கூடும். குறைந்த பக்ஷம் அரை அங்குல ஆழமுள்ள தண்ணீர் தேங்கியிருந்தாலொழிய அவைகள் உற்பத்தியாக முடியாது.

தண்ணீர்ப் பாத்திரங்களை மூடி வைப்பதனால் வீடுகளிலாவது வீடுகளின் சமீபத்திலாவது கொசுக்களைச் சேரவொட்டாமல் தடுக்கலாம். வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் சேரவொட்டாமல் தடுப்பதே மிகவும் முக்கியமான காரியமாகும். தண்ணீர் தங்கக்கூடிய பழஞ் சட்டிகள், கெரோஸின் எண்ணெய் டப்பிகள், உடைந்து போன புட்டிகள் முதலியவற்றைப் போன்ற அநாவசியமான சாமான்களை

வீட்டிலிருந்து ஒழித்துவிட வேண்டும். வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் தேங்கி யிருக்கும் குட்டை-களைத் தூர்த்துவிடவேண்டும்; குட்டைகளைத் தூர்த்து-விடமுடியாத இடங்களிலே, தண்ணீரின் மேல்பாகத்-தில் சிறிது கெரோஸின் எண்ணெயை வாரத்துக்கு இருமுறை ஊற்றவேண்டும். இதனால் புழுவின் நிலையி-லுள்ள கொசுக்கள் எல்லாம் செத்துப்போகும். வீடுகளிலுள்ள கொசுக்களில் சில முன்னமே விஷ-ஜ்வரத்தின் சம்பந்தத்தைப் பெற்றிருக்கக் கூடுமாகை-யால், அக்கொசுக்க ளெல்லாவற்றையும் ஏற்றவாறு முயன்று கொல்வதே உத்தமமான காரியமாகும்.

இப்போது தெரிந்துள்ளவரையில் விஷஜ்வரம் பரவுவதற்குக் கொசுவே காரணமா யிருக்கிறது. விஷஜ்வரம் விசேஷமாயிருக்கிற இடங்களிலிருந்து வரும் தண்ணீரைக் குடிப்பதனால் அந்த ஜ்வரம் உண்-டாகிறது என்பது, அடிக்கடி நடத்தப்பட்ட பரீக்ஷை-களால் மெய்ப்பிக்கப்பட் டிருக்கிறது. ஆகையால், கொசுக்கள் இல்லாதிருக்கும் பக்ஷத்தில் விஷஜ்வரம் இராதென்பது நிச்சயம். ஒருவன் தன்னை எப்போதும் கொசு கடிக்காமல் காத்துக்கொள்ளக் கூடுமானால், அவனுக்கு விஷஜ்வரம் ஒருகாலும் வாராது. இது கொண்டே, விஷஜ்வரப் பிரதேசங்களிலே பிரயாணம் செய்யும் உத்தியோகஸ்தர்கள் கொசு வலைகளை உப-யோகித்துத் தங்களுக்குக் கொசுக்கடி உண்டாகாமல் காத்துக்கொள்ளப் பிரயத்தனப் படுகிறார்கள். ஆனால், எப்போதுமே கொசுவலைகளுக்குள் இருக்கமுடியாது; ஆகையால், சிற்சில சமயங்களில் அவர்களைக் கொசு கடிப்பதனால் அவர்களுக்கு விஷஜ்வரம் காண்கிறது. ஜ்வரக் கிருமிகளை அழிக்கக்கூடியது க்வினைன் என்று

சொல்லப்படும் மருந்து ஒன்றே. பிரதிதினமும் ஒரு தடவை க்வினைனை உட்கொள்ளும் பட்சத்தில், கொசுக்களால் சரீரத்துக்குள் செலுத்தப்படும் இளங்கிருமிகள் நசித்துப் போகிறபடியால் விஷஜுரம் விருத்தியாவது முற்றிலும் தடைப்பட்டுப்போம். ஆயினும் அவ் விஷஜுரக் கிருமிகள் அடியோடு அழிந்துபோவதற்கு மூன்று மாதம் செல்லும் ; ஆதலால், அவ்வளவு காலம் நாள்தோறும் க்வினைனை ஒரு தடவை உட்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

விஷஜுரத்தின் சம்பந்தமாக அடியிற் கண்ட விஷயங்களை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் :

(1) விஷ ஜுரமானது தொத்து நோய் சம்பந்தமுள்ள ஒருவனிடத்திலிருந்து தேகாரோக்கியத்துடனிருக்கும் மற்றொருவனுக்கு, கொசுவினால் பரவுகிறதே யொழிய, வேறு எதன் மூலமாகவும் அது பரவுகிறதில்லை. ஆகையால், கொசுக்க ளில்லாவிட்டாலும் அல்லது கொசுக்கடி உண்டாகாமல் பாதுகாத்துக் கொண்டாலும், விஷஜுரம் ஒருபோதும் வாராது.

(2) கொசுக்கள் நிலையான தண்ணீரிலேயே உற்பத்தியாகிறபடியால், அவ்விதத் தண்ணீர் இல்லாத இடத்தில் கொசுக்களும் இரா, விஷஜுரமும் இராது.

(3) மனிதர் வசிக்கும் இடத்திலும், அதைச் சுற்றிலுமுள்ள கொசுக்களே அபாயகரமானவை. மனிதர் வசிக்குமிடங்களைச் சுற்றிக் கால்மைல் தூரம் வரையிலாவது கொசுக்கள் இல்லாமற் செய்தால், விஷஜுரம் தலைகாட்டாமல் ஒழியும்.

## 11. நீலகிரித் தோதவர்கள்

நமது இந்துதேச சரித்திரத்தில், 'இந்தியாவின் பூர்வ குடிகள்' என்னும் தலைப்பில் வாசிக்கும்போது, நீலகிரியில் உள்ள **தோடர்கள்** என்னும் ஒரு வகுப்பினர் பெயரைக் கேட்டிருக்கிறோம். அவர்களைப் பற்றிப் பேரளவாகக் கேட்டிருக்கிறோமே யன்றி, மற்றொன்றும் நமக்குத் தெரியாது. இந்தியாவின் பூர்வ குடிகள் என்று சிறப்பு வாய்ந்த இந்த வகுப்பினர் நமக்கு அதிக சமீபத்தில் இருந்தும், அவர்களைப் பற்றி நாம் ஏதும் அறியாதிருப்பது வியப்பினும் வியப்பன்றோ?

அவர்கள் பெயராவது நமக்குச் சரியாகத் தெரியுமா? அவர்கள் வசிக்கும் இடத்தின் பெயரையாவது நாம் சரிவரத் தெரிந்துகொண்டோமா? ஆராய்ச்சி என்பது ஒரு சிறிதும் இல்லாத நமக்கு எதுதான் சரியாகத் தெரியும்!

**தோதவர்** என்னும் பெயரை ஐரோப்பியர் **தோடர்** என்றனர்; அதை நாமும் அப்படியே சொல்லத் தொடங்கி விட்டோம். நமது நாட்டுப் பெயர்களில் இவ்வாறு சிதைந்து நாசமானவை சிலவோ, மிகப் பல. சென்னைக்கு மெட்ராஸ் (Madras) என்றும், சதுரங்கப்பட்டணத்திற்கு ஸட்ராஸ் (Sadras) என்றும் பெயர்கள் எப்படி ஏற்பட்டனவோ இன்னும் தெரியவில்லையே. தரங்கம்பாடிக்கும் ட்ராங்கொபா (Trancobar) ருக்கும் என்ன சம்பந்தமோ? திருவையாறு என்பது திருவாதி (Tiruvadi) என்று எப்படி மாறிற்றோ? அறியக்கூடவில்லை. இவ்வாறெல்லாம்

பாஷை சிதைந்து போனல் பிற்காலத்தே இவற்றின் உண்மைநிலை எவ்வாறு விளங்குவது! அறிஞர்கள், இவ் வகையாகச் சிதைவுபட்ட மொழிகளைச் செப்பஞ் செய்ய முயலவேண்டுவது அவசியமன்றே!

நீலகிரி என்பது காரணப் பெயர். மலையும், மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சிநிலம் என்று பெயர் பெறும். குறிஞ்சி என்பது ஒரு வகைச் செடி. அது பெரும்பாலும் மலைநாட்டில் விருத்தியாவது. அதுகொண்டே மலைநாட்டிற்குக் குறிஞ்சிநிலம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இவ்வாறே மற்ற மூன்று நிலங்களுக்கும் பெயர்கள் வழங்குதல் காண்க.

1. குறிஞ்சி — மலையும், மலையைச்சார்ந்த இடமும்.

2. முல்லை — காடும், காட்டைச்சார்ந்த இடமும்.

3. மருதம் — வயலும், வயலைச்சார்ந்த இடமும்.

4. நெய்தல் — கடலும், கடலைச்சார்ந்த இடமும்.

இந்தப் பெயர்கள் அந்தந்த நிலத்தில் சிறந்து விளங்குஞ் செடிகளைப்பற்றியே வந்தனவாம்.

குறிஞ்சிப்பூ நீல நிறம் உடையது. அது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் இயல்புடையது என்பர். அம் மலர் பூத்திருக்கும்போது நீலகிரி நீலநிறமாகக் காணப்படுதல்பற்றி, அம்மலைக்கு நீலமலை அல்லது நீலகிரி எனப் பெயர் அமைந்தது என்று கூறுகின்றனர். அம் மலையின் பெயர் சிலப்பதிகாரம் முதலிய பண்டை நூல்களிலும் காணப்படுகின்றது. அதனல், நீலமலை என்பதே அதன் பெயர் என்பதும், அது, தமிழ்நாட்டு வழக்குப்பற்றியே

அதற்கு ஏற்பட்டது என்பதும் நன்கு விளங்குகின்றது.

நீலகிரி கடல்மட்டத்திற்குச் சுமார் 7,500 அடி உயரமுள்ளது. இதன் உயரிய முடிக்குத் தோட்டபெட்டா என்று பெயர். அதன் உயரம் சுமார் 9,000 அடியுள்ளது. நீலகிரியில் ஒத்தகமந்து என்பது 7,250 அடி உயரத்தில் அமைந்துள்ள நகரம். இந்தப் பெயரை ஐரோப்பியர் உடகமண்ட் என்று சொல்லிவிட்டனர். பின்பு நம்மவர் அதை முற்றும் சம்ஸ்கிருதப் பெயராக்கி, உதகமண்டலம் என்று கூறத் தலைப்பட்டுவிட்டனர். இதற்கு ஜலம் நிரம்பிய பிரதேசம் என்றும் வியாக்கியானம் சொல்லத் துணிந்துவிட்டனர். நம்மவர் செய்யும் ஆராய்ச்சி இவ்வாறு விருத்தி யடைகின்றது! இதைநோக்கும்போது நம் நாட்டுத் தமிழ்ப்பெயர்கள் எவ்வெவ் வகையில் தலைதடுமாறின என்பதை எவர் எவ்வாறு அறிந்து கூறுதல் கூடும்!

இது நிற்க, ஒத்தகமந்து என்பது யாது என்பதை ஆராய்வோம்: தொதவர் என்னும் வகுப்பினர் வசிக்கும் ஊருக்கு மந்து என்பது பெயர். மந்து என்பது மன்று என்னும் தமிழ்ச் சொல்லின் மாறுபாடு என்பர். மந்து என்னும் இந்தப் பொதுப்பெயர் வேறு சிறப்புப் பெயரோடு சேர்ந்து, வெவ்வேறு ஊருக்குப் வேறுவேறு பெயராய் வழங்கும். அவற்றில் சில வருமாறு: ஒத்தகல்மந்து, மஞ்சக்கல்மந்து, கண்ணகிமந்து முதலியனவாம். இத்தகைய மந்துகள் நீலகிரியில் இன்னும் பல உண்டு. தொதவர் என்னும் இவ் வகுப்பினர் நீலகிரியில்மட்டுமே வசிக்கின்றனர். இவர்கள் இந்த மலையில் சுமார் 6,000 அடிக்குக் கீழுள்ள

இடங்களில் வசிப்பதாகக் காணவில்லை. இவர்கள் மிகவும் குளிர்ச்சியான இடங்களில் மட்டும் வசிக்கின்றனர். நீலகிரியில் ஒத்தகமந்து முதலிய குளிர்நாட்டில் வசிக்கும் தொதவர்கள், நல்ல மழை பெய்யாமையால் கொஞ்சம் உஷ்ணம் அதிகப்பட்ட காலத்தில், இடம்விட்டுப் பெயர்ந்து சென்று, மிகவும் குளிர்ச்சியான இடத்தில் வசித்துக்கொண்டிருந்து, மழை பெய்தவுடன் தம் இடத்திற்குத் திரும்பி வந்து சேர்கின்றனர்.



ஒரு மந்தில் ஐந்தாறு வீடுகளே இருக்கும். ஒரு வீடு சுமார் 20 அடி நீளமும், 12 அடி அகலமும் உள்ளது. அதன் உருவம் இரட்டை மாட்டுவண்டியின் கூட்டைப்போல் இருக்கும். தொதவர் தம் வீட்டை மூங்கிலினாற் கட்டி, ஒரு வகைப் புல்லைக் கூரையாக வேய்கின்றனர். வீட்டின் முன்புறத்திலும், பின்

புறத்திலும் மரப்பலகைகள் அடித்து, சந்து தெரி-யாமல் மண்பூசி, சாணியால் மெழுகிவிடுகின்றனர். உள்ளே நுழைவதற்குச் சுமார் 2 அடி உயரமும், $1\frac{1}{2}$ அடி அகலமுமுள்ள ஒரு வாசக்கால் அமைத்து ஒரு செருகு பலகையால் அதை மூடுகின்றனர். அவர்கள் அதற்குள் நுழையும்போது இரண்டு கைகளையும் தரையில் ஊன்றி, முழங்காற்படியிட்டு, ஒரு குழந்தை தவழ்வதுபோல், தவழ்ந்து செல்கின்றனர். வீட்டுக்குள் நீளவாட்டத்தில் சுமார் 8 அடி நீளமும், 4 அடி அகல-மும், $1\frac{1}{2}$ அடி உயரமும உள்ள ஒரு திண்ணை உண்டு. தானியங்களை வைத்துக்கொள்ளவும், சமையற் பாத்-திரங்களை வைத்துக்கொள்ளவும் வேண்டிய இடமும் அங்கே உண்டு. அவர்கள் சாதாரணமாய் அந்தத் திண்ணையின்மேலேயே படுத்துக் கொள்ளுவார்கள். ஒரு வீட்டில் இரண்டு மூன்று பேரே இருப்பாராதலின், அந்த இடம் அவர்களுக்குப் போதுமானதாகவே இருக்கும்.

தொதவர் கள்ளங்கபடற்ற மனமும், எளிய வாழ்க்கையும் உடையவர்கள். அவர்கள் செல்வமெல்லாம் எருமைகளே யாகும். ஒருவனுக்குள்ள எருமைகளைக்-கொண்டே அவனுக்குள்ள செல்வத்தை மதிப்பிடுவது அவர்களுக்குள் வழக்கம். இதை விளக்க ஓர் உதா-ரணம் உண்டு. அதாவது :

நமது சக்கரவர்த்தியாகிய ஜார்ஜ் மன்னவர் இளவரசராயிருந்த காலத்தில் இங்கே வந்தாரன்றோ? அக்காலத்தில் அவரது வருகையைப்பற்றி, ஒரு பாதிரி-யார், தொதவர்களைக் கூட்டி, ஓர் உபந்நியாசம் செய்-தார். அப்போது, அவர், 'நமது ராஜா வருகிறார்;

அவர் நமக்கெல்லாம் அரசர்; சிறந்த செல்வமுள்ளவர்; இந்தத் தேசமெல்லாம் அவருடையது. நாம் அவருக்குக் குடிகள். அவர் அநேக பிரபுக்களோடும், பரிவாரங்களோடும் இங்கே வருகிறார். அவர் வருகையை நாமெல்லாம் கொண்டாட வேண்டும்' என்று கூறினார். அப்போது தொதவர்களில் ஒரு கிழவன் பாதிரியைப் பார்த்து, 'ராஜா பெரிய பணக்காரர் என்று சொல்லுகிறீர்களே, அவருக்கு எத்தனை எருமைகள் இருக்கின்றன? எத்தனை எருமைகள் அவர் இப்போது கொண்டுவருகிறார்? சொல்லும்' என்று கேட்டானாம். பாதிரியார் இதற்கு என்ன பதில் சொல்லுவார்! சிரித்துவிட்டுச் சிறிது நேரம் சும்மா இருந்தார். அதன்மேல் கிழவன், 'எருமை இல்லாத செல்வம் என்ன செல்வம்' என்று இகழ்ந்து கூறினானாம்.

மேலேகூறிய திருஷ்டாந்தக் கதையினால், தொதவர்கள் எருமை முதலிய கால்நடைகளையே தமக்குச் சிறந்த செல்வமாக எண்ணுகின்றனர் என்பது நன்கு விளங்குகிறதன்றோ. தொதவர் எருமைகளை மேய்த்துக்கொண்டு, எளிய வாழ்க்கையை மேற்கொண்டு வாழும் இயல்பினையுடையவர்கள். அவர்கள், தங்கள் இருப்பிடத்திற்கு அருகில் பள்ளத்தாக்கான ஓர் இடத்தில் கருங்கற்களினால் சுற்றிலும் சுவர்கள் எழுப்பி, பெரியதோர் மாட்டுக் கிடையை அமைக்கிறார்கள். அதற்குள்ளேயே, ஒரு புறம் கன்றுகளை மடக்கி வைப்பதற்குச் சிறியதோர் இடமும் ஏற்படுத்துகின்றனர். அவர்கள் தம் எருமைகளை இராத்திரி காலங்களில் அதில் மடக்கிவைத்து, பொழுது விடிந்ததும், அவற்றின் பாலைக் கறந்துகொண்டு, பிறகு அவற்றை வெளியில் ஓட்டிக்கொண்டுபோய் மேய்த்துவருவார்கள்.

தொதவர்கள் ஒருவிதமான தெய்வபக்தி உள்ளவர்கள். அவர்கள் தாம் வசிக்கும் மந்துகளுக்குச் சுமார் 200, 300 அடிகளுக்கு அப்பால் கூரையினால் கோயிலொன்றை அமைக்கின்றனர். அதைச் சுற்றிச் சுமார் நாலைந்து அடி உயரமுள்ள சுவர் எழுப்பி உட்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்கின்றனர். அக் கோயில் ஒரு கோபுரம்போல் அமைந்திருக்கும். சில கோயில்கள் அவர்கள் வசிக்கும் குடிசையைப் போல-



வும் இருப்பதுண்டு. அந்தக் குடிசைக்குள் மற்றொரு சிறு குடிசை அமைத்து, அதற்குள் ஒரு சிறு உருவத்தை அமைத்து வைக்கிறார்களாம். அவ்வுருவம் மிகச் சிறியதாயும், முழுதும் பொன்னால் இயன்றதாயும் இருப்பதாம். அது தலைமுறை தலைமுறையாகத் தம் முன்னோர்களால் வைத்துப் பூஜிக்கப்பட்டு வருவதென்று அவர்கள் கூறுகின்றார்கள். ஆயினும், அதன்

உண்மை நமக்கு நன்கு புலப்படவில்லை. அந்தக் கோயிலுக்குப் பூசிக்க பூசாரி ஒருவன் உளன்.

பூசாரி அந்தக் கோயிலுக்குள் பூஜை செய்யச் சென்றால், அவன் தன் முறை முடிகிறவரையில் மற்ற-வர்கள் வசிக்கும் மந்துக்குள் வருதல் கூடாது. ஒருவ-னுடைய முறை நாலைந்து மாதங்களுக்கு மேலும் நீடித்திருக்கும். அப்போது அவனுக்கு மற்றவர்கள் உணவுப் பொருள்களைக் கோயிலண்டை கொண்டு போய்க் கொடுப்பார்கள். அவன் அதை வாங்கிக் கோயிலுக்குள் வைத்துக்கொண்டு, சமைத்துச் சாப்-பிட்டுவிட்டு அங்கேயே படுத்து உறங்குவான். பூசாரி என்பவன் வேறொரு வகுப்பினன் அல்லன். தொத-வர் தங்களுக்குள்ளேயே ஒருவனை ஏற்படுத்தி அக் கோயிலில் இருந்து வேலையை நடத்தச் செய்வது வழக்கம். ஒரு மந்தில் இருப்பவர்கள் எந்தக் கார-ணத்தினாலாவது பூசாரியாயிருக்க இயலாவிட்டால், அப்போது அவர்கள் வேறொரு மந்தில் இருப்பவன் ஒருவனை அழைத்துக்கொண்டு வந்து, தமது கோயி-லில் பூசாரியாக அமைப்பார்கள். அவன் மேற்கூறிய-வாறு அவர்களிடம் உணவுப் பொருள்களைப் பெற்-றுக்கொண்டு, சமைத்து உண்டு, கோயில் காரியங்களை நடத்திக்கொண்டு வருவான்.

பூசாரி அக்கோயிலில் செய்யும் காரியம் யாது என்பதை அறிய நீங்கள் அவாவுவீர்கள். தொதவர் அதிகாலையில் பாலைக் கறந்து, அதை அப்படியே கோயிலுக்கு எடுத்துக் கொண்டுபோய், மதிற்சுவ-ருக்கு வெளியே நின்றுகொண்டு, பூசாரிகையிற் கொடுப்பர். அவன் அவரவர் கொண்டுவரும் பாலைத்

தனித்தனியே கோயிலுக்குள் கொண்டுபோய், அங்குள்ள பொன்னுருவின் முன்னே வைத்துப் படைத்துவிட்டு, திரும்பக் கொண்டுவந்து கொடுத்துவிடுவான். அதன்பிறகுதான் தொதவர் அப்பாலே விற்பனை செய்தல் முதலிய காரியங்களுக்கு உபயோகப் படுத்துவது வழக்கம்.

ஸ்திரீகள், எந்தக் காரணத்தினாலும், கோயிலுக்கருகில் போகக் கூடாது என்னும் நிபந்தனை தொதவர்களுக்குள் உண்டு. ஆறு, ஏழு வயதுக்குமேற்பட்ட பெண்கள்கூட அந்த ஆலயத்திற்கு அருகில் அடியெடுத்துவைத்தல் கூடாதாம். சுமார் நாற்பது ஐம்பது அடிகளுக்கு அப்புறம் ஒரு குத்துக்கல் நடப்பட்டிருக்கும். பெண்கள் ஆலயத்தின் வழியாகச் செல்ல நேரும்போது, அந்தக் குத்துக்கல்லைக் கடந்து ஆலயத்துக்கருகில் போவதே இல்லை. அன்னிய ஜாதியார், ஆண் பெண் எவரும், அந்த ஆலயத்து மதிற்சுவர்வரையில் போகலாம். அதைக் கடந்து உள்ளே செல்ல ஒருவரையும் அவர்கள் விடுவதில்லை. அப்படிச் செல்லும் அன்னியன் ஒருவன் அங்கிருந்துகொண்டு பணம் முதலிய பொருள்களைக் கொடுப்பதாகச் சொல்லி அழைத்தாலும், தொதவமாதர் அக்குத்துக்கல்லின் எல்லையைக் கடந்து கோயிலின் அருகிற் செல்ல ஒருகாலும் உடன்படுவதில்லை. சிறு பெண்கள்கூட இந்த ஏற்பாட்டைக் கடந்து நடப்பதாகத் தெரியவில்லை. ஸ்திரீகள், அக் கோயிலில் சில காலங்களில் நடக்கும் திருவிழாக்களில், மேற்கூறிய எல்லைக் கல்லின் அருகில் நின்றுகொண்டு, பூசாரி வெளியில் கொண்டுவரும் உருவத்தைக் கண்டு வணங்குவார்கள்.

தொதவரில் ஆண்மகனைத் தோதவன் என்றும், பெண்மகளைத் தோதவச்சி என்றும் சொல்லுவது வழக்கம். தொதவன் உயர்ந்த உருவமும், உருண்டு திரண்ட புயமும், அகன்ற மார்பும், பரந்த நெற்றியும், நீண்டு கூரிய மூக்கும், அழகிய தோற்றமும் உடையவன். பல சாதியார் கூடியுள்ள ஒரு பெருங் கூட்டத்தில், தொதவன் இவன் என்று துணிந்து கூறுவது எவர்க்கும் எளிமையே யாம். அவனுடைய தலைமயிர் ஒன்றே அவனைத் தொதவன் என்று காட்டிவிடும். மயிர் உச்சியினின்றும் மண்டையைச்சுற்றி நீண்டு தொங்குமாறு, அதனை நன்றாய்ச் சீவிவிட்டு, அடர்ந்த வேலியைப்போ லிருக்க வெட்டிவிடுவன். அது மயிரினாற்செய்த கறுப்புத் தொப்பியை தலையிற் கவிழ்த்திருப்பதுபோற் காணப்படும். மயிர் முன்புறத்தில் நெற்றியையும், பின்புறத்தில் பிடரியையும் கவிந்து மூடிக்கொண் டிருக்கும்; மார்பு, தோள்பட்டை, கை, கால் முதலிய இடங்களிலும் மயிர் அடர்ந்திருக்கும். புருவத்தில் மயிர் அடர்ந்து நீண்டியிருக்கும்; கூட்டுப் புருவமும் உண்டு. தொதவருக்கு இப்படி உடலெங்கும் மயிர் அடர்ந்து செழித்து வளர்வதற்குக் காரணம், அவர்கள் அதிகமாகப் பால் குடித்தலே யாம் என்று சில அறிஞர்கள் அபிப்பிராயப் படுகின்றன. இதனை வலியுறுத்த ஒரு திருஷ்டாந்தக் கதையை இங்குக் கூறுவோம்:

கிருஷ்ண கர்ணாமிருதம் என்னும் ஓர் அரிய நூல் சம்ஸ்கிருதபாஷையில் உண்டு. அது கிருஷ்ண பகவானுடைய லீலைகளை வர்ணித்துக் கூறுவது. அதில் ஒரு சுலோகத்தில், அடியிற்கண்ட விஷயம் கூறப்படுகிறது; அதாவது:

கிருஷ்ணமூர்த்திக்கு மயிர்வளர்ச்சியில் அதிகமும் ஆசையாம். அதனால் அவருக்குக் கேசவன் என்னும் பெயரும் உண்டாயிற்றாம். கேசவன் என்பதற்குப் பல பொருள்கள் இருப்பினும், இங்கு அதற்கு, மயிர்வளர்ச்சியில் விருப்புள்ளவன்' என்று பொருள் கூறுவர்; (கேசம் - மயிர்). அடிக்கடி கிருஷ்ண மூர்த்தி தம்மயிர் வளர்ச்சியைப் பற்றித் தம் தாயாரிடம் பேசி, அது விரைவில் நீண்டு வளரவில்லையே என்று முறையிட்டுக்கொள்ளுவாராம். இப்படியிருக்கையில், தாயார் ஒருநாள் கிருஷ்ணமூர்த்தியைப் பால்குடிக்கவேண்டினளாம். அவர், 'இப்போது எனக்குப் பால் வேண்டியதில்லை' என்று அதனை மறுத்துவிட்டனர். அதுகண்ட தாயார், 'கிருஷ்ணா, இங்கே வா, இந்தப் பாலைக்குடி, விரைவில் மயிர் வளரும்' என்று கூறினவுடன், கிருஷ்ணமூர்த்தி ஓடிவந்து, ஒரு கையால் பால்பாத்திரத்தைப் பற்றி, பாலைப் பருகிக் கொண்டே, மற்றொரு கையால் தம் மயிரைத் தடவிப் பார்த்துக் கொண்டனராம். அப்போது தாயார், 'குழந்தாய், என்ன, தலையைத் தடவிப் பார்த்துக் கொள்ளுகிறாய்?' என்றுகேட்க, கிருஷ்ணமூர்த்தி, 'பால் குடிக்கிறேனே — உடனே மயிர் வளர்கிறதா என்று தடவிப் பார்க்கிறேன்' என்று ஆவலோடு கூறினாராம். அதைக் கேட்டுத் தாயார் அகமகிழ்ந்து சிரித்தாள் என்பதாம்.

குளிர் மிகுந்த நாடுகளில் உள்ள பிராணிகளுக்கு உடலில் மயிர் அடர்ந்திருப்பது இயல்பு. எல்லா உயிர்களுக்கும் இயற்கையான கவசமாக மயிரோ இறகோ உடல்முழுதும் அடர்ந்திருக்க, மனிதனுக்கு மாத்திரம் அஃது இல்லாதொழிந்தது என்? இஃது

இயற்கைக்கு மாறல்லவா? என்னும் கேள்விக்கு என்ன விடை கூறலாம்? ஆதியில் மனிதனுக்கும் இயற்கைக் கவசமாக உடல் முழுதும் மயிர் முளைத்திருந்தது என்பதை இயற்கைநூற்புலவர் அறிவர். மனிதன் தன் செயற்கையால் அதனை நாள்பட மாற்றிக்கொண்டான்; எப்படி, மனிதன் தன் உடலத்தை மறைப்பதற்காகச் செயற்கையான உடைகளை உடுக்கத் தலைப்பட்டான். முதலில் விலங்குகளை வேட்டையாடி அவற்றின் தோல்களை உரித்துத் தனக்கு உடையாக உடுத்திக் கொண்டான். பிறகு மரப்பட்டைகளை உரித்து மரவுரி என்னும் உடையாக வழங்கிக்கொண்டான். இக்காலத்தும் சில மரங்களின் பட்டைகள் அகன்று நீண்டு உடைபோல் இருப்பதை மரநூற் புலவர் அறிவர். பின்பு மரத்தின் நார்களை உரித்துப் பின்னி உடையாக்கினன். அதன் பின்னரே பஞ்சை நூலாக நூற்று உடை செய்யத் தலைப்பட்டனன். இதை நோக்கும்போது முற்காலத்தில் எலியின் மயிரினால் மெல்லிய கம்பலம் * செய்து தமிழ் மக்கள் அணிந்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் என்னும் சிறந்த தமிழ்நூல் கூறுவது பொய்யாகா தன்றே!

மனிதன் இவ்வாறெல்லாம் செயற்கை உடைகளைச் செய்து, தன் முகம் நீங்கலாக, மற்றைப் பாகங்களை மறைக்கத் தலைப்படவே, அவ்விடத்திருந்த மயி-

---

* 'பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கை'

இதன் பொருள்: பட்டுநூலானும் எலிமயிரானும் பருத்திநூலானும் நுண்ணிய தொழில்களை ஊசியாற் பிணிக்கும் பட்டுச்சாலியர் இருக்கும் இடங்களும் என்றவாறு.

ரெல்லாம் பயனற்று உதிர்ந்து போய், அவற்றின் இடங்களாகிய மயிர்க் கால்கள் மட்டும் நிற்பனவாயின. தோதவர் மேற்கொண்ட உடை மிகவும் எளிமையானது: ஒரே ஒரு துப்பட்டியே; ஒரே போர்வையாகப் போர்த்துக் கொள்ளப்படுவது. அதனால், அவர்கள் உடலின் மயிர் அவ்வளவாக உதிர்ந்து போகாமல் இருக்கின்றது போலும்.



தோதவன் தன் தலைமயிரை அமைத்துக்கொண்டிருக்கும் விதம் குளிர் நாட்டிற்கு மிகவும் ஏற்றதாகத் தோன்றுகிறது. தோதவன் மழையில் நடந்து போனாலும் அவன் தலை அவ்வளவாக நனைந்து போவதில்லை.

தலைமேல்விழும் மழைத்துளி, அம்மயிர்ச் சரிவினால் கீழே சிந்திவிடுகிறது. சில துளிகள் தங்கினாலும் அதை அவன், காக்கை நீரிற் குளித்தவுடன் தன் இறகை உதறிக்கொள்வதுபோல், உதறிப் போக்கி-விடுகிறான். மயிர் அதிகமும் அடர்ந்திருப்பதனால் தண்ணீர் அவ்வளவாக அடியிற் செல்வதற்கு வழி-யிருப்பதில்லை.

இனி, தொதவன் செய்யும் தொழிலைச் சொல்-லுவோம்; தொதவர் சாதாரணமாக எருமைகளை மேய்த்துக்கொண்டு, அவை தரும் பாலையே முக்கிய உணவுப் பொருளாகக்கொண்டு வாழும் அமைந்த வாழ்க்கையினை உடையவர். தொதவன் நாள்தோறும் அதிகாலையில் எழுந்து, எருமைகளைக் கறந்து, கடவு-ளுக்குப் படைத்து, வீட்டில் கொடுத்துவிட்டு, மாட்டை ஓட்டிக்கொண்டு மேய்க்கப்போவான். அவை மேய்ந்து கொண்டிருக்க, இவன் எங்கேனும் உட்கார்ந்து வெயி-லில் குளிர்காய்ந்துகொண் டிருப்பான். வேளையான-தும் எருமைகளை ஓட்டிக்கொண்டு வீட்டுக்கு வரு-வான். சிறுவர்களுக்கும் இதுவே தொழில். ஆஸ்தி சேர்க்கவேண்டும், ஆடம்பரமாக உடுக்க வேண்டும், ஊர்மெச்ச வாழவேண்டும் என்னும் அவா அவனுக்-குச் சிறிதும் கிடையாது. மாட்டை மேய்த்துக் கொண்டு, கிடைத்ததை வேளையில் உண்டு, சும்மா இருப்பதே சுகம் என்று கருதும் இயல்புடையவன். இப்படித்தான் தொதவர் இன்றுங் காலம் கழித்து வருகின்றனர்.

தொதவர், பிறர்க்கு அடங்கி வேலை செய்வது இழிவென்று எண்ணுகிறார்கள். தாமே பயிர்செய்-

வதும் இழிவானது என்று எண்ணுகிறார்கள் என்றால், அந்நியரிடத்து அடிமைப்பட்டு உழைப்பதை அகவுரவமென்று எண்ணுவது அதிசயம் அன்றோ? பயிர் செய்யாவிட்டால், அவர்களுக்கு உணவுப் பொருள்கள் எப்படிக் கிடைக்கிறது என்கிறீர்களோ? அதையும் சொல்லுகிறேன், கேளுங்கள் :

கொஞ்ச காலத்திற்கு முன்வரையில் நீலகிரியின் பெரும்பாகத்திற்குத் தொதவர்களே உரியவர்களாயிருந்தனர் என்று தெரிகிறது. அவர்களில் ஒவ்வொரு வீட்டுக்காரனும் ஒன்று இரண்டு கிராமங்களைத் தனக்கு உரிமையாக வைத்திருக்கிறான். அவன் அந்தக் கிராமத்தில் உள்ள பயிரிடக்கூடிய நிலங்களைப் படுகர் என்னும் ஒரு ஜாதியாருக்குப் பங்கிட்டு விட்டிருக்கிறான். அந்தப் படுகர் அந்நிலங்களில் சாமை முதலிய தானியங்களைப் பயிரிடுகின்றனர். அப்படிப் பயிரிட்டு அறுவடை செய்யும் தானியத்தில் ஒரு பாகத்தை நிலத்துக்கு உரியவனாகிய தொதவனுக்கு என்று எடுத்து வைத்துவிடுகிறான். தொதவன் அவ்வக்காலத்தில் சென்று, தனக்குச் சேரவேண்டிய தானியம் முழுவதை அல்லது அதன் ஒரு பகுதியைப் பெற்றுக்கொண்டு வருகிறான். ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டால், மீதியை அப்படுகனது வீட்டிலேயே வைத்துவிட்டு வந்து, மறுபடியும் தனக்கு வேண்டும்போது போய் அம்மீதியைப் பெற்றுக்கொண்டு வருவான். இவ்வாறு நடை பெற்றுவரும் மேல்வார குடிவார விஷயமாய் இதுவரையில் யாதொரு மோசமும் சச்சரவும் வழக்கும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இதை நோக்கினால் இவர்களை ஒருவகைக் குறுநிலமன்னர் என்று கூறலாம் போலும். அன்றியும் இந்த அரசு நல்லரசு என்றும் தோன்றவில்லையா?

இப்படித் தனக்குச் சொந்தமான நிலத்தைத் தொதவன் வேறொருவருக்கு விற்றுவிட்டால், வாங்கினவன் பிறகு துரைத்தனத்தாருக்கு நிலவரி செலுத்தவேண்டும். தொதவர் எவ்வித வரியும் துரைத்தனத்தாருக்குச் செலுத்துவதாகத் தோன்றவில்லை. தொதவருக்குப் படுகர் குடிகள்போல் இருக்கின்றனர். கோத்தர் என்னும் ஒருவித இழிந்த ஜாதியார் தொதவருக்குத் தொழிலாளிகள். சுபாசுப காரியங்களில் மேளம் அடித்து ஊழியஞ்செய்பவர் இந்தக் கோத்தர்களே யாவர். படுகர் பயிர்செய்வதில் வல்லவர்கள். ஆணும் பெண்ணும் சேர்ந்து உழைப்பர். அதனால் அவர்களில் சிலர் இப்போது சிறந்த செல்வர்களாக இருக்கின்றனர். சிலர் உத்தியோகம் செய்கின்றனர். சிலர் குத்தகை வேலை நடத்துகின்றனர். இப்படி விருத்தியடைந்து, நகரத்திற்கு அருகில் வசிக்கும் சில படுகர் தொதவர்களுக்கு அடங்கி நடப்பவராகக் காணப்படவில்லை. ஒத்தகல்மந்து முதலிய நகரங்களில் வசிக்கும் தொதவர்களில் இரண்டொருவர் தோட்ட வேலை செய்யும் தொழிலில் அமர்ந்திருக்கின்றனர். இப்படிப்பட்டவர்களும் வேலைக்குச் சரியாய் வருவதில்லை. வருந்தி உழைப்பதுமில்லை. இந்தக் காரணத்தினால் தொதவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள எவரும் அதிகமாக இஷ்டப்படுவதில்லை. தொழில் செய்வதென்றால் தொதவனுக்கு அவ்வளவு கஷ்டம்.

சில வருஷங்களுக்குமுன் ஒரு தொதவன் குற்றம் சாட்டப்பெற்று, சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டான். அங்கே மற்றக் குற்றவாளிகள் வருந்தி வேலை செய்வதைப் பார்த்தும், அந்தத் தொதவன் தான் வேலைசெய்ய உடன்படவில்லை. சிறைச்சாலை அதிகாரி எவ்-

வளவு முயன்றும் அவனிடம் வேலைவாங்க முடியவில்லை. என்ன செய்வார், பாவம்! அவனை ஒரு தொழிலுக்கு மேஸ்திரியாகப் போட்டு வைத்தார். அவ்வளவுதான் அவர் செய்ய முடிந்தது. தொதவனை மற்றொன்றும் செய்ய முடியாது. சும்மா இருப்பதே சுகம் என்னும் வாக்கியம் தொதவனுக்கு முற்றும் பொருத்தமானது.

## 12. சூரிய பிம்ப லட்சணம்

இப்பூமியிலுள்ள யானை முதல் எறும்பீறான சகல ஜீவ வர்க்கங்களும், புல் பூண்டு முதலிய தாவர வர்க்கங்களும், இவையனைத்திற்கும் மேலான மானிடர்களும் இன்புற்று வாழ்வதற்குச் சூரியன் அத்தியாவசியமானது. வானசாஸ்திரிகள் நெடுங்கால ஆராய்ச்சியினால் சூரியனைப்பற்றிக் கண்டறிந்த அற்புதமான சிற்சில விஷயங்களை இங்கே எடுத்துக் கூறுவோம்:

சூரியபிம்பம் குறுக்களவில் 7,63,000 மைல் உள்ளது. நாம் வசிக்கும் பூமியின் குறுக்களவோ 7,950 மைலுக்குமேல் இல்லை. ஆகவே இப் பூமியைப் பார்க்கிலும் சூரியபிம்பம் 1,392,500 மடங்கு பெரியதாகும். சூரியனையும், இப் பூமியையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், சூரியனை ஒரு கிச்சிலிப் பழமாகவும், பூமியை அதன்மீதுள்ள ஒரு சிறு மணலாகவும் கொள்ளலாம். சூரியன் இவ்வளவு பெரிதாயிருந்தும், அஃது இப் பூமிக்குச் சற்றேறக்குறைய

ஒன்பது கோடியே இருபது லட்சம் மைல் தூரத்தில் இருக்கிறபடியால், அது நமக்கு ஒரு சிறு உருண்டை-போல் தோன்றுகிறது.

சூரியனைப்போன்ற பெரிய கிரகங்களின் பருமன் முதலியவற்றைக் கணக்கிட்டு நிச்சயமாய் அறியக்கூடு-மாயினும், அவை யனைத்தையும் தன்னுள் அடக்கிக்-கொண்டிருக்கும் ஆகாயவெளியின் பரப்பை அளவிட்-டுக் கூற ஒருவராலும் ஒருபோதும் ஆகாது. அது, காலத்தைப் போல், ஆதி அந்தம் இல்லாதது.

இந்தப் பூமியிலிருந்து சூரிய மண்டலம்வரையில் ககனமார்க்கமாய் இருப்புப்பாதை ஒன்றை அமைத்து, அதன் மூலமாகப் புகைவண்டியிலேறி இடைவிடாது யாத்திரை செய்யக்கூடுமாயின், சூரியமண்டலத்தைச் சென்றடைய, சற்றேறக்குறைய நானூறு யாண்டுகள் செல்லும். ஒரு நிமிஷத்தில் சுமார் எட்டுமைல் வீதம் போகத்தக்க அதிவேகமுள்ள ஒரு பீரங்கிக்குண்டை, இங்கிருந்து சூரியமண்டலத்துக்குச் செல்ல விடுவோ-மாயின், அது சூரியனைப் போய்த் தாங்குவதற்குச் சுமார் இருபத்திரண்டு யாண்டுகள் பிடிக்குமென்று வானசாஸ்திரிகள் கணக்கிட்டு அறிந்திருக்கிறார்கள். ஒரு சூரியகிரணம் நேரேவந்து பூமியிலுள்ள நம்மைத் தாக்குவதற்குச் சற்றேறக்குறைய எட்டு நிமிஷங்கள் பிடிக்கிறதாம். ஆகவே, சூரியன் உதயமாவதாக நமக்-குத் தோன்றுகிற காலத்துக்கு எட்டு நிமிஷம் முன்-னரே, அது வாஸ்தவத்தில் உதயமாயிற்றென்று நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

நம்முடைய ஊனக்கண்ணினால் நேரே பார்க்க முடியாத அவ்வளவு ஒளியுள்ளதாய்ச் சூரியன் இருப்-

பதனால், அதன் பிம்பலட்சணத்தை நாம் கண்டறிய வேண்டுமாயின், மங்கலான பச்சைக் கண்ணாடி யமைந்த தூரதிருஷ்டிக்கருவியைத் துணையாக வைத்துக்கொள்வது அவசியமாகும். அதைக்கொண்டு சூரிய பிம்பத்தைப் பார்க்கையில், அதில் சில விசித்திரங்கள் தோன்றுகின்றன.

சூரிய பிம்பத்தைச் சுற்றிலும், ஒரு மகாசமுத்திரத்தைப்போல், அக்கினி சூழ்ந்திருக்கின்றது; அன்றியும், அளவிறந்த உலோகங்கள் கொடிய உஷ்ணத்தினால் உருகிய ஆவி, அந்தச் சூரிய பிம்பத்தைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. வானசாஸ்திரிகள் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு சூரிய பிம்பத்தை ஆதியில் பார்த்தகாலத்தில், அதனிடத்தே கரும்புள்ளிகள் இருப்பதைக் கண்டு வியந்தார்கள். அக் கறுப்புக் குறிகளைச் சில நாள்வரையில் தினமும் விடாது பார்த்துக்கொண்டே வந்தபோது, அவை கீழ்த்திசையி னின்றும் மேற்றிசையாகச் சுழன்று கொண்டுவந்து, சில நாள்வரையில் அவர்கள் கண்ணுக்குப் புலாப்படாமலே யிருந்து, மறுபடியும் கீழ்த் திசையில் தோன்றின. அதனால், பூமியைப்போலவே சூரியனும் சுழன்றுகொண்டே வருகிறது என்றும், அஃது அவ்வாறு ஒருமுறை சுழலுவதற்கு, நம்முடைய கணக்குப்படி, இருபத்தைந்து நாள் ஆகிறது என்றும் வானசாஸ்திர பண்டிதர்கள் கணக்கிட்டார்கள். இதை யோசித்துப் பார்க்குமிடத்து, சூரியன் நின்றநிலையிலிருந்து, எல்லாவற்றையும் தன்னிடத்து இழுத்துக்கொள்ளும் சக்தியினால், பூமி முதலிய கிரகங்கள் தன்னைச் சுற்றிவரச் செய்துகொள்வதுபோலவே, அச் சூரியனைப்போன்ற அனேக சூரியர்கள் தன்னைச்சுற்றி-

வரச் செய்துகொள்ளுகின்ற பிரமாண்டமான சூரிய பிம்பம் வேறொன்று வெளிப்பரப்பில் இருக்கவேண்டும் என்று எண்ணுவதற்கு இடம் உண்டல்லவா? அம்மத்திய சூரியன் எதுவோ? அஃது எவ்விடத்தில் இருக்கின்றதோ? அதைப்பற்றி ஒன்றும் இன்றளவும் தெரியவில்லை.

சூரிய பிம்பத்தின் மேற்புறம், மேற் கூறியபடி, அக்கினி மயமான ஒரு பெரிய சமுத்திரத்தில் முழுகியிருப்பதனாலே, நீர்மயமான சமுத்திரத்தில் பிரசண்ட மாருதத்தால் ஜலம் நெடுந்தூரம் வரையில் கொந்தளித்து எழுவதுபோல், அந்த அக்கினி சமுத்திரமும், ஒவ்வொரு காலத்தில், ஆரவாரித்து எழுகின்றது. அந்தச் சமயங்களில் சூரிய பிம்பத்திலிருந்து எழுகின்ற தீக் கொழுந்து சில நிமிஷங்களுக்குள்ளே இரண்டு லக்ஷம் மைல் தூரம்வரையில் மேலெழுந்து பாய்கின்றது. சில சமயங்களில், மேற்கண்ட அக்கினி மயமான சமுத்திரம், இடையிடையே விலகி விலகித் தோன்றுவதினால், உட்புறத்திலுள்ள சூரிய பிம்பத்தின் உண்மையான கருநிறம் நமக்குப் புலப்படுகின்றது.

பகற்காலத்தில் மேகங்கள் ஆகாயத்திலே இடைவிட்டுச் சற்றே பெயர்கையில், அந்த இடைவெளி மூலமாக, அதற்கு மேலிருக்கும் ஆகாயத்தின் நீல நிறம் நமக்குத் தோன்றுவதுபோல, மேற்கண்ட நெருப்புக் கடலின் இடைவெளியின் மூலமாகச் சூரிய பிம்பத்தின் இயற்கையான கருநிறமும் வெளியே தோன்றுகிறது. இந்த இடைவெளிகள்தாம், மேலே சொல்லப்பட்ட, கரும்புள்ளிகளாகத் தோன்றுகின்றன என்று சில வான்சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவைகளில் சில, வெகு சீக்கிரத்தில் மாறு-

கின்றன; சில இரண்டு மூன்று வாரங்கள்வரையில் அப்படியே இருக்கின்றன.

பூமியைச் சுற்றிலும் வாயு சூழ்ந்திருப்பதுபோல, சூரிய பிம்பத்தைச் சுற்றிலும் நெடுந்தூரம் வரையில் அக்கினி சொரூபமான ஒளியை வீசும் ஒருவிதப் புகை சூழ்ந்திருக்கின்றது. நாம் பகற்காலத்தில் நட்சத்திரங்களைக் காணக்கூடாததுபோல, சூரியனைச் சூழ்ந்திருக்கும் அக்கினி மயமான அப் புகையையும் நாம் சாதாரணமாகப் பார்க்கமுடியாது. ஆயினும், கிரகண காலங்களில் சந்திரபிம்பத்தினால் சூரியனது ஒளி மறைக்கப்படும்போது, அக்கினி மயமான அப்புகைகள் சூரிய பிம்பத்துக்கு இட்ட, ஜோதி மயமான மணிமகுடம்போல் காணப்படுகின்றன.

பெரிய புயலடிக்குங் காலத்தில் சமுத்திரத்திலே அலைகள் கொந்தளித்து மேலே எழுந்து கீழே விழுவதுபோல, ஒருவித அக்கினிப் பிரவாகம், சூரியபிம்பத்தைச் சூழ்ந்துகொண்டு, கொழுந்துவிட்டு நாற்புறமும் மேலே எழுவதும் அடங்குவதுமாக இருக்கிறது. இப்படிச் சூரியனைச் சுற்றிலும் இருக்கும் அக்கினிக்குக் காரணம் இன்னதென்பதை வானசாஸ்திர பண்டிதர்கள் இன்னும் சரியாய்க் கூறவில்லை. ஆயினும், அதிக பாரமான பொருள்கள் சதா சூரிய பிம்பத்தில் நாற்புறமும் அதிவேகத்துடன் வந்து வீழ்ந்துகொண்டேயிருப்பதனால், அபாரமான அக்கினி சூரிய பிம்பத்தைச் சூழ்ந்து உண்டாயிற்று என்று சில வானசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவர்கள் இங்ஙனம் கூறுவது சரியெனத்தோன்றுகிறது. ஏனெனில், அமிதமான உஷ்ணத்தை இயற்கையில் சூரியன்

அடைந்திருந்தாலும், அந்த உஷ்ணம் நாற்புறமும் வெளிப்பரப்பிலே ஆவியாய்ப் பரவிப் போய்க்கொண்டிருப்பதனால், அது நாளடைவில் குறைந்து ஒரு காலத்தில் தணிந்துபோக வேண்டிவரும். அப்படிக் குறைபட்டுக்கொண்டுவரும் உஷ்ணத்தைப் பூர்த்திசெய்துகொண்டு வருவதற்கு எவ்விதத்தி லாயினும் அனுகூலம் வேண்டுமன்றோ! ஆகையால், மேலே கூறியபடி, பொருள்கள் சதா சூரியபிம்பத்தில் வந்து விழுவதனாலே உஷ்ணம் குறைவுபடாமல் மேலும் மேலும் உண்டாய்க் கொண்டே வருகிறது என்னும் சித்தாந்தம் ஒப்பத்தக்கதென்றே தோன்றுகிறது.

ஆகாயத்தில் உள்ள அளவிறந்த நட்சத்திரங்கள் என்னும் அண்டங்களில், சூரியன், இப்பூமிக்கு அதிக சமீபமானது; ஆகையால், அது நமக்கு அவ்வளவு பெரிதாகவும் பிரகாசமுள்ளதாகவும் தோன்றுகின்றது. சூரியன், கடவுள் தன்னிடத்தே அமைத்து வைத்த பேராற்றலால்தான், இப் பூமண்டலமும் ஏனைய கிரகங்களும் தன்னைச் சூழ்ந்து வரும்படி செய்துகொண்டு, அவற்றில் வசிக்கும் சகல ஜீவவர்க்கங்களுக்கும் ஆதாரமாய் இருக்கிறது. இப் பூமண்டலத்தில் உள்ள உஷ்ணத்துக்கும் வெளிச்சத்திற்கும் சூரியனே காரணமா யிருக்கின்றது. உஷ்ணம் இராவிட்டால் ஜலம் ஆவியாகி மேலெழுந்து மேகமாவது முடியாத காரியம்; மேகமில்லாவிடத்து மழை எங்ஙனம் உண்டாகும்? மழை யில்லாதவிடத்து உலகத்துக்கு நேரிடும் அனர்த்தத்தை அளவிட்டுக் கூற ஒருவராலும் ஆகாதன்றே!

'நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்.'

'தானம் தவம் இரண்டுந் தங்கா.'

'விரிநீர் வியனுலகத்து உண்ணின் றுடற்றும்பசி.'

இதுகாறும் கூறப்பட்ட விஷயங்கள் யாவற்றையும் வானசாஸ்திரிகள் நெடுங்கால ஆராய்ச்சியினாலும், நுட்ப புத்தியினாலும் அயர்விலா ஊக்கத்துடன் கண்டு தெளிந்து, உலகத்துக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 13. இராமாநுஜர்

'சான்றோருடைத்து' என்று ஔவைப் பிராட்டியாரால் சிறப்பித்துப் புகழப்பெற்ற தொண்டை நாட்டில் காஞ்சி நகரத்திற்குக் கிழக்கில் அமைந்துள்ள ஸ்ரீபெரும்பூதூரில், சுமார் எண்ணூற்றைம்பது யாண்டுகளுக்கு முன்னர், கேசவ சோமயாஜி என்னும் அந்தணர் ஒருவர் வாழ்ந்திருந்தனர். காந்திமதியம்மை என்பவர் அவர்தம் மனைவியார். அவ்விருவரும் திருமாலடிக்குத் திறம்பாத பத்திமை வாய்ந்திருந்தனர். அவர்கள் இயற்றிய அருந்தவப்பயனாக நாளடைவில் ஓர் ஆண்மகவைப் பெற்றனர். அம்மகவின் தாய்தந்தையர் இறைவன் திருவருளை உன்னி உள்ளத்தே உவகைபூத்து வாழ்த்தினர். பன்னிரண்டாம் நாளில் பெரியார் பலரை முன்னிட்டு தம் அரும் பெறற் செல்வற்கு இளையாழ்வார் என்னும் திருநாமம் சாற்றினர்; மற்றும் தம் குலத்திற்குரிய சடங்குகளை எல்லாம் அச்செல்வனுக்குச் சீர்பெறச் செய்வித்தனர்.

பின்னர், தாய்தந்தையர் இளையாழ்வாரை அன்பு பெருகச் சீராட்டிப் பாராட்டிச் சிறப்புற வளர்த்து

வந்தனர். தக்க பருவத்தே தந்தையார் இளையாழ்வாருக்கு வித்தியாரம்பம் செய்வித்தனர். இளையாழ்வார் கல்வி கற்று, தேர்ச்சி யடைந்து, ஒழுக்கமும் உயர்குணமும் உடன்வளர வளர்ந்து வருவாராயினர். ஸ்ரீராமபிரானுக்கு அநுஜனான இலக்குமணனேபோல், இளையாழ்வார், பெரியோர்களிடத்து மிக்க பணிவு பூண்டு ஒழுகின காரணத்தால், அவரை எல்லோரும் இராமாநுஜன் என்று அழைக்கத் தலைப்பட்டனர்.

அக்காலத்தே காஞ்சீபுரத்துக்கருகில் திருப்புட்குழி என்னும் திருப்பதியில் யாதவப்பிரகாசர் என்னும் சந்நியாசி ஒருவர் தங்கிருந்தனர். அவர் வேதாந்த நூல்களை நன்கு கற்ற பாரங்கதர். இளையாழ்வார் அவரை யண்மி, வேதாந்தபாடம் கேட்க அவாவினர்.

பின்பு, அவர், தம் தந்தையார் அனுமதி பெற்று, யாதவப்பிரகாசரிடத்துச் சென்று தம் குறையைக் கூறிப் பணிந்தனர். அவரும் இராமாநுஜரை அன்புடன் தழுவி, அவருக்கு வேதாந்தம் கற்பிப்பா ராயினர். ஆசிரியரிடத்துக் கற்ற கல்வி ஒரு பங்காயின், இராமாநுஜர் அதனைத் தம் புத்திக்கூர்மையால் இருமடங்காக வளர்த்துக்கொண்டனர். அதனால், இராமாநுஜர் தம்மோடு கற்ற ஏனைய மாணாக்கரைவிட பெரிதும் சிறந்து விளங்கினர்.

பின்பு, இராமாநுஜர் வைணவசமய நூல்களைக் கற்க விரும்பினர். அப்போது ஸ்ரீரங்கத்திலிருந்த யாமுனாசாரியர் என்பவர் அதனைக் கேள்வியுற்றனர். அவர், இராமாநுஜருக்குச் சமயச் சார்பாகச் செய்ய வேண்டிய பஞ்ச சம்ஸ்காரம் முதலிய சடங்குகளையெல்லாம் தம் சீடரான பெரியநம்பிகளைக்கொண்டு

செய்வித்தனர். பெரிய நம்பிகள் அவற்றைச் சீர்பெறச் செய்த பின்னர், மற்றும் அறியவேண்டிய ரகசியார்த்தங்களைத் திருக்கோட்டியூர் நம்பியிடத்தில் கேட்டுணரும்படி அவருக்குக் கட்டளையிட்டனர்.

இராமாநுஜர் தம் ஆசிரியராகிய பெரியநம்பிகள் கட்டளை யிட்டவண்ணமே திருக்கோட்டியூரை நாடி, பலகாவதம் நடந்து சென்று, அவ்வூரைக் குறுகினர். அங்கே நம்பிகளது திருமாளிகை இருக்குமிடத்தைத் தேடி யடைந்து, நம்பிகளைக் கண்டு, மிக்கபணிவுடன் அவர்தம் பாதங்களிலே வீழ்ந்து வணங்கினர்; அதனைக் கண்ட நம்பிகள் இராமாநுஜரை வாரியெடுத்து, 'இளையாழ்வாரே, கால்கள் நோவக் கடுகி நடந்து இங்கு வந்த காரணம் யாதோ?' என்று மிக்கபரிவோடு வினவினர். அதன்மேல் இராமாநுஜர், 'அருள்வள்ளலான அண்ணல், பூர்வாசாரியர்கள் போற்றி வந்த இரகசியார்த்தங்களை அடியேனுக்கு அருளல் வேண்டும்' என்று அன்புடன் வேண்டினர். வேண்டலும், நம்பிகள் இராமாநுஜரது மன உறுதியைக் கண்டறிய எண்ணங்கொண்டு, 'யான் யாருக்கு என் சொல்லுகேன்!' என்று சொல்லிப் பாராமுகமாய் இருந்துவிட்டனர். இராமாநுஜர் அதுகண்டு, தாம் கொண்ட எண்ணம் கைகூடவில்லை யாயினும், மனச் சோர்வடையாது, 'எம்பெருமானருளால் பின்னொருகால் இவ்வெண்ணம் நிறைவேறும்' என்னும் நம்பிக்கையோடு திருவரங்கத்திற்கே திரும்பிச் சென்றனர்.

யாமுனாசாரியர் சரம தசையில், 'எமக்குப்பின் வைணவசமயத்தை வளர்த்தற்குரிய அவதாரமூர்த்தி இராமாநுஜரே' எனத் தம் சீடர்களுக்கு அறிவித்-

திருந்தனர். அன்றியும் அவர், தம் சீடர்களை நோக்கி, 'நீங்கள் எம்மிடத்துக் கேட்ட ரகஸ்யார்த்தங்களை யெல்லாம் இராமாநுஜருக்குத் தெரிவிக்கக் கடவீர்' என்று நியமனஞ் செய்திருந்தார். திருக்கோட்டியூர் நம்பிகள், பெரிய நம்பிகள் முதலிய பெரியோர்கள் யாமுனாசாரியருடைய சீடர்களே யாவர்.

திருக்கோட்டியூர் நம்பிகள், தம் ஆசாரியாராகிய யாமுனாசாரியர் தமக்கு அருளியநியமனத்தை மறந்தவ-ரல்லர். ஆயினும், உலகிலுள்ள சாமானியர்களுக்குச் சீடனது நிலையை யறிவிக்கவே இராமாநுஜரிடத்துத் திருக்கோட்டியூர் நம்பிகள் பாராமுகங் காட்டினார்.

சிலநாள் சென்றபின், இராமாநுஜர் திரும்பவும் திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளினார். அப்போதும் நம்பிகள், 'இது போழ்து எமக்கு ஒழிவில்லை, போய் வருவீர்' என்று கூறி அனுப்பிவிட்டனர்; இவ்வணமே சிறிதுகாலம் அவரை அலையச் செய்தனர். செய்தும் இராமாநுஜர் அதற்குப் பின்வாங்காது, நம்பிகள் நியமனப்படியே போவதும் வருவதுமாய் இருந்தனர்.

ஒருநாள், நம்பிகள் இராமாநுஜரை அன்போடு தம் அருகில் அழைத்து, 'உமது மனவுறுதியைக் கண்டு மெச்சினோம்! நீரே இரகசியார்த்தங்களைக் கேட்பதற்குத் தக்கவர். ஆதலால், அதி ரகசியமான மந்திரார்த்தத்தை இப்பொழுது உமக்கு உபதேசம் செய்கிறோம். நாதமுனிகள் தொடக்கமான பூர்வா-சாரியர்கள் இவைகளை அருமையினும் அருமையாகப் போற்றி வந்தனர். ஆதலால், நீர் இதனை எவர்க்கும் எளிதில் வெளியிடுதல் கூடாது. எம் வார்த்தையைக் கடந்து வெளியிடுவீராயின், உமக்கு நரகமே பிராப்தி-

யாம்.' என்று கட்டளையிட்டு, திருமந்திரார்த்தத்தை உபதேசஞ் செய்தருளினர்.

அம் மந்திரார்த்தங்களைக் கேட்ட இராமாநுஜர், உலகத்தை உய்விக்கவந்த பெருமான் ஆதலால், இம் மந்திரார்த்தத்தைப் பகிரங்கப்படுத்தற்கு ஏற்ற சமயம் எதிர்பார்த் திருந்தனர். அங்ஙனமே திருக்கோட்டியூரில் திருவிழாவும் சமீபித்தது. திருவிழாக் கண்டு சேவிப்பதற்காகப் பலர் பற்பல ஊர்களினின்றும் அங்கு வந்திருந்தனர். அதனை அறிந்த இராமாநுஜர், கோரிக்கை கைகூடுங்காலம் இதுவே என்றெண்ணினர். உடனே அவ்வூர்க் கோயிற் கோபுரத்தின்மீது ஏறினர். அங்குள்ளார் அனைவரையும் ஒருங்குசேர அழைத்தனர். தம் ஆசிரியரிடத்துக் கேட்ட மந்திரார்த்தத்தை அங்கே கூடிய அனைவரும் அறியும்படி பகிரங்கப் படுத்தினர். அதனைக் கேட்டுக்கொண் டிருந்த மாந்தர்கள், 'இன்றே மக்கட் பிறவியினால் நாம் பெறவேண்டிய பெரும் பேற்றைப் பெற்றனம்! இப்புண்ணியமூர்த்தியால் உலகம் உய்ந்தது! இவரே எம்மையாளும் இறைவர்' என்றுகூறி எல்லாரும் அவரை ஏத்திப் பணிவாராயினர்.

இச் செய்தியைக் கேட்ட நம்பிகள், இராமாநுஜரை யழைத்து, 'நீர் இது செய்தல் தகுமோ? எம் கட்டளை மீறினர்க்கு உறுங்கதி இன்னதென அறியீரோ?' என்றனர். 'அடியேனை ஆட்கொண்டருளிய அண்ணலே, தேவரீர் ஆணையைக் கடந்த அடியேனுக்கு நரகமே யன்றி வேறோர் கதியும் உளதாமோ?' என்றனர் இராமாநுஜர். 'அதனை அறிந்திருந்தும் நீர் இதுசெய்யத் தலைப்பட்டதற்குக் காரணம் யாதோ?'

என்றார் ஆசிரியர். 'அடிகளே, இச் செய்கையால் அடியேன் ஒருவனே நரகம் புகுவேன்; ஆயினும் ஆகுக, இங்கேகூடிய மாந்தர் அனைவரும் உமது திருவடி பலத்தால் புகுவது திருநாடேயன்றோ? அதுபற்றியே இது செய்யத் துணிந்தேன்' என்றார் யதிராஜர்.

இதுகேட்ட நம்பிகள் இராமாநுஜரைத் தம் மார்புறத் தழுவிக்கொண்டு, அன்பு பெருக, 'எம் பெருமானாரே, நீர்கொண்ட இத்தண்ணளி பெரிதும் போற்றத்தக்கதாகும்! இதுகாறும் எமக்கு வாய்த்திலதே இத்தகைமை! நீரே சீவகாருண்யத்தை வளர்க்கும் செழு முகில்! இதுகாறும் வைணவமதம் "பரம வைதீக சித்தாந்தம்" என்னும் பெயர் பெற்று இருந்தது. இனி, இவ்வைணவ சமயம் "இராமாநுஜ தரிசனம்" என்னும் பெயர் பெற்று ஓங்குவதாக' என்று ஆணையிட்டு, மற்றுமுள்ள தம் சீடர்களுக்கும், இனி, 'அங்ஙனமே கூறுங்கள்' என்று கட்டளையிட்டருளினர். அதுமுதல் வைணவசமயத்திற்கு, 'இராமாநுஜ தரிசனம்' என்னும் பெயர் வழங்கலாயிற்று.

## 14. யானையைக் கண்ட குருடர்

கண்ணிலாக் குருடர் ஐவர்
கரந்தனில் கழிகள் பற்றி
மண்ணினில் தடவிச் சென்ருேர்
மரத்துறு நிழலில் தங்கி
எண்ணிய எண்ணி யாங்கே
இரைச்சலிட் டுரைகள் கூறி
நண்ணிய மனிதர் கூடி
நகைத்திட இருந்தார் ஓர்நாள். (1)

அப்பொழு தங்கி ருந்த
அறிஞரில் ஒருவன் ஆகா
இப்பொழு திங்கண் கோயில்
யானையும் வருமால் என்ன
கப்பிய குருடர் தாமும்
கருத்தினில் வியப்புக் கொண்டே
எப்படி யறிந்தீர் நீவிர்
யானையின் வருகை என்ருர். (2)

ஆனை தான் பின்னே வந்தால்
அதன்மணி யோசை முன்னே
தானுறும் என்னும் வார்த்தை
தன்னைநீர் கேட்டி லீரோ
ஆனநற் பார்வை யற்ருல்
அருஞ்செவிப் புலனும் அற்றுப்
போனது முண்டோ சொல்லீர்
புந்தியில் நீரர் மாதோ. (3)

என்றலும் பிறப்பி லேயே
    எய்திய குருட ராஞேர்
நன்றிது யாங்கள் இன்று
    நான்றவாய்க் கரியைக் காண
ஒன்றிய விருப்புக் கொண்டோம்
    உம்பலிங் குற்ற தாயின்
நின்றிடச் செய்மின் யாங்கள்
    நெருங்கியே தடவிக் காண்போம். (4)

என்னவே அங்கி ருந்தோர்
    இஃதொரு புதுமை யாகும்
பின்னரும் இவர்கள் செய்யும்
    பேதைமைத் தொழிலைக் காண்போம்
என்னவே யிருந்தார் ஆங்கண்
    யானையும் எய்தப் பாகன்
தன்னிடம் இதனைக் கூறத்
    தந்தியை நிறுத்தி நின்ருன். (5)

அந்தகர் நகர்ந்து வந்தங்
    கானையைக் காணு மாற்ருல்
அந்தமாய் ஒருவன் கையை
    ஆசையால் ஒருவன் காலை
விந்தையால் ஒருவன் காதை
    விளங்கிட ஒருவன் வாலைச்
சொந்தமாய் ஒருவன் பக்கத்
    தோலினைத் தடவிப் பார்த்தார். (6)

யானையைக் கண்டோம் கண்டோம்
    என்னலும் யானைப் பாகன்
ஆனதன் வழியே சென்ருன்
    அங்குளோர் அதிச யிப்பத்

தேனமர் மரத்தின் கீழால்
சேர்ந்தவக் குருடர் தம்முள்
ஆனையைக் கண்ட காட்சி
அனைத்தையும் பேச லுற்றார். (7)

துதிக்கையைக் கண்டோன் யானை
உலக்கைபோல் தோன்றிற் றென்றான்
பதித்தவால் கண்டோன் யானை
பகருமோர் துடைப்பம் என்றான்
மதித்தகால் கண்டோன் யானை
மரவுரல் போன்ற தென்றான்
உதித்தநற் காதைக் கண்டோன்
உம்பலோர் முறமே என்றான். (8)

பக்கமே தடவிப் பார்த்தோன்
பகருவேன் நீவிர் அந்தோ
மிக்கதோர் யானை தன்னை
மெய்யுற அறிந்தி ரல்லீர்
தக்கதோர் வகையால் யானை
தந்தியை முழுதுங் கண்டேன்
ஒக்கவே சொல்லின் யானை
உயர்சுவர் ஒப்ப தென்றான். (9)

இன்னணம் ஐவர் தாமும்
இயைபிலா உரைகள் கூறிப்
பின்னிய வாதிட் டங்குப்
பிணங்கியே அரற்ற லானார்
மன்னிய அறிவு சான்ற
மனிதனங் கவர்கள் தம்மை
என்னிது கண்ணில் லாத
ஏழையீர் கேண்மின் என்றான். (10)

தனித்தனி நீவிர் கூறும்
சான்றுகள் உண்மை யேயாம்
தனித்தனி கண்ட வெல்லாம்
தந்தியின் உடம்பி லுற்ற
தனித்தனி உறுப்பே யாகும்
சார்முழு வுருவ மன்றும்
தனித்தனி யான வற்றை
சரிவரப் பொருத்திக் காண்மின். (11)

அனைத்தையும் பொருத்திக் காணின்
ஆனையின் உருவைக் காண்பீர்
மனத்தினில் உவகை கொள்வீர்
மற்றொன்று சொல்லக் கேண்மின்
எனைத்தையும் முற்றும் ஆய்ந்திங்
கெய்தலே அறிவ தாகும்
தினைத்துணை யாகத் தேர்தல்
சித்தியைத் தாரா தன்றே. (12)

P31-8
N25
77606

## 15. நீதிநெறி விளக்கம்

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச் — சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு. (1)

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும் — உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து. (2)

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் — மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம். (3)

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம் — முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். (4)

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க — சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். (5)

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு — பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். (6)

## ஸி. குமாரஸாமி நாயுடு ஸன்ஸ்

### மேரி ராணி வாசக புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| முதல் வகுப்பு ... ... ... | 0 | 2 | 0 |
| இரண்டாம் வகுப்பு ... ... ... | 0 | 3 | 0 |
| மூன்றாம் வகுப்பு ... ... ... | 0 | 3 | 6 |
| நான்காம் வகுப்பு ... ... ... | 0 | 4 | 0 |
| ஐந்தாம் வகுப்பு ... ... ... | 0 | 6 | 0 |

### சொற்றொடர் ஆக்கம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் ... ... ... | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் ... ... ... | 0 | 3 | 0 |
| மூன்றாம் புத்தகம் ... ... ... | 0 | 6 | 0 |

### இலக்கணங்கள்

| | | | |
|---|---|---|---|
| சிற்றிலக்கண வினா விடை I-4-ஆம் வகுப்பு ... | 0 | 3 | 0 |
| சிற்றிலக்கணம்—II-முதல் பாரத்திற்கு ... | 0 | 4 | 6 |
| சிற்றிலக்கணம்—III-இரண்டாம் பாரத்திற்கு | 0 | 6 | 0 |
| சிற்றிலக்கணம்—IV-மூன்றாம் பாரத்திற்கு ... | 0 | 8 | 0 |

### மூன்றாம் வகுப்புப் பூகோளங்கள்

| | | | |
|---|---|---|---|
| சென்னபட்டணம் ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| செங்கற்பட்டு ஜில்லா ... ... ... | 0 | 6 | 0 |
| தென் ஆற்காடு ஜில்லா ... ... | 0 | 6 | 0 |
| கோயமுத்தூர் ஜில்லா ... ... ... | 0 | 6 | 0 |
| தஞ்சாவூர் ஜில்லா ... ... ... | 0 | 5 | 0 |
| மதுரை ஜில்லா ... ... ... | 0 | 5 | 0 |
| இராமநாதபுரம் ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| திருநெல்வேலி ஜில்லா ... ... ... | 0 | 6 | 0 |
| சேலம் ஜில்லா ... ... ... | 0 | 6 | 0 |
| வட ஆற்காடு ஜில்லா ... ... ... | 0 | 6 | 0 |


Caxton Press, Madras.